விலை ரூபா 2-00

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

பக்கங்கள் 16

# ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 பங்குனி 5 ஐ. அதி 14 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 18—3—84 இதழ் 36

## யாழ்நகரில் 6 இளைஞர்களை இராணுவம் கைது செய்தது!

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் ஆறு இளைஞர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் ஜும்மா மொஸ்க் லேனில் உள்ள உணவகத்தில் நான்கு இளைஞரும் நாவலர் வீதியிலுள்ள அச்சகத்தில் மற்றுமொரு இளைஞரும் இதில் அடங்குவர். [மா]

# ‘ஜூலை கலவரம் போதையில் நடந்த பெரும் வெறியாட்டம்!’

## வெளிநாட்டுச் சக்திகள் குறித்துப் பிரதமர் எச்சரிக்கை

(கொழும்பு)

“போதைவஸ்த்துக்களைப் பயன்படுத்தி, இனப்பூசல்களை ஏற்படுத்தி, இந்த நாட்டை அழித்தொழிக்க சில வெளிநாட்டுச் சக்திகள் திட்டமிட்டுள்ளன. ஜூலை கலவரங்கள் இந்தப் போதை வஸ்துக்களை உட்கொண்ட வேகத்தில் நடாத்தப்பட்ட வெறியாட்டமென்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன” என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுப் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டார்.

நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் மாதிரிக் கிராமத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலே இதனைக் கூறினார் -

பிரதமர் மேலும் சொன்னார்:-

“திட்டமிட்டு இந்த நாட்டை அழிப்பதே வெளிநாடுகள் சிலவற்றின் திட்டம். அந்த வெளிநாடுகள் போதை வஸ்த்துக்களை நமது நாட்டுக்கு அறிமுகம் செய்து அதன் மூலம் தமது காரியத்தைச் சாதிக்க முயற்சிக்கிறது. போதை வஸ்த்துக்களை ஆயுதமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

“இந்தப் போதை வஸ்த்துக்களை உட்கொண்டவர்கள்தான் ஜூலைக்கலவரத்தினை நடத்தினார்கள். கோடிக்கணக்கான நஷ்டத்தை ஏற்படுத்தினார்கள். இந்த விஷயம் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பாடசாலைகளுக்கும் இது பரவியுள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்தில் சித்த ஆயுள்வேத மருத்துவபீடம் ஆரம்பம்

# 15 வருட முயற்சி கைகூடியுள்ளது!

(சாவகச்சேரி)

“சுமார் 15 வருடகாலமாக நாமெல்லோரும் ஒருமித்திணைந்து எடுத்துவந்த முயற்சி இன்று தான் கைகூடியுள்ளது” என்று நேற்றுமுன்தினம் மைதடியில் யாழ் பல்கலைக்கழகத்தின் சித்த ஆயுள்வேத மருத்துவபீடம் சம்பிரதாயப்படி ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியில் உரையாற்றிய சித்த ஆயுள்வேத சம்மேளனத்தின் உறுப்பினர் திரு. இ. பி இராசையா மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

விழாவில் யாழ். பல்கலைக்கழகத்தின் சித்தஆயுள்வேத விரிவுரையாளர்கள், சித்த ஆயுள்வேத சம்மேளனத்தின் உறுப்பினர்கள் உட்பட, பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் திரு. எஸ். முருகவேளும்,

(16-ம் பக்கம் பார்க்க)

## ரோட்டரி கவர்னர் வருகை

(யாழ்ப்பாணம்)

ரோட்டரி ஆளுநர் திரு. பி. எம். கதிரேசன் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

திரு. கதிரேசன், யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கியிருப்பார். யாழ்ப்பாண ரோட்டரிக்கழக அங்கத்தவர்களைச் சந்திப்பதுடன் யாழ் மாவட்டத்தின் பிரதான பிரமுகர்களையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

யாழ் ரோட்டரிக் கழகம். அகதிகள் புனர்வாழ்வு முகாம்களுக்கும் மற்றும் சமூகசேவை ஸ்தாபனங்கள், ஆகியவற்றுக்கும் ஆளுநர் திரு. கதிரேசனை அழைத்துச் செல்லவிருக்கின்றது. அன்பளிப்பு வழங்கும் வைபவங்கள், சமூக சேவைத் திட்ட அங்குரார்ப்பணங்கள் ஆகியன இவரின் வருகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (வ)

## ★ வவனியாவில் நேற்று — 50பேர்மீது சி.ஐ.டி. விசாரணை

(வவனியா)

கடந்த புதன்கிழமை வவனியா நகரில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சுடப்பட்டதின் எதிரொலியாக நேற்று சுமார் 50 பேர்வரை இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்தை அண்மித்துள்ள கடைகளின் வர்த்தகர்கள்

[16-ம் பக்கம் பார்க்க]


## அன்னையின் ஆலயத்திற்கு உங்கள் உதவி



யாழ் வைத்தியசாலையின் மத்தியில் அமைந்த அன்னை ஆரோக்கிய நாயகியின் ஆலயம்; அற்புதங்கள் நலம் புரியும் அன்னை வேளாங்கண்ணியின் உறைவிடம் அவள் வரம்பெற்று அனைவரும் சுகம் பெற்று நன்றிநவில அவள் பாதம் சரணம் என்று வரும் பக்தர்களை அரவணைக்கும் அவள் புனித ஆலயம்.

**இன்று**

இடிந்த சுவருடன், எப்போ விழுமோ வென்ற ஆபத்தான பரிதாபத்துக் குரிய நிலையில் உள்ளது.

அன்புப் பக்தர்களே! உபகாரிகளே!

உங்கள் நிதி உதவியாலும் கட்டடப் பொருளுதவியாலும் இக்குறையைத் தீர்க்க முன்வரமாட்டீர்களா? அருள்களைப் பொழியும் அன்னையின் ஆலயக் குறைபிணைத் தீர்க்க உங்கள் கரங்களை நீட்டமாட்டீர்களா? நன்றியுடன் உதவியை வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டியது:

தவத்திரு. பிரான்சிஸ் டானியல் அ. ம. தி.
(வைத்தியசாலை ஆன்மகுரு)
“தொடர்பகம்”
657, மருத்துவமனைச்சாலை—யாழ்ப்பாணம்.

(1370)


## நெல்லியடியில் கொள்ளை முயற்சிதோல்வி
# துப்பாக்கி இளைஞரிடமிருந்து முகாமையாளர் தப்பினர்!

(கரவெட்டி நிருபர் எம். வரதன்)

கட்டைவேலி — நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று நடைபெறவிருந்த கொள்ளை சங்க முகாமையாளரின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் சாரம் அணிந்த இரு துப்பாக்கி இளைஞர்கள் காரில் வந்ததாகவும், இருவர் முகாமையாளர் அறையை நோக்கிச் சென்றதாகவும், இளைஞர்கள் கண்டதும் சந்தேகம் கொண்ட சங்க முகாமையாளர் அறையைப் பூட்டிவிட்டு உள்ளே இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கி இளைஞர்கள் கதவைத் திறக்கும்படி முகாமையாளரைக் கேட்டபொழுது கதவின் திறப்பு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக சங்க முகாமையாளர் கூறினார்.

உடனே முகாமையாளரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

குண்டுகள் அறையின் கண்ணாடியை துளைத்துக் கொண்டு முகாமையாளரின் தலைக்கு மேலாகச் சென்றது. முகாமையாளர் எதுவித காயமுமின்றி தப்பிக் கொண்டார்.

“நாங்கள் இதுபற்றி விசாரித்து அறிவோம்” எனக் கூறிவிட்டு சங்கத்தை விட்டு வெளியேறினார்கள்.

வந்த காரில் ஏறி ‘ஸ்ராட்’ செய்தபொழுது அது இயங்கவில்லை என்றும், உடனே அருகிலுள்ள பெற்றோல் நிலையத்திலிருந்த கார் ஒன்றினை கடத்திக் கொண்டு தப்பிஓடினர்.

பதினைந்து நிமிடங்களுக்குள் இவையாவும் நடந்து முடிந்தன. இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சதா கிறீம் ஹவுஸ் கோட்டடி சாவகச்சேரி. 1426

சாவகச்சேரி தபாலகத்துக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற கிணற்றுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். கா. விமலநாதன், 'விமல வாசா', ஆலங்கட்டி ஒழுங்கை, சாவகச்சேரி. 1807

மீசாலை புகையிரத ஸ்டேஷனிற்கு அருகாமையில் கண்டி றோட்டில் 9 பரப்புக்காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- தி. வெற்றிவேலுப்பிள்ளை உதவி ஆசிரியர் "ஈழநாடு", யாழ்ப்பாணம். 1839

தெல்லிப்பளை ஸ்டேஷனிற்கு அருகாமையில் றிஜிஸ்ரூர் ஒழுங்கையில் வீட்டுடன் 4 பரப்புக்காணி சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சாம் தேவதாசன் றிஜிஸ்ரூர் ஒழுங்கை, தெல்லிப்பளை. 1388

பாலை, முதிரை, தீராந்தி 4" X 3" - 5" X3" - 5"X4" 9" X 3" 6"X2" 7"X2" முதிரை - மகோகனி மற்றும் இனங்கள் பலகைவகையும் சில்லறை விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் விபகுலநிப்பிள்ளை 14/1 பிளச்சன் லேன், கண்டிக்குளி 1392

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில், சாவகச்சேரி சங்கானை பிரதான வீதி ஓரமாக நகரசபை எல்லைக்குள் பனை, தென்னை, மாமரங்கள் அடங்கிய 30 பரப்பு உறுதியான காணி விற்பனைக்குண்டு காணி ஒருமித்தோ அல்லது இருதுண்டுகளாகவோ வீதி முகப்புடன் பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: சி. சிவகுருநாதன் "சிவஸ்தான்" மீசாலை வடக்கு. கொடிகாமம் அல்லது சி. சிவகுருநாதன் மின்பொறியியலாளர் அலுவலகம் மாநகரசபை, யாழ்ப்பாணம். 1413

Morris Oxford — 7 ஸ்ரீ தொடரிலக்க கார் நல்ல நிலையில் "Std Engine" உடன் விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு பார்வையிடலாம் K. K. விஜயஇந்திரா, 45, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். 1409

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அருகிலுள்ள 20 பரப்பு நெற்காணி (10 மேட்டு நிலம்) கிணற்றுப் பங்கு உண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 1321 கே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் 1321

சாவகச்சேரி சந்தையிலிருந்து 75 யார் தூரத்தில் சகல வசதிகளுடனும் கூடிய கடை ஒன்றுவாடகைக்குண்டு Tuition க்கும் உகந்தது. நேரில் சந்திக்கவும். 22ம் திகதிக்குப்பின்னர் அரிராசா, கயிலாசபிள்ளை வீதி, சாவகச்சேரி. 1446

இறைச்சிக் கோழிகள் [Broiler] விற்பனைக்குண்டு. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அணுகவும்: இனுவில் அருகு ஜூபிமா கெஸ்ட் லேன் [செம்மா தெரு] யாழ்ப்பாணம். 1441

தெல்லிப்பழையில் வண்டிக்கு [illegible] முன்னால் [illegible] விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க. [illegible] வசந்தபுரி, [illegible] றோட், தெல்லிப்பழை 1430

## விற்பனைக்கு

சுண்டிக்குளியில் ஆசீர்வாதம் அச்சகத்துக்கு அருகாமையில் 2½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இரத்தினம் 28/2 கண்டி வீதி, சுண்டிக்குளி. 1387

புலோலி மேற்கில் வடஇந்து மகளிர் கல்லூரிக்கும் கிராமக்கோட்டுச் சந்திக்கும் மிக அண்மையில் பிரதான வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் வீடு கட்டுவதற்கு உகந்த [மிகநல்ல சுற்றுடலில்] பிரதான ஒழுங்கை முகப்பாகவுள்ள 2½ பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. கந்தசாமி J P. சங்குவேலி, மானிப்பாய். 1424

மானிப்பாய் உடுவில் வீதியில் 4¼ பரப்புக்காணி றோட்டு முகப்புடன் ஆஸ்பத்திரிச்சந்தியில் இருந்து 200 யாரும், 6 பாடசாலைகளுக்கு ½ மைல் தூரத்திற்குள்ளும் போக்குவரத்து சேவை வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விரைவில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: தொலைபேசி இல: 24007 ம. மேதர் 68. உடுவில் வீதி, மானிப்பாய். 1364

யாழ்ப்பாணம் கண்டிக்குளி சோமசுந்தரம் அவனியூவில் ¾ (முக்கால்) பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரம்: சோ. நாகலிங்கம் 26/8 சோமசுந்தரம் அவனியூ சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1427

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அடுத்ததாகவும் ஆச்சி ஒழுங்கையின் முகப்பாகவும் கொண்ட 8 பரப்பு விஸ்தீரணமுள்ள கட்டடம் அமைக்கக் கூடிய காணி விற்பனைக்குண்டு. P. C. P. ஞானதுரை கிறிஸ்மஸ் வளவு, உடுவில். 1396

Broiler இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு உயிர்நிறை ருத்தல் ரூபா 16/- தொடர்பு: R. செங்கோடன் 204, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 1429

கொக்குவிலில் 3½ பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ தோட்டம் செய்வதற்கோ உகந்தது. தொடர்பு: 160 பிரதான வீதி, (Main Street) யாழ்ப்பாணம். 1437

## கழிவு எண்ணெய் விற்பனை

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின், கோண்டாவில் சாலையில் 6090 லீற்றர் கழிவு எண்ணெய்யும் 1470 லீற்றர் தண்ணீருடன் கலந்த கழிவு எண்ணெய்யும் விற்பனைக்கு உண்டு. கொள்வனவுசெய்ய விரும்புவோர் ஒரு லீற்றர் கொள்வனவுசெய்யும் விலையினைக் குறித்து

தலைவர்,
(கேள்விச் சபை)
வடபிராந்திய
போக்குவரத்துச் சபை,
பலாலி வீதி,
கோண்டாவில்.

என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால்மூலம் 30-03-1984ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சி. கனகரத்தினம்
தலைவர்/முகாமைத்துவப்பணிப்பாளர்,
வடபிராந்திய
போக்குவரத்துச் சபை:
கோண்டாவில்.
1847

## சேவை

Appropriate Technology பொருத்தமான தொழில் நுட்பங்கள் பற்றியும் சிறுதொழில்கள் பற்றிய பல புத்தகங்கள் பார்வைக்கு இருக்கின்றன. தொழில்கள் தொடங்குவதிலும் தொழில் நுட்ப கல்வியில் ஆர்வமுள்ளவர்களும் தொடர்பு கொள்க இலங்கைநாதன் 121 பருத்தித்துறை வீதி, நல்லூர். 1401

Biogas - உயிர்வாயுவை இரண்டிற்கு மேற்பட்ட மாடுகள் வைத்திருப்பவர்கள் வீட்டில் தயாரித்து சமையல் தேவைக்கு எரிபொருளாக உபயோகிக்கலாம். விரும்புபவர்கள் உதவிக்கு தொடர்பு கொள்ளவும் இலங்கைநாதன் 121, பருத்தித்துறை வீதி, நல்லூர். 1400

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

### கேள்விப்பத்திரம்

நாரந்தனை பிரதிமுந்நாறு (4300 வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் "பொது முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம் ஊர்காவற்றுறை" என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 28-03-84ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 21-03-84ந் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பகாரர் ரூபா 750/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
18-03-84.
ஊர்காவற்றுறை. 1360

### 1ம் வருட நிறைவு நினைவு



சேவிஸ் யோசவ்
[ஆசிரியர்
புனித பீற்றர்ஸ் கல்லூரி
கொழும்பு]
மலர்வு : 25-10-33
உதிர்வு : 18-03-83

"நிலையவான்
பிரிந்திட்ட புகினும்-உன்
நினைவை யாம் மறந்திடப்
போமோ? - இவ்
வுலகை விட்டுயிர்நீத்து-
ஒரு
ஆண்டு பலவாய்
செலினும் - தந்தாயுன்
உறவை நாம்
மறவோம்! மறவோம்!!

அன்பு மனைவியும்
பிள்ளைகளும்,
உறவினர்களும்.

10, புனித அந்தோனியார்
வீதி,
பாசையூர்,
யாழ்ப்பாணம்.
1389

## தேவை

பலசரக்கு மொத்தவியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை தகுந்த சான்றுகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். S V. கறுப்பையா அன்சன்ஸ், 28; மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 1447

மணமகள் தேவை படித்த விஸ்வகுல 31 வயது நிரம்பிய தனியார்துறையில் தொழில் புரிபவருக்கு மணமகள்தேவை சாதி, மதம் கவனிக்கப்படமாட்டாது முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1444, கே/பா. ஈழநாடு. யாழ்ப்பாணம். 1444

## வாடகைக்கு

கல்வி கற்கும் மாணவர்களுக்கு உணவு வசதியுடன் அறைகள் வாடகைக்குண்டு. தனிப்பட்ட உணவு வசதியும் மாதாந்த அடிப்படையில் ஒழுங்கு செய்து தரப்படும். விபரங்கட்கு; கிருஷ்ணா இல; 1 பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1438

ஒரு பாம்பு-ரொம்ப நாளாக கூட்டாக சேர்ந்து ஒரு படம் எடுக்க ஆசை,
மற்றைய பாம்பு- அருள் நாங்கள் தனித்தனியா படம் எடுக்க ஆரம்பித்தாலே எல்லோரும் ஒட்டம்பிடிக்கிறார்களே.
— கிரி.

## விற்பனைக்கு

அச்சுவேலி சந்தியிலிருந்து 150 யார் தூரத்தில் சன்னதி றோட்டில் இராஜேஸ்வரி வித்தியாசாலைக்கு அருகாமையில் 18½ பரப்பு முந்திரிகைச் செய்கைக்கு ஏற்ற காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சி பாலகிருஷ்ணன், சட்டத்தரணி தபால்நிலைய முன்பாக அச்சுவேலி. 1445

## ஆட்கள் உடன் தேவை

தையல் வேலையில் நல்ல அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை, 21-ந் திகதி முதல் 23-ந் திகதிவரை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2மணி வரை சான்றுப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

### அன்ரனி காமன்ஸ்

"ராஜஸ்டான்"
தபால் நிலைய அருகாமை
கரவெட்டி. 1430

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்

### பதவி வெற்றிடம் - லொறிச் சாரதி

மேற்படி கூட்டுறவுச் சங்கத்தில் லொறிச்சாரதிக்கான பதவிக்கு நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பப்பத்திரங்கள் 31 3 84-ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர். புங் - நயி பல. நோ கூ. சங்கம், புங்குடுதீவு. என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்
புங்.—நயி. பல. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.
1428

### உடன் விற்பனைக்கு

24 ஸ்ரீ 6225 மொறிஸ் லொறி
29ஸ்ரீ 6844 இசுசு ஈ. எல். எவ். வான்

மேற்குறிப்பிடப்பட்டவைக்கான கேள்வி விண்ணப்பங்கள் 28-3-1984-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விபரங்களுக்கு,
சட்ட அதிகாரி
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன்: 23680

### கடைகள் வாடகைக்கு

யாழ் மணிக்கூட்டு வீதியில் யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கத்திற்கும் பவர்ஸ் நிறுவனத்திற்கும் இடையில் 2000 சதுர அடியில் கடைகளுடன் கூடிய மாடிக்கட்டடம் ஒன்று அமைப்பதற்கு வரைபடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் நிறுத்திவைப்பதற்கேற்ற வசதிகளுடைய கட்டடம் 84 ம் ஆண்டு அக்டோபர் மாதமளவில் முடிவடையும். கடைகள் தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும்.

ஜே. எம். சபாரெட்ணம்
மெர்கன்டைல்
கிறெடிற் லிமிட்.
11/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
1416

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

குடும்ப நிலையிலும் சமூக நிலையிலும் பெண்மை முக்கியமானதென்பதை உணர்ந்த தமிழரும் யப்பானியரும் ஒரே விதமான நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளமை பண்பாட்டு நிலையிலே ஏதோ ஒரு ஒற்றுமை

தமிழர் - யாப்பானியர் வாழ்வியலில் பெண்மை | 2

# உலகின் முதல்நவீனம் யப்பானில் தோன்றியது முரசாகி என்ற பெண் இந்நாவலை எழுதினர்

இருப்பதையே காட்டுகின்றது. யப்பானியர் வாழ்வியலில் பெண்மை சிறப்பிக்கப்படுவதை இன்றும் பாவரும் உணரும் வகையிலே அங்கு 'ஹினமற்சுறிஇ' என்னும் விழா கொண்டாடப்படுகின்றது. மார்ச் மாதம் 3ம் திகதி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. யப்பானியரது மிகப்பழைய வழிபாடான சிந்தோ வழிபாடு காலமுதலாக இவ்விழா நடைமுறையில் இருந்து வருகின்றது. பெண்களை முக்கிய உறுப்பினராக்கி இவ்விழா நடைபெறுகின்றது. இதற்கெனச் சிறப்பான நடைமுறையும் ஒன்றுண்டு. அலங்கரிக்கப்பட்ட படிக்கட்டுகள் கொண்ட மரப்பீடமொன்றிலே பெண்களும் பெண்குழந்தைகளும் சேர்ந்து பாவைகளை ஒழுங்காக அடுக்கிவைப்பர். பீடத்தைச் சுற்றிக் கடதாசியினால் செய்யப்பட்ட தோரணம் கட்டப்படும். பீடத்தின் மேல்பகுதியிலே சிவப்புப் பட்டுத்துணி விரிக்கப்படும். அதன் பின்னர் அவற்றின்மேல் பாவைகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்படும். மேல்தட்டிலே தெய்வங்களின் உருவங்களும் அடுத்த தட்டிலே அரசர்களது உருவங்கள், முக்கியமான மனிதர்களின் உருவங்கள், மிருகங்கள் என்பவற்றின் உருவச்சிலைகளும் அடுக்கப்படும். ஒரு ஒழுங்கு முறையிலே அவை அடுக்கப்படவேண்டும் என்ற நியதி உண்டு. பீடத்தின் அடித்தட்டிலே சிவப்பு அரிசியிலே சமைத்த சோற்றிலே செய்யப்பட்ட தளிகைகளும் வைக்கப்படும். அன்று பெண் குழந்தைகளுக்கு விசேட அலங்காரங்கள் செய்வர். அக்குழந்தைகள் அவ்வலங்காரத்தோடு உறவினர்வீடுகளுக்குச் சென்று வருவர். விசேட உணவாக 'ஹிஷிமொச்சி' (வண்ணமிடப்பட்ட சோற்றுருண்டைகள்) "அமசக்கே" (அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்டபானம்) என்பன எல்லாவீடுகளிலும் அன்று இடம்பெறும்.

இந்த விழா தமிழர்களது நவராத்திரி விழாவோடு தொடர்புடையதாக உள்ளது. தென்னிந்தியாவிலே நவராத்திரியின்போது பல்வேறு வகையான பாவைகளை அடுக்கி அலங்காரம் செய்வர். அதனைக் "கொலுவைத்தல்" என்பர். பெண் குழந்தைகளுக்கு விசேட அலங்காரங்கள் செய்வர். வீட்டில் வாழும் பெண் தன் திறமைகள் எல்லோரையும் அவரவர்க்கேற்ற நிலையிலே நிறுத்தித் தன் கடமைகளைச் செய்வாள். அவளே ஒரு நாளின் ஆரம்பத்தையும் முடிவையும் கணக்கிட்டுச் செயற்படுகின்றாள். யப்பானில் பெண்ணே அதிகாலையில் எழுந்து சூரியனை முதலில் வணங்கிக் கடமைகளை ஆரம்பித்து வைக்கிறாள். இரவிலும் கடைசியாக நித்திரைக்குச் செல்கிறாள். தமிழர் பண்பாட்டிலும் இவ்வாறு பெண் பின் தூங்கி முன்னெழும் வழக்கமே மரபாயுள்ளது.

## மேலைநாட்டுக்குரல் இங்கும் கேட்கிறது

பெண் ஓய்வின்றி உழைப்பதால் அடிமைவாழ்வு நடத்துகிறாள் என்று பலர் இன்று கருதி அவள் அந்நிலையிலிருந்து விடுதலை பெறவேண்டுமெனக் குரல் கொடுகின்றனர். மேலைத்தேசத்திலே எழுந்த இக்கக்குரல் இன்று கீழைத்தேசங்களிலும் கேட்க ஆரம்பித்துவிட்டது. தமிழரிடையேயும் கூடக் கேட்கிறது. பெண்மையைத் தெய்வமாக வழிபட்ட தமிழர் பண்பாடு கிலைந்து விட்டமையாலேயே பெண் விடுதலைபற்றிய சிந்தனைகள் தமிழர் சமூகத்திலும் தோன்றியுள்ளன. மேலைநாட்டுப் பண்பாட்டிலே புதைந்து தமது வாழ்வியலை மறந்துவிட்டவர்கள் மத்தியில்தான் இச்சிந்தனையும் வலுப்பெற்றுவருகிறது. மேலைத்தேயத்தவர் பெண்மையைச் சிறப்பிக்க இப்போதுதான் வழியைத் தேடுகின்றனர். குடும்பநிலையிலே பெண்மை அங்கு போற்றப்படாமையால் சமூகநிலையிலும் இழிவுபட்டு நிற்கிறது. அந்த இழிவு நிலையைப்போக்க மரபான நல்வழி அவர்கள் வாழ்வியலில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. அங்கு விஞ்ஞானத்தின் வேகத்தினால் தாய்மை உணர்வுகளும் பண்புகளும் சிதைக்கப்பட்டுவிட்டன. இந்நிலையிலே பெண்ணைப் போற்றி வாழவும் வழியில்லாது போய் விட்டது.

தமிழரும் யப்பானியரும் பெண்மையைப் போற்றி வாழ்ந்த மரபுடையவர்கள். பெண்களுக்கு என ஒன்பது இரவுகளை ஒதுக்கியவர் தமிழர் பெண்மைக்கென ஒரு நாள் குறித்து விழாக்கொண்டாடுபவர்கள் யப்பானியர் எனவே இவ்விரு இனத்தவரும் தமது பழைமையை எண்ணி வாழ்வதே போதும். முன்னர் தாம் செயற்படுத்திய நடைமுறைகளின் நோக்கத்தினை அறிந்தால் போதும் தனி மனிதன் குடும்பம், சமூகம் என்ற நிலை நடைமுறைகளை நோக்கும் போது பெண்மை பற்றி இரு இனத்தவரிடையேயுமிருந்த ஒற்றுமையான சிந்தனையையும் நன்குணர முடிகின்றது.

## பெண் பூப்படைதலும் தாய்மையடைதலும் உயர்ந்த நிலைகளாக யாப்பானியரும் தமிழர்களும் பேணுகின்றனர்

## பெண்ணின் முக்கிய இருநிலைகள்

பெண்மையின் வளர்ச்சிநிலையிலே இருமுக்கிய கட்டங்கள் சிறப்புப்பெற்றவை ஒன்று பூப்படைதல், மற்றது தாய்மையடைதல். இயற்கை நிலையிலே பெண்பெற்ற இவ்விரு நிலைகளும் மனிதவாழ்வியலின் முக்கிய நிகழ்ச்சிகளாகத் தமிழர்களாலும் யப்பானியர்களாலும் கருதப்பட்டுள்ளன. பெண் பூப்படைந்த போது யப்பானியர் அவி பருப்பைச் சேர்த்து பொங்கல் செய்து கனிலே தமிழர்-யப்பானியர் வாழ்வில் பெண்மை சம்பந்தமாகக் கடைப்பிடிக்கப்பட்ட

(15-ம் பக்கம் பார்க்க)

திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

## இரிய கொல்லை இதென்ன தொல்லை

வடக்கிலும், கிழக்கிலும் தொடரும் தீவிரவாதத்துக்குத்தக்க பரிகாரம் காணமுடியவில்லையென்ற மனத்தளர்ச்சி அரசுக்கு உண்டு.

தேசபக்தனும் சட்டத்தரணியுமான காமினி இரிய கொல்லே ஆறுமாதத்தில் இதனை முடிவுகட்ட முன்வந்திருக்கிறார்.

அவருக்கு அவசியமான தேவை: தமால் தெரிந்தெடுக்கப்பட்ட ராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகள்குழு, குறிப்பிட்ட ராணுவ அரசியல் அதிகாரம், அவ்வளவுதான். தம்முடைய திட்டமும் அதன் செலவும் சமர்ப்பிக்கப்படுமென வாக்குறுதி அளித்திருக்கிறார் அவர்!

உயர்பதவியில் உயர் பதவிகளை வகித்த, கேம்பிறிட்ஜ் பட்டதாரியும் சட்டத்தரணியுமான திறமைசாலி இத்தகைமைகளினத்தில் வெற்றிபெறும் வீரராயிருக்கலாம்.

வெற்றிக்கு நல்ல வாய்ப்பிருந்தாலும், உயிருக்கு ஆபத்துமுண்டு என்பதே ஜனாதிபதியின் வேதனை என்று சொல்லப்படுகிறது.

ஐ. தே. கட்சியின் முந்திய ஆட்சியில் பிரதமர் டட்லிக்கும் அவருடைய ஆட்சிக்கும் இவ்விதம் உதவமுன் வந்த கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லை 'இதென்ன தொல்லை' என்றனவிற்குப்பேரம் பேசியது இச்சமயம் நினைவுக்கு வருகின்றது.



"உமது மனைவி ஒரு பாறுங்கல்லைத் தூக்கிக்கொண்டு போகிறாளே, எங்கே கொண்டுபோகிறாள்?"

"வெளியே கொண்டுபோய் வீசப்போகிறாள். இன்று சமையலுக்கு வாங்கிய கால்படி அரிசியிலே கிடந்த கல்லாம்".

T.C.C. குளியலறைத் தளக்கற்களின்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்.
ரெருசோமாயிள் நிலம்
அமைப்பவர்கள்.
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதி அற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்.
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்
தலைமை அலுவலகம்:-
69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் கோவில் அண்மை)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 23199
தந்தி: "வைரம்"

# தமிழரசாருக்கு கொழும்பு நகரமண்டபத்தில் நடந்த வரவேற்பு

1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்களே பெரும்பாலான தொகுதிகளில் வெற்றியீட்டினர்.

கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்கள் சார்பில் தமிழரசுக் கட்சி எம். பி க்களுக்குக் கொழும்பு நகரமண்டபத்தில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

கொழும்பு நகரமண்டபம் நிறைந்திருந்த மக்கள் கூட்டத்தில் மேடையின் மீது தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் வீற்றிருந்தனர்.

இந்த வரவேற்புக் கூட்டத்தைப் பார்ப்பதற்கு வவனியா எம். பி.யான 'அடங்காத் தமிழர் திரு. ஸி. சுந்தரலிங்கமும் வந்திருந்தார்.

மக்களோடு மக்களாக முன் வரிசையில் வந்து அமர்ந்த திரு. சுந்தரலிங்கத்தைக் கண்டதும் கூட்டத்திலுள்ளவர்கள் பலர் அவரையும் மேடைக்குச் சென்று அமரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அவரை மேடைக்கு அழைக்குமாறு விழா அமைப்பாளர்களையும் கூட்டத்துக்குத் தலைமைவகித்தவர்களையும் வற்புறுத்திக் குரல் எழுப்பினர்.

## எஸ். எம். கோபாலரத்தினம்

அது தமிழரசுக் கட்சி எம். பி க்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு வைபவம்தான் என்றாலும் கூட்டத்துக்கு வந்துள்ள மக்கள் பலரின் விருப்பத்துக்கிணங்க திரு. சுந்தரலிங்கத்தை மேடைக்கு அழைத்து உட்கார வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டதோடுமல்ல, கூட்டத்திலிருந்தும் மீண்டும் எழுந்த கோரிக்கைக்கிணங்க அடங்காத் தமிழர் தலைவர் பேசுவதற்கும் கட்டத் தலைவர் ஒப்புக்கொள்ளவேண்டியேற்பட்டது.

இந்த வரவேற்பு வைபவத்தில் பலரும் தமிழ் மக்களின் நிலைமையும் மொழிப்பிரச்னையும் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினர்.

### கேட்முதலியார் காரியப்பர் பேச்சு

கல்முனைத் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் இவ்வைபவத்தில் பேசுகையில், தாம் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டபோதிலும் கல்முனைத் தொகுதி மக்களுக்குத் தாம் கடந்த காலத்தில் ஆற்றிய சேவைகளும் தமக்கு மக்கள் மத்தியிலுள்ள சொந்தச் செல்வாக்குமே தமது வெற்றிக்கும் தாம் எம். பி யாகவருவதற்கும் காரணமாக இருந்ததென்ற தொனியில் பேசினார்.

இதன்பின்னர் பேசிய பலரும் இவரது பேச்சுப் பற்றி ஒன்றும் அதிகமாகக் குறிப்பிடவில்லை. 'வாழு வாழவிடு'' என்பதுதான் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கையென்றும்; சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டுமானால் இணைப்பாட்சி என்கின்ற சமஷ்டி அமைப்பின்மூலமே சாத்தியமாகுமென்றும், தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகஇருந்தால்தான் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்று வாழமுடியுமென்றும் வலியுறுத்திப் பேசினர்.

### முஸ்தபாவின் உறுதி

இவ்வைபவத்தில் கேட்முதலியார் காரியப்பர் பேசியபின்னர், பொத்துவில் தொகுதியில் தமிழ் அரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய, ஜனாப் எம். எம். முஸ்தபா பேசினார். கேட் முதலியாரின் மருமகன் ஜனாப் முஸ்தபா.

''தமிழ் அரசுக் கட்சியிலிருந்து மாமா (கேட்முதலியார் காரியப்பர்) விலகினாலும் நான் இக்கட்சியிலிருந்து விலகமாட்டேன்'' என்று ஜனாப் எம். எம். முஸ்தபா உறுதியாகச் சொன்னார் மக்கள் பலத்த கரகோஷம் செய்து வரவேற்றனர்.

### முஸ்தபா ஜோஸ்யம் பலித்தது

ஆறுக் கே மாதங்களுக்குள் ளேயே ஜனாப் முஸ்தபா எதிர்பார்த்தபடி கல்முனை எம். பி. கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி பின்னர் ஆளும் கட்சியை அணைத்துக்


## தரமான உற்பத்திகள்

1. கொள்கலன்கள் (TANKS)
   சிறியனவும் பெரியனவும், வாகனங்களில் பொருத்தப்படுவனவும், நிரந்தரமாக நிர்மாணிக்கப்படுவனவும்.
2. நெல் அவிக்கும் தொட்டியும், உமி எரிக்கும் கருவியும்
   (Parboiling Tank and Husk Blower)
3. ROOF TRUSSES
4. சுருக்குக் கதவுகள்
   உறுதியும் செம்மையும் வாய்ந்த வேலை; சிக்கனம்; துரித சேவை; வேலைத்தரத்துக்கு உத்தரவாதம்.

எங்கள் பொறியியலாளர்களைச் சந்தியுங்கள்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிட்.
43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.



## நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா ?

கொழும்பு சென்று பயணச்சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✶ தாமதம் ✶ வீண்செலவு

ஆகியவற்றை தவிர்த்து யாழ்நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச்சீட்டுக்கள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல், தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவு செய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

த பிறண்ஸ் கம்பனி லிமிடெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன் : 28680


## இலங்கை அரசியலில் உறவுகளும் பிரிவுகளும்-4

கொண்டார்.

மாமா கேட் முதலியார் ஆளும் கட்சியை அணைத்துக் கொண்டபின் சிறிதுகாலம் சென்றதும் மருமகன் முஸ்தபாவும் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார் உதவி நிதி மந்திரியாகவும் பதவியேற்றார்.

### பிலிப் குணவர்த்தன

1959-ம் ஆண்டு மே மாதம் வாக்கில் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான எம் ஈ. பி. அரசின் அமைச்சரவையிலிருந்து திரு. பிலிப் குணவர்த்தனவும் திரு. வில்லியம் டி. சில்வாவும் விலகிச்சென்றனர். 1959-ம் ஆண்டு செப்டம்பர் 26-ம் திகதி திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து திரு. டபிள்யூ. தகநாயக்கா காபந்து அரசின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

### 'தகா' அரசில்...

காபந்துப் பிரதமர் டபிள்யு தகநாயக்காவுக்கும் பண்டாரநாயக்காவின் சுதந்திரக்கட்சி அமைச்சர்களுக்குமிடையில் பல பிரச்னைகள் ஏற்பட்டன. சில அமைச்சர்களை திரு. தகநாயகா 'டிஸ்மிஸ்' செய்தார். வேறு சிலர் தாமாகவே வெளியேறினர்.

இச் சமயத்தில் ஜனாப் முஸ்தபா நிதியமைச்சராக நியமனம் பெற்றார்.

### 'தகா' தோற்றுவித்த எல். பி. பி.

1959ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் திகதி காபந்து பிரதமராகப் பதவியேற்ற டபிள்யு தகநாயகா 1960ம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தலை நடத்தினார். இத் தேர்தலில் திரு. தகநாயகா தம் பிரதமராக ''அலரி மாளிகைக்குள் இருந்து கொண்டே உருவாக்கிய லங்கா பிரஜா தந்திரவாதிக் கட்சி (எல். பி. பி ) யின் சார்பில் மிகப்பெரும்பான்மையான தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தினார். இக் கட்சியின் வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்களில் கேட் முதலியார் காரியப்பர், எம். எம். முஸ்தபா, சேர் ராசீக் பரீத் ஆகியோரும் அடங்குவர். இத் தேர்தலில் எல். பி. பி. வேட்பாளர் எவருமே வெற்றி பெறவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சி. பி டி. சில்வா, மைத்திரிபாலசேனநாயகா ஆகியோரின் தலைமையில் தடுமாறிக் கொண்டிருந்த காலம் ஐக்கிய தேசியக்கட்சி திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையை மீண்டும் பெற்றிருந்தது.

1960ம் ஆண்டு மார்ச்மாதம் பொதுத்தேர்தலில் ஐ கிய தேசியக்கட்சியோ ஸ்ரீலங்கா

(18-ம் பக்கம் பார்க்க)

## வாழ்க்கைச் செலவுடன் போராடுகிறாள் குடும்பப் பெண்

ஒரு காலகட்டத்தில் ஏதாவதொரு வைபவத்தில் பெண்கள் சந்தித்துக்கொண்டால் ஒருவர் மற்றவரின் சேலைகளையும் நகைகளையும் தொட்டுப்பார்த்து மதிப்பீடு செய்து உள்ளூரபொறாமை கொள்வார்கள் என்னும் கேலிப்பேச்சு உண்மையாக இருந்தாலும் தற்போது இக்கூற்றில் அர்த்தம் இல்லை என்றே கூறலாம்.

இக்காலத்தில் அவர்களின் பேச்சில் விலைவாசியேற்றமும், குடும்பத்தைஎவ்வாறுகொண்டு நடத்தலாம் என்கிற அங்கலாய்ப்புமே மிஞ்சி நிற்கிறது. இதற்குக் காரணம் ஒரு மாத சம்பளத்தைக் குடும்பத்தலைவர்கள் கொண்டுவந்துகொடுத்ததும் அடுத்த மாத சம்பளம் வரும் வரை உள்ள காலத்தை எவ்வாறு சமாளிக்கலாம் என்பது பெண்ணுக்குப் பெரும் பிரச்னையாகவும் தலைவலியாகவும் உள்ளது. இவ்விஷயத்தைப்பற்றி நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். சாதாரணமாகக் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையை ஐந்து எனக் கொள்வோம். தகப்பன், தாய், மூன்றுபிள்ளைகள். ஒரு சாதாரண நடுத்தரச் சைவக்குடும்பத்தை எடுத்துக்கொண்டால் சிக்கனமாக அவர்கள் வாழ்ந்தாலும் ஏற்படும் மாதாந்த செலவு:

| | | |
|---|---|---|
| அரிசி (2 பறை) | - | 600/- |
| பருப்பு, மளிகைச் சாமான் | - | 90/- |
| சீனி | - | 90/- |
| பால் | - | 120/- |
| மரக்கறி | - | 300/- |
| மொத்தம் | | 1200/- |

பொதுவாக இலங்கை போன்ற உஷ்ணப்பிரதேசநாடுகளின் வருமானத்தில் 60வீதம் வரை உணவிற்காகச் செலவழிக்கப்படுகிறது. மீதி 40 வீதமும் ஏனைய போக்குவரவு,

(16ம் பக்கம் பார்க்க)



## தபக்கால நற்சிந்தனை

### "விண்ணுலக செல்வமே என்றும் அழியாத செல்வம்"

".மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாய் இருக்கிறது வெளியின் புஷ்பத்தைப் போல பூக்கிறான்; காற்று அதன்மேல் வீசின உடனே அது இல்லாமற் போகிறது! அது இருந்த இடமும் இனி அதை அறியாது''

(சங்கீதம் 103: 15—16)

ஆம், சங்கீத ஆசிரியர் கூறுவது போலவே மனிதனின் வாழ்க்கை ஒரு மலரைப்போல சுருக்கமாக வாடி மறைந்து விடுகின்றது. இதை நாம் உணர்வதுண்டா? மனிதன் இவ்வுலக இன்பத்திற

(16-ம் பக்கம் பார்க்க)

# எமது சிறுகதை




"தேவீ, நீயே துணை! தென்மதுரைவாழ் மீனலோஜனி" என்று ஒரு பெண்குரல் கீரவாணிராகத்தைக் குழைத்துக்கொடுக்க, கீரவாணி ராகத்தை அந்தக்குரலோடு நிறுத்திவிட்டு, அந்த வார்த்தைகளை மட்டும் வாங்கி மீளச் சொல்கின்ற மாணவிகளின் குரல் கோரஸ்பாடும் இந்தக் குரலை எதிரொலிப்பது போல எதிர்வீட்டு விருந்தையிலிருந்து "வாமதேவர் மகிழ் சுந்தரி சங்கரி ஸ்யாமளாங்கி ஆனந்தபைரவி" என்று ஒரு தேன்குரல்கிளம்பும். அதையும் மறு ஒலிபரப்புச்செய்ய ஒரு கோரஸ் அங்கு இருக்கும்.

இப்போது கொஞ்சநாளாக அந்தத்தெரு மட்டுமல்லாமல் ஊரே சங்கீதசாகரத்தில் அழுந்தித் தவித்தது. ஆம், தவியோ தவியென்று தவித்தது. ஆனல் இப்போதெல்லாம் இரவில் தூரத்தில் கடற்கரைப் பற்றைகளருகில் நரியின் ஊளைஒலி கேட்பதில்லையாம்.

இதெல்லாம் ஒன்றுமில்லை. சங்கீதமன்றங்கள் இரண்டு ஒட்டப்போட்டி நடத்துவது தான் காரணம். சங்கீத வித்துவான் சந்திராவும் மிருதங்க வித்துவான் நடராஜா மாஸ்டரும் ஓட்டப்போட்டி நடத்தினர். எதிரும் புதிருமாக இருந்தவீடு அவர்களுடையது. அவர்களுடைய சங்கீதவித்வத்தன்மைகளுக்கிடையில் போட்டிகிளம்பியதுபொருமை மூண்டது.

இரண்டு இடங்களிலும் சங்கீதசபைகள் அமைத்து வகுப்புக்கள் நடத்தப்பட்டன. அது "பவப்பிரியா இசை மன்றம்"; இது சிவப்பிரியா சங்கீதசபா." சந்திராவுக்கு வந்துவாய்த்த கணவன் நல்ல சங்கீதரஸிகராகவும் கேள்வி ஞானமுடையவராகவும் இருந்ததால் அவளுடைய வித்வச் செருக்கு ஒருபடி உயர்ந்தது. நடராஜாமாஸ்டரின் மனைவிக்குச் சங்கீதம் என்றல் கொஞ்சம் அப்படித்தான் "சங்கராபரணம் எப்படி? என்று கேட்டால் "அதற்கு எத்தனை பவுண் வேணும்? என்று கேட்பாள். வித்வான் நடராஜா மாஸ்டரின் மிருதங்கத்தை அவர் மனைவிதூக்கி உள்ளே வைக்கும்போது "தொப்பியைக்கிழைவிட்டுவை'. என்று அவர் சொன்னர் அவருடைய "ஹொண்டா"பாச் தைத்த தொப்பியை நிலத்தில் வைத்துவிட்டு அதற்குமேல் மிருதங்கத்தை 'தொப்பென்று அதுவும் வலந்தலைப்பக்கத்தைக் கீழேவைத்து வைப்பாள் இதனல் வித்வான் ஒரு சங்கீத ஆசிரியையைத் துணைசேர்க்க வேண்டியிருந்தது. அவர் சங்கீதரத்னம் பத்மலோஜனியை அழைத்து வகுப்புகள் தொடங்கினர். ,பவப்பிரியா, மன்றத்தில் பத்மலோஜனி வந்து 'தேவி நீயே துணை தென்மதுரை வாழ் மீனலோஜனி" என்று பாடத் தொடங்கினள்.

இங்கே சிவப்பிரியா மன்றத்தில் சங்கீத பூஷணம் சந்திரா ',வாமதேவர் மகிழ் சுந்தரீ என்று ஆனந்தபைரவியை அவிழ்த்துவிடத்தொடங்கினள் இருவரின் ஓட்டப்பந்தையத்துக்குத்துணைசேர்ப்பதற்காக அவர்கள் ஊரிலுள்ள குஞ்சு குருமான்களை நோக்கி ஓட்டப்போட்டி நடத்தினர். ஏறக்குறைய ஊரிலுள்ள சின்னஞ் சிறுசுகள் எல்லாம் ஐம்பதுக்கு ஐம்பது என்று இரு இடங்களுக்கும் சங்கீதம் படிக்க வரத் தொடங்கினர்கள்.

மும்மூர்த்திகளும் உருத்திர மூர்த்திகளாக அங்கு வருகை தந்து அங்கு படிக்கவருபவர் யாவரும் சங்கீத சம்ஹார மூர்த்திகளாக இருப்பதைக் கண்டு பயந்து நடுங்கிக் கொண்டு முகாரி பாடிக் கொண்டு திரும்பி ஓடினர் அவர்களுடைய நடுக்கம் காரணமாக இயல்பாகவே அந்த முகாரி நிறைய 'ப்ருக்கா,க்களோடு பொலிந்தது.

மாணவர்கள்எல்லோரும்இப்போது இந்தஇரண்டுவீட்டையும் நோக்கி ஓட்டம் பிடித்ததால் இப்போதுஇந்த வீடுகளுக்கருகிலிருப்போர் வேறு இடங்களை நோக்கி ஓட்டம் போடவேண்டிய நிலை உருவாகியது.

நடராஜாமாஸ்டரின்மிருதங்கத்தை நாலைந்து பொடியள் வெளுத்துவாங்கும் சத்தம் கேட்ட மறுநாள் சந்திராவின் அம்மாவின் தம்பி பெண்சாதியின் சகோதரியின் மைத்துனர் மகளுடைய வயலினை நாலைந்து 'பெட்டையள்' அறுக்கத் தொடங்கினர்கள். அதுமட்டுமல்லாமல் முன்னேற்பாடாக ,பவப்பிரியாவை, முந்திக் கொணடு ,சிவப்பிரியா வில். நடனவகுப்புகளும் தொடங்க வேண்டுமென்று சந்திரா முனைந்து நின்றுள். பிறகென்ன ஊரில் மிச்சம் மீதியுள்ள பொம்பிளைப் பிள்ளைகள் எல்லோரும் சந்திரா வீட்டுச் சீமெந்து தரையை உதைக்கத்தொடங்கினர்.

மிருதங்க வித்துவானுக்குப் பொறுக்கவில்லை. ஏதாவது செய்தாக வேண்டுமென்று, மண்டையை போட்டு உடைத்தார். அடுத்தநாள் ஹிப்பித் தலைமயிர் முகத்தை மறைக்க தோசைகல்லுக் கண்ணுடியால் ஒருவாறு பார்வை பெற்று ஒரு 'இளந்தாரி, கையில் எலக்ரிக் கிற்ருருடன், நடராஜா மாஸ்டரின் வீட்டினுள் நுழைந்தான், பிறகென்ன, பவப்பிரியா' மன்ற ஆசிரியை பத்மலோஜனியைப் பார்ப்பதற்கு ஒரு இளைஞர் கூட்டம் தினமும் அங்கு கூடலாயிற்று அவர்கள் 'கிற்ருர்'பழகுகிருர்களாம்.

மேற்கும் கிழக்கும் இணைந்து குழம்பியதுபவப்பிரியா இசை மன்றத்தில்!

இதற்கிடையில் புதிய நாட்டிய சாஸ்த்திரம் எழுத வேண்டிய தேவை ஏற்படுவதை உணர்ந்து பரத முனிவர் சிவப்பிரியாவை நோக்கிப் பயணம் செய்தார். அவர் புறப்படுவதைக் கண்ட நாரதரும் 'ராக விபோதம்' நூலாசிரியர் சோமநாதரும் மற்றும் சங்கீத சாஸ்திர விற்பன்னர்களும் அவரோடு சேர்ந்து புறப்பட்டனர் ஏற்கனவே மும் மூர்த்திகளும் வந்து அவர்களிடம் முறையிட்டிருந்ததால் இந்த இரண்டு 'பிரியா' மன்றங்களையும் சற்றுக் கவனிக்க வேண்டுமென்று யோசித்திருந்தனர்.

இவர்களெல்லோருமாக தேவலோகத்திலிருந்து புஷ்பக விமானத்தில் ஏறிப் புறப்பட்டனர். 'பிரியா' மன்றங்களிலிருந்து புறப்பட்ட ஸ்வரங்கள் யாவும் ஒன்றேடொன்று முட்டி மோதிப் போரிட்டபடி வானத்தில் திரையிட்டிருந்ததால் விமானம் கீழிறங்க முடியாமல் தவித்தது. நாட்டியமாடும் பெண்களின் முகத்தில் 'பாவம்' எதுவும் இல்லாமல் வெறும் பாவமாக இருந்தது. சோமநாதர் தலையைச் சொறிந்து கொண்டு நாரதரைப் பார்த்துக் ஸ்வரங்கள் ஏழா ஒன்பதா? என்று கேட்டார். நாரதர் திடுக்கிட்டார். '.இன்னும் கொஞ்ச நேரம் நின்றல உமக்கு முழுச் சங்கீதமுமே மறந்து போகும்" என்று சொல்லி உடனே எல்லோரும் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

வழியில் வெகுவேகமாக மன்மதன் ஓடிவந்து கொண்டிருந்தான். நாரதர் வியப்புடன் விசாரிக்க அவன் ',நீங்கள் ஓடுங்கோ" உங்களுக்கு அங்கை வேலையில்லை. எனக்குத்தான் அங்கை வேலை'' என்று சொல்லி விரைந்தான்.

பவப்பிரியாவில் பத்மலோஜனி ரீச்சரின் கிற்ருர்கண்கள் ஹிப்பி இளைஞனின் மிருதங்கத் தொப்பிக் கண்களோடு இரகசியம் பேசிக் கொண்டிருந்தன. இவர்களுக்கு இடைஞ்சல் செய்யக் கூடாதென்று சின்னஞ் சிறிசுகள் வெளியே வந்து விட்டனர். சிவப்பிரியாவில் சந்திரா கவிஞர் தவத்தின் கவிதைகள் பற்றி நாட்டிய ரீச்சருக்கு விமர்சனம் பண்ண அவள் நாட்டியப் பேரொளி பத்மினியின் நடனம் பற்றி விமர்சனம் பண்ண அந்த மாணவிகளும் அவர்களுக்கு இடைஞ்சல் செய்யாமல் வெளியே வந்தனர். இரண்டு மன்றத்து மாணவர்களுமாகச் சேர்ந்து குழுக் குழுவாக வேறு வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

அடுத்த வீட்டில் இருந்த விளையாட்டு ஆசிரியர்தேவநாயகம் இவர்களைக் கூப்பிட்டார். அடுத்த நாட்காலை அவர் வீட்டு வாசலில் "சிவபரியா விளையாட்டுக் கழகம்" என்று ஒரு 'போட்' போடப்பட்டிருந்ததை நடராஜா மாஸ்டரும் சந்திராவும் கண்டு திகைத்த போது மாணவர்கள் யாவரும் அங்கே சென்று கூடி நின்றனர்.

---

றிச்சட் றைவ்வின்

## வானவில்லின்

## முடிவிடத்தில்...

வானவில்லின் முடிவிடத்தில், சகோதரனே,
வரத்தான் போகிறது ஓர்இடம்
கானங்கள் அனைத்தையும் பாடிடலாம்
கலந்து இருவரும் பாடுவம், சகோதரனே,
உன்னைப்போல் வெள்ளையாய்
நானில்லை என்றலும்
நீயும் நானும் இணைந்தே பாடுவம்
சோகப் பாடலாய்த்தான்
அது ஒலிக்கும்
ஏனென்றல் அதன்மெட்டை
நாங்கள் அறியோம்
கற்பதற்கும் அது
கடினமானது
ஆனலும் நாங்கள்
கற்கலாம் சகோதரனே!
அதில்,
கறுப்பு மெட்டு என்றில்லை
வெள்ளை மெட்டு என்றில்லை
இசை என்ற ஒன்றே...
வானவில்லின் முடிவிடத்தில்
வளரும் இசையையே பாடவுள்ளோம்.

தமிழில்: என். சண்முகலிங்கன்

றிச்சட் றைவ்: அமெரிக்க நீக்கிரோ கடலோடி ஒருவனுக்கும் தென்னுபிரிக்க கலப்பினப் பெண்ணொருத்திக்கும் மகனக, 1931ல் தென்னுபிரிக்க கேப் நகரத்தில் பிறந்தவர்.
தென்னுபிரிக்க கவிதைத் தொகுதிகள் பலவற்றிலும் இவர் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவரது சிறுகதைகள் ஜெர்மனிய, ஸ்கந்திநேவிய நாடுகளிலும் வெளியாகியுள்ளன.

---

## தமிழகத்தில்

## நமது எழுத்தாளர்கள்

கலவரத்தோடு தமிழகத்துக்கு இடம் பெயர்ந்த நமது எழுத்தாளர்கள் சிலர் அங்கு தமது 'இலக்கியப்பயணத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருப்பது நல்ல செய்தி! "ஓரிஜினுலிட்டி' உள்ளவர்களும், அந்தச்சங்கதிக்குச் சிறிதுகூடலாயக்கற்றவர்களும், எப்படியாவது பிழைக்கலாம் என்பதற்காவும் சென்றவர்களின் செய்திகள் விதம்விதமாகக் காற்றேடு காற்ருகவந்து கொண்டிருக்கின்றன.

கதையும், கட்டுரையும், கவிதையும் எழுதுபவர்களோடு, இலங்கைத்தமிழ் போக்கு சிந்தனைகள் என்றல் என்ன, எதைச்செய்தாலும் கணேஷுக்கு ஒரு கணேஷ் தான்!

எங்கோ வெளிநாடு நோக்கிச் சென்ற காவலூர் ஜெகநாதன் தமிழகத்துக்குள் நுழைந்து, தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளில் எழுதிக் கொண்டு, புத்தகவெளியீட்டு முயற்சிகளிலும் ஈடுபட்டார்! இங்கும் வருகிருர். அங்கும் போகிருர்!

செ. யோகநாதனும் தமிழ் நாட்டுக்குப் போயிருக்கிருர்! அவரும் அங்கு கதைஎழுதி, புத்தகம் போடுவதாக அவர் நண்பர்கள் கூறுகின்றனர்.

கொழும்பிலுள்ள சோவியத்

## இலக்கிய உலா

ஈ.கே.ஆர்

மக்களுக்கு தமிழகத்தில் ஆதரவான சூழ்நிலையை வைத்துக் கொண்டு, திடீர்திடீரெனப் பத்திரிகைகளை ஆரம்பித்து பணம் பண்ணிக்கொள்ள முயற்சிப்பவர்கள் பற்றியும் தகவல்கள் வராமல் இல்லை.

தனது எழுத்துக்களால், ஈழத்துக்குத் தமிழகத்தில் புகழ் சேர்த்துத்தரும் செ. கணேசலிங்கம் மீண்டும் தமிழகத்திலிருந்து கொண்டு, தமது எழுத்துக்களை நூலாக்கி, துரிதகதியில் வெளியிட்டுக் கொண்டிருக்கிருர். தமிழகம் இவருக்குப் புதிதல்ல! முன்னர் இவருக்குத் 'தஞ்சம்' கொடுத்து, வாழவைத்தது!

'குமரனுக்குக் கடிதம்' இப்போது அங்கிருந்து நூலாக வெளிவந்துள்ளது.

நாவலென்றல் என்ன, சிறுகதை என்றல் என்ன முற் தூதரகத்திலிருந்த மு. கனகராசன் குடும்பத்தோடு சென்று தமிழகத்தில் குடியேறி, எழுத்தை நம்பிவாழ்கிருர்! யாழ்ப்பாணத்தில் 'மக்கள்குரல்' என்று நன்கு அறிமுகமான புனிதலிங்கமும் தமிழகத்தில்தான் வாழ்கிருர்!

அரசியல்காரர்களான காசி ஆனந்தனுக்கு தமிழகத்தில் செல்வாக்கு அவரது உணர்ச்சிக்கவிதைகளுக்காக ஒரு காலத்தில் இருந்தது. ஆதித்தனின் "நாம்தமிழர்' பாசறையில் அங்குபடித்த காலத்தில் சக்கை போட்டவர். இப்போதும் அங்கு இருந்து எழுதுகிருர்! எப்படியோ தெரியவில்லை.

சட்டத்தரணியான கரிகாலன் ஜூனியர் விகடனில்

(5ம் பக்கம் பார்க்க)

# கமலஹாசனுக்கு சிங்காரிக்க அமெரிக்காவில் பயிற்சிபெற்றார் வாணி!

நடிகர் கமலஹாசனுக்கு படப்பிடிப்பில் ஆடை அணிகள் தேர்ந்தெடுப்பவர் (காஸ்டியூம் டிசைனர்) அவரது மனைவி வாணி என்பது தெரிந்ததே இதற்குப் படத் தயாரிப்பாளர் வாணிக்கு வேருகப் பணம் கொடுக்க வேண்டும் என்பதும் கமலை ஒப்பந்தம் செய்யும் போதே வாணியையும் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்பதும் தெரிந்ததே

ஒரு சில வருடங்களாக கமல்-ரஜினி இருவரும் இந்திப்படவுலகினுள் நுழைந்ததும் அங்கே அமிதாப்பச்சன் ரஜினிக்குப் பேருதவியாக இருந்து ஆடை அணிகள்- ஒப்பனை பற்றிய பற்பல நுணுக்கங்களை எல்லாம் அவருக்குச் சொல்லிக் கொடுத்ததும் தெரிந்ததே.

சமீபத்தில் நியூயோர்க் செல்லும் வழியில் லண்டனில் தரித்துச் சென்ற கமலஹாசன் என்ன சொல்லியிருக்கிருர் தெரியுமா?

''பொதுவாகவே பெண்களுக்கு ஆடை அலங்காரம் என்ருல் மிகவும் ஆசை. அதற்குத் திருமதி வாணி கமலஹாசன் மட்டும் விதிவிலக்கல்ல. ஆனல் வாணியின் ஆசை தனது கணவருக்கு விதம் விதமான ஆடை அணிகள் மேக்கப் முதலியன செய்து அவருக்குத் திறமையான தோற்றங்களை அளிப்பதே படப்பிடிப்புக்களின் போது தனது கணவனுக்குப் பொருத்தமான ஆடை அலங்காரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தொடங்கி இப்போது வாணிகமலஹாசன் ஒரு 'ஸ்பெஷல்' மேக்கப் கலைஞராக உருவாகியுள்ளார் இந்தத் துறையில் உயர் பயிற்சி பெற நியூயார்க் வந்துள்ள வாணியைச் சந்தித்து அழைத்துச் செல்லவே நான் மேற்கு நாடுகளுக்கு வந்துள்னேன்''

## தேம்ஸ்நதிதீரத்திலே...



லண்டன்மடல்: "உதயதாரகை"

### லண்டனில்

### தோடுடைய செவிகள்

நமது நாட்டில் ஒரு காலத்தில் ஆண்களுக்கும் காது குத்தி, கடுக்கன் போடுவது ஒரு வழக்கமாக இருந்தது

கடுக்கன் போடும் வழக்கம் காலம் செல்லச் செல்ல அருகி வந்தாலும் காது குத்தும் சம்பிரதாயம் அருகவில்லை

1956, 1958 ல் இலங்கையில் இடம் பெற்ற முதலாம் இரண்டாம் 'திருவிழாக்களின்' போது செவித்துழை தரிசனத்தின் பின்னரே 'பூஜை' நடை பெற்றது!

இதன் பின், சும்மா இருந்த செவியைத் துழைத்துக் கெடுவானேன் என்று இந்தச் சம்பிரதாயமும் அருகிவிட்டது

இங்கிலாந்தில் இப்போது வெள்ளையன்-கறுப்பன் ஏழை-பணக்காரன், படித்தவன்-பாமரன் என்ற பேதமின்றி ஆண்கள் மத்தியில் பரவலாக ஒரு பழக்கம் வேருன்றி வருகிறது.

அது என்ன தெரியுமா?

ஒரு பக்கச் செவியை மட்டும் துளைத்து அதில் திநுசு திநுசான தொடுகளை ஜிப்ஸிகளை வளையங்களை மாட்டிக் கொள்வது!

இந்தக் கோட்-சூட் சோமாளிகளை எங்கும் காணலாம்

இதனல்-தான் காது குத்தும் அழகியற்கலை நிபுணர்களுக்கும் இங்கிலாந்தில் நல்ல கிராக்கி!

எங்கிருந்தாலும் வாழ்க!

### 'இரும்புச் சீமாட்டி'

### மாஸ்கோ சென்றதேன்

சோவியத் ஜனதிபதி யூறி அந்ரோபோவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரெட் தாட்சர் மாஸ்கோ சென்றது தெரிந்ததே.

நமது நாட்டில் ஒரு 'செத்த வீட்டிற்குச் செல்லுவதென்ருல் எத்தனையோ வீடுகளில் சுவையான அடுக்களை மகாநாடுகள் நடைபெறுவதுண்டு. யார்-யார் செல்ல வேண்டும் என்று தீர்மானிப்பதற்குப் பற்பல வாதப் பிரதிவாதங்கள் முன் வைக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுவதுண்டு.

இங்கிலாந்தில் இவை பத்திரிகை- வானெலி- டி. வியில் நடைபெறுகின்றன. (வீட்டுக்கு வீடு வாசல்படி!)

அந்திராபோவ் மரணித்த செய்தி அறிவிக்கப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு மூன்று நாட்கள்வரை, பத்திரிகை- வானெலி எல்லாம் சேர்ந்து தாடசர் மாஸ்கோ போவதால் என்ன- நன்மை தீமைகள், என்ன அரசியல் லாபங்கள் தாட்சர் போவாரா விடுவாரா என்றெல்லாம் அலசு அலசென்று அலசித் தீர்த்தன.

—முன்னைய தலைவர் பிரஷ்னேவின் மரணச் சடங்குகளுக்குத் தாட்சர் போகவில்லை, இதற்கு மட்டும் எப்படிப் போவது?

—அந்திரோபோவைத் தாட்சர் சந்தித்ததே இல்லை அப்படி இருக்க இதற்கு விழுந்தடித்து ஓடுவதா?

—கம்யூனிசத்துக்கெதிரான கடுமையான கருத்துக்களை, கொள்கைகளை உடையவர் என்பதால் 'இரும்புச்சீமாட்டி' பட்டம் பெற்றவராச்சே! இதற்குப் போனல் பட்டம் காற்றில் பறக்குமே?

—அமெரிக்க ஜனதிபதி றீகன் இப்போது விடுமுறையில் இருப்பதால் போகமாட்டார். ஆகவே தாட்சர் சென்ருல் (ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்பது போல) அவருக்கு ஒரு தனித்துவமான சர்வதேச அந்தஸ்தும் விளம்பரமும் கிடைக்குமல்லவா?

-சர்வதேச அரங்கில் கிழக்கு -மேற்கு உறவுகள், ஆயுதப் பரிகரண முயற்சிகள் சரிந்து வருவது போல, பிரிட்டனில் தாட்சரின் செல்வாக்கும் சரிந்து வருகிறது. இந்த நிலையில் தாட்சர் மாஸ்கோ சென்ருல்' கிழக்கு-மேற்கு உறவுகளைக் சரிப்படுத்த ''தரகு,, செய்ய வாய்ப்பும் அதனல் பிரிட்டனில் தேயும் தனது செல்வாக்கை மீளப் பெற வாய்ப்பும் கிட்டுமல்லவா?

—மரணச் சடங்குகளில் சோவியத் தலைவரோடு ஆற அமர பேசுவதற்கு நேரம் கிடைக்காதே?—

தாட்சர் செல்வார் என்று அறிவிக்கும் வரை இந்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்தன.

தாட்சர் மாஸ்கோ சென்று திரும்பினர்

''தாட்சர் சென்ருர் ரஷ்யத் தலைவர்களதும் மக்களதும் இதயங்களை வென்ருர் - திரும்பி வந்தார் ,, என்று சில பத்திரிகைகள் விளாசித் தள்ளின. ''அமெரிக்கன்காரனும் இங்லிஸ்காரனும் என்னதான் ரஷ்யாவுக்கெதிராசச் சண்டப்பிரசண்டம் செய்து கத்தினலும் உண்மையில்இவன்கள்ரஷ்யாக் காரனுக்குப் பயம்; அதனல் தான் தாட்சர் போய் வந்தார் ''என்ற கருத்துபட எழுதி, கெடுபிடி யுத்த—பதட்ட நிலைகளை விரும்பும் பத்திரிகைகள் தமது வயிற்றெரிச்சலை கொட்டித் தீர்த்தன.

என்னதான் காரணமென்ருலும், தாட்சர் ரஷ்யா சென்று வந்ததை பிரிட்டிஷ் மக்கள் வரவேற்கின்ருர்கள் கிழக்கு -மேற்கு உறவுகள் சீர் பெற்று, சர்வதேச யுத்த அபாயம் இதனல் குறைய வழி பிறக்கும் என்று எதிர்பார்க்கிருர்கள்.

### வழுக்கையைப் போக்க

### உரோம மாற்றீடு

முடி உதிர்கிறதே' வழுக்கை விழுகிறதே என்று அங்கலாய்த்துக் கொள்பவர்களுக்கு இங்கிலாந்தில் வழி உண்டு.

பொதுவாக வழுக்கை தலையின் முன் பகுதியில் அல்லது பின்பகுதியில் தான் ஆரம்பிக்கிறது. மேலே வழுக்கை விழுந்தாலும் (காதுகளின் மேலே உள்ள) பக்கங்களில் வழுக்கை விழுவதில்லை. இப்பகுதியில் உள்ள உரோமங்களைவேரோடு கிளப்பி வழுக்கைவிழுந்த பகுதிகளின் நடுகின்ருர்கள். இருதய மாற்றீடு சிறுநீரக மாற்றீடு போல, ''உரோம மாற்றீடு,, என்று இதைச் சொல்லலாம்.

2½,,X1,, அளவான வழுக்கைப் பகுதியில் உரோம மாற்றீடு செய்ய சுமார் அரை மணி நேரம் எடுக்கிறது. இதற்கு ஏறத்தாழ (இலங்கை நாணயத்தில்) 10,000 ரூபா ஆகி

(12ம் பக்கம் பார்க்க)

# பாம்புக்கடிக்கு முதலுதவி

ஒரு பாம்பு தற் செயலாக நம்மைக் கடித்து விட்டால் என்ன செய்வது? முதலில், கடித்த அந்தப் பாம்பு விஷமுடையதா அல்லவா எனத் தெரிந்து கொள்ளல் நன்று எப்படித் தெரிந்து சொல்வது?

(அ) கடிபட்ட காயத்தில் நீலம் கலந்த நிறத் தோற்றம் தெரியும் கடிக்காயம் துவாரமுள்ளதாக இருக்கும். இரத்தம் கசியும்.

(ஆ) அதிகமாக இரண்டு பற்களின் காயம் தென்படும்.

(இ) கடிக்கப்பட்ட இடத்தில் உழைச்சல் காணப்படும். இவற்றைக் கொண்டு விஷப் பாம்பா என அனுமானிக்கலாம்.

### கட்டுதல்

கடித்த இடத்துக்கு மேல் கட்டுதல் வேண்டும். (காயப்பட்ட இடத்தில் காயத்துக்கு மேல்)

### கீறுதல்

விஷப் பற்கள் பதிந்த இடத்தில் புள்ளடி போல் மேல்தோலில்கீறுதல்வேண்டும். கீறுவற்கு முன்னர் கடிபட்ட இடத்தைக்கழுவுதல்வேண்டும். ஏனெனில் விஷம் தோல் புரையில் செல்லாதிருந்தால் விஷம் கழுவப்படும்; திரவத்துடன் செறிந்து தனது வீரியத்தை இழக்கக் கூடும். இதனல்தான் சிலர் கடித்த இடத்தில் உடனடியாகத் தனது சிறு நீரைப் பெய்து விடுவர்.

பாம்புக் கடிக்குள்ளானேர் நடக்கவோ ஓடவோ கூடாது. இதனல் இரத்தோட்டம் அதிகரிக்கப்படுவதால் விஷம் உடலின் மற்றப் பகுதிகளுக்கும் பரவுவதற்கு ஏதுவாகும்,

பாம்பு தீண்டினல் பொது மருந்தான வலி கொல்லி மாத்திரைகள் அஸ்பிறின், டிஸ்பிறின் ஒன்று கொடுக்கலாம். ஆனல் உடனடியாக கிட்ட உள்ள வைத்தியசாலைக்கோ அல்லது அரசாங்க அங்கீகாரமுள்ள வைத்தியர்களிடமோ கொண்டு செல்லல் வேண்டும்.

### ஊசி மருந்து

அரசினர் வைத்தியசாலைகளில் பாம்பு விஷத்துக்கு பாம்பு விஷ எதிர்ப்புச் சக்தி கொண்ட ஊசி மருந்துகள் தற்காலத்திலிருப்பதால் உடனடியாக அதனை பெற வகை செய்யப்படவேண்டும். அதனைப் பெறுவதற்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு இரத்த உறை நிலை அவதானிக்கப்பட்ட பின்னரே அதற்கேற்ப விஷ எதிர்ப்பு ஊசி மருந்துகளை ஏற்றுவார்கள். இதனல் விஷ நோயாளி காப்பாற்றப்படலாம். ஆனல் எதிர்மாருக இந்த ஊசியைப் பயன்படுத்துவதால் சில நோயாளர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு ஆபத்தும் ஏற்பட்டு விடுகிறது.

### சித்த ஆயுள்வேத

### யூனனி மருந்துகள்


விஷக்கடிக்கு சித்த ஆயுள் வேத. யூனனி வைத்தியத்தில் மூலிகைகளால் ஆக்கப்பட்ட பலமருந்துகள் பயன்படுத்தப்பட்டு பூரண வெற்றிகளைக் கண்ட அநுபவ வைத்திய நிபுணர்களும் பல இடங்களில் உளர். அவர்களிடம் பல நூற்ருண்டுகளாக ஆராய்ச்சி அனுபவங்களால் கண்ட பல மருந்துகள் தலைமுறை தலைமுறையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு செயல் படுத்தப்படுகின்றது. ஆங்கில வைத்தியத்தால் மாற்ற முடியாத பல விஷ நோய்களை இவர்களால் இலகுவில் தீர்க்கக் கூடியதாகவுள்ளது.

பஸ்பங்கள் சூரணங்கள், குளிகைகள், கூட்டுமாத்திரைகள் என்பன சிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட்டு வைத்தியர்கள் வெற்றிவாகை சூடியுள்ளார்கள். அந்நிய ராட்சி காலத்தில் சித்த, ஆயுள் வேத, யூனனி வைத்வளர்ச்சி குன்றியது அன்னிய ராட்சியால் சுதேச வைத்திய வளர்ச்சிக்கு ஆதரவு அற்ற நிலையில், ஆராய்ச்சியோ கௌரவமோ உதவியோ கிடைக்காததால் அதன் மகத்துவம்குன்றவும்அடிமைமனப்பான்மையால் அந்நிய வைத்திய முறையில் மக்கள் நாட்டம் கொள்ளவும் அரசஉதவியால் அதன்வளர்ச்சியும் கௌரவமும் ஆராய்ச்சி உதவிகளும் பெருகவும் செய்தன. ஏட்டுச் சுரைக்காயாக, நாகரிகமற்ற முறையாக, நாட்டு வைத்தியமாக மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாத நிலையில் இயற்கையுடன் ஒன்றிய சுதேச வைத்தியம் தன்மவுசு குன்றிக் காணப்பட்டது. ஆனல் சுதந்திரம் பெற்ற நாம் நம்முடைய பண்டைய வைத்திய முறையின் மகத்துவத்தை வளர்ச்சி பெறச் செய்ய தற்போதைய அரசாங்கம் அதற்கென ஒரு தனி இலாகா ஆக்கி மற்றைய வைத்திய முறைகளுடன் சரிநிகர் சமானமாக வளர்ச்சியில் உயர்ச்சி பெற ஆவன செய்யப்படுவதால் இனி வருங்காலத்தில் நாட்டு வைத்தியம் உலகில் உன்னத நிலையில் அமைந்து பல புதிய ஆராய்ச்சிகளுள், விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் ஒன்றிணைந்து சித்த, ஆயுள் வேத யூனனி வைத்திய முறை வருங்கால உலகம் வளம் பெறும் என நம்ப முடிகின்றது.

சுதேச வைத்தியத்தில் உள்ள உள் பிரிவாக அமைந்த விஷ வைத்தியம் மேலும் மேலும் அதனுடன் சம்பந்தப்பட்ட வைத்தியர்களுக்கு ஊக்கமும், உதவியும் உற்சாகமும் கொடுப்பதால் இதன் பயனல் மக்கள் விஷக்கடி நோய்களிலிருந்து மீளவும் வழி பிறக்கும்.



★ க. சிற்றம்பலம்
விஷ வைத்திய நிபுணர்




## தொடர் நவீனம்

6

பண்டாரி மரப் படலேக்கு வெளியே நின்று '‚ஐயா'' என்று குரல் வைத்தான்.

'அவக் அவக்' செனக் குரல் வைத்துக் கொண்டு படலே வரை ஓடி வந்த நாய்க் கடுவன் பண்டாரியின் வாடையை முகர்ந்துவிட்டு வாலே ஆட்டி முகமன் செய்து கொண்டது.

சிவக்கொழுந்தி படலேக்கு வந்து கதவைத் திறந்து ''ஆர் பண்டாரியே? ஐயா தேடிக்கொண்டு நிண்டவர். இப்பான் ஆரோ வந்து கூட்டிக் கொண்டு போகினம். இஞ்சை வா, உதிலே இரு வந்திடுவர்'' என்று பண்டாரியை உள்ளே அழைத்துச் சென்று பண்டாரி வழக்கமாகக் குந்தியிருந்து கோப்பி குடிக்கும் முற்றத்து மாமரப் பெரு வேரடியில் விட்டாள்'

''ஐயா ஏதெண்டாலும் கதைச்சவரே பிள்ளே?'

சிவக்கொழுந்திக்கு ஊடாக விஷயத்தை முன் கூட்டியே அறிந்து விடும் நோக்கத்தோடு அவன் கேட்டான்.

பெரியவர் வீட்டு அடிமைப் பெண்ணுனலும் சிவக்கொழுந்தி சீதேவி அம்மா உயிரோடு இருந்த காலத்திலிருந்து இன்று வரை வீட்டின் சகலதுமாக இருந்ததால் பண்டாரி அவளுக்கு மரியாதை கொடுத்துப் பேசுவது வழக்கமாயிருந்தது. ''பிள்ளே'' என்றே அவன் அவளே அழைப்பான். இந்த அழைப்பு பெரியவருக்கு மிகவும் விருப்பமானது என்பது அவனுக்குத் தெரியும்,

''ஏனெண்டு தெரியேல்லேப் பண்டாரி, எங்கையோ போறத்துக்கு றிச்சோவைக் காணேல்லே எண்டும் கதைச்சவர். அதுக்குத்தானுக்கும்'' என்று சிவக்கொழுந்தியின் வாயிலிருந்து பதில் வந்த போது தான் பண்டாரிக்கு நெஞ்சிடி நின்றது.

அவன் அமைதியுடன் மர வேரில் உட்கார்ந்து கொண்டான்

விருந்தையில் எரிந்த சிங்கப்பூர் மான்ரில் லேற்றின் வெளிச்சம் மாமர வேர் வரை தெளிவாக விழுந்து கொண்டிருந்தது.

நாய்க் கடுவன் அவள் பாதத்தடியில் கிடந்து குடங்கிக் கொண்டது. அது அப்படி நடந்து கொண்டது ஒன்றே பண்டாரிக்கும் அந்த வீட்டுக்கும் இருந்த இறுக்கத்தினே முரசு கொட்டுவதாக அமைந்தது.

உள்ளே போன சிவக்கொழுந்தி சற்று வேளேயில் கோப்பிப் பேணியுடன் திரும்பி வந்து ''எடபொடி பண்டாரிஉன்ரை பேணி உங்கினேக்கை கவிட்டிருக்கும் எடு எப்பன் கோப்பி தாறன் குடி!'' என்ருள்.

பண்டாரி தனது வழக்கமான மூக்குப் பேணயைத் தேடினன். அது விருந்தையின் கிழக்குப்புற சலவைக் கல் கீழ் ஓட்டில் கவிழக்கப்பட்டிருந்தது. அதை எடுத்துத் தூசு தட்டி ஊதி விட்டு அவன் நீட்டிய போது ஒரு சிறங்கை அளவு கோபபியை அதற்குள் ஊற்றி ''எப்பன் கழுவிப் போட்டுப் பிடி, அட்டைகிட்டை உள்ளுக்குஏறிஉலாவியிருக்கும்.'' என்றுசிவக்கொழுந்தி கூறவே பண்டாரி அதைச் சிலாவி வெளியே ஊற்றி விட்டு மறுபடி கோப்பியைப் பெறுவதற்காக நீட்டினன். அந்த மூக்குப் பேணி நிறையக் கோப்பியை ஊற்றி விட்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

சிவக்கொழுந்திக்கு வயது முப்பத்தைந்துக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

பெயருக்கேற்ருற் போல அவள் சிவக்கொழுந்திதான்!

வீட்டு எஜமானி சீதேவி அம்மாள் உயிரோடு இருக்கும்போதே பரம்பரைச் சிறைக்குட்டி குடும்பத்தைச் சேர்ந்த அவளே வீட்டு வேலேக்கென நிரந்தரமாக அமர்த்தி விட்டாள்.

சிவக்கொழுந்திக்கும் தாய் இல்லே. அவளுக்கு இருபது வயது வரை இருக்கும் போது அவளது தந்தை யாரோ ஒருத்தியை இரண்டாந்தாரமாகக் கட்டிக் கொண்டு இவளேயும் அந்தரத்தில் விட்டு விட்டு எங்கோ போய் விட்டான். அதன் பின்பு அவளின் சிறிய தகப்பனர் அவளுக்கு அடைக்கலம் கொடுத்தார். சிலநாட்களுக்குள் இவளே ஒரு வயதானவனுக்கு மூன்ரும் தாரமாகக் கொடுத்துச் சிறிய தகப்பனர் தனது பொறுப்பை நீக்கிக் கொண்டார்.

சிவக்கொழுந்தி அவனேடு நீண்ட நாட்கள் வாழவில்லே. இவளே அவன் கண்ட நேரமெல்லாம் உதைத்தான். இவளின் அளவுக்கு மீறிய அழகும் இளமையும் அவனே இப்படி இவளே உதைக்கவைத்தது! அதற்குப்பின் சீதேவி அம்மாள் வீட்டுக்கு அவள் வந்து சேர்ந்து விட்டாள்.

சீதேவி அம்மாளுக்கு இழுப்பு நோய் சிவக்கொழுந்தியின் துணே அவளுக்குப் பேருதவியாகி விட்டது.

ஒரு நாள் நல்ல மத்தியான நேரம்.

இராசரத்தினத்தார் எண்ணெய் முழுக்குக்காக உடம்பையெல்லாம் எண்ணெயாய் குளிப்பாட்டி வெய்யில் சாய்ந்து கொண்டிருந்த வேளே—

சிவக் கொழுந்தியின் கணவன் வந்தான்.

அவனுக்குச்சிறிது 'தண்ணி!' பெரியவர் இராசரத்தினத்தாருக்கோ அதைவிடத் தண்ணி! எண்ணெய் முழுக்கு நாளல்லவா'.

''ஐயா, என்ரைமனிசியை என்னேடை விட்டிட வேணும!''

-வந்தவன் கேட்டான்,

''விடாட்டில் என்ன செய்வீர்?'

— பெரியவர் கருகலாகக் கேட்டார்.

''மேடர் தான் விழும்!''

''என்னடா சொன்னனீ?''

என்று கேட்டுக் கொண்டே பெரியவர் அவன் மேல் பாய்தார்.

அவனும் விடவில்லே.

இருவருக்கும் ஒத்த வயசு சனக் கூட்டம் வந்து கூடுவதற்கிடையில் முடிந்தளவு இவரை உதைத்து விட்டுப் புத்திசாலித்தனமாக வெளியேறி விட்டான் அவன். போகும் போது கூறினனே ஒருவார்த்தை!

''டேய், என்ரைபெண்டிலேக் கொண்டு வந்து உன்ரை வீட்டிலே வைச்சிட்டியோ. உன்னே என்ன செய்யிறன் பார்......''

அவன் போய்விட்டான்.

இராசரத்தினத்தாரின் எண்ணெய் ஊறவைத்த உடம்பில் முற்றத்துப்புழுதி யெல்லாம் அப்பியிருந்தது.

சிவக்கொழுந்தி ஏங்கியபடி முற்றத்தில் நின்ருள்.

சீதேவி அம்மாள் இழுப்புடன் நடுக்கதவுவரை வந்து நின்று ஏங்கினுள்.

இராசசுந்தரத்திற்கு அப்போது வயது எட்டு இருக்கும். சிறுவன் இராசசுந்தரம் எங்கோ நண்பர்களுடன் வெளியே போயிருந்தான்.

பின்பு ஒருநாள் சிவக்கொழுந்தின் கணவன் காக்கைதீவுச் சுடலேப் பூவரச மரத்தில் தொங்கியபடி செத்துப் போய்க்கிடந்தான்.

அன்றையிலிருந்து அந்தச் சுடலேக்குத் தூக்குமரக்காட்டுச்சுடலே' என்றே பெயர் வழங்கிவருகிறது.

அவன் தூக்குப் போட்டுக் கொண்டுதான் செத்துப் போனுன் என்றுதான் முடிவாயிற்று.

அவனது சடலம் வீட்டுக்கு எடுத்தவரப் பட்டபோது அன்று காலேயிலேயே அவன் வீட்டுக்குவந்து அவன் பிரேதத்தில் விழுந்து புரள்வதற்காகக் காத்திருந்தாள் சிவக்கொழுந்தி

எட்டுச் செலவும், அந்தியேட்டியும் முடியும்வரை வீட்டோடு இருந்தசிவக்கொழுந்தி அந்தியேட்டி முடிந்த மறுநாளே பெரியவர் இராசரத்தினத்தார் வீட்டுக்குவந்தவள் இன்றுவரை உறவினர்கள் வீட்டு நன்மைதீமைகளுக்கென்று ஒரு எட்டோ பத்தோ தடவைகள்தான் போய்வந்திருக்கிருள்! இராசரத்தினத்தார் அவளே அதிகம் வெளியே போகவிடுவதில்லே.

இடையே சீதேவி அம்மாளும் செத்துப்போனுள்!

இராசசுந்தரமும் தனிக்காட்டுராஜாவாக வளர்ந்து வட்டுக்கோட்டைப் பாடசாலேப் போடிங்குவரை போய் விட்டார்.

சிவக்கொழுந்திதான் அந்த வீட்டு வேலேக்காரி, அடிமை உட்படச்சகலதும்!

இன்றுவரை அப்படித்தான்!

நேரம் நடுராத்திரிக்குக்கிட்டவாக வந்திருக்கவேண்டும்.

சத்திரத்துச்சந்திப் பொன்னம்மா மில்லின் காவல்காரன் தொங்கக் கட்டப்பட்டிருந்த பெரும் அகலச்சேமக்கலத்தில் அடிக்கும் ஓசை கணீரெனக் கேட்டது.

பண்டாரி ஒவ்வொரு அடிக்கும் விரல்களே மடக்கிப்பார்த்தான். பத்துவிரலும் மடக்கப்பட்டு கால்விரலில் ஒன்று வரையில் வந்து முடிந்தது.

பெரியவரை இன்னும் காணவில்லே

பண்டாரிக்குக் கண்ணேச் சுழற்றியது.

மடித்த முழங்காலில் தலேயைப்புதைத்துக் கொண்டே அவன் தூங்கிப்போனுன்.

எவ்வளவு நேரந்தான் அவன் அப்படித்தூங்கினுனே?

வெளியே குதிரைகளின் பெருஞ்சதங்கைச் சத்தங்கள் கேட்டன.

பண்டாரி திடுக்குற்று முழங்கால்மடிப்புக்குள் இருந்து தலேயை நிமிர்த்தினன்.

மரப்படலே திறக்கப்பட்டது. நான்கைந்துபேர் நடந்து வந்தனர் அவர்களில் ஒருவன் வெள்ளே வெளேரென்ற பொலிஸ் அதிகாரி.

அவன்கையில் சற்றுக்கட்டையான- வழுவழுப்பான- தடி ஒன்றிருந்தது.

அவன் அநாயாசமாக அதைச்சுழற்றிக்கொண்டேவந்தான்.

பண்டாரிபயந்து போனுன். 'சின்னவரைக் கொண்டுபோய் றெயிலில் ஏத்தினத்துக்கு என்னேப்பிடிக்க வாருனுக்கும்:'

இப்படிமனதுள் எண்ணி ஏங்கினுன்.

வந்தவர்கள் இராசரத்தினத்தார் முன்செல்ல எல்லோருமே வாயில்படியேறி உள் கூடம்வரை போயினர்

பண்டாரி இருப்பதைக் கடைக்கண்ணுல் கவனித்தும், இராசரத்தினத்தார் ஒன்றும் பேசாமலே உள்ளேபோனுர்.

விருந்தையில் இருந்த சிங்கப்பூர் மான்ரில் லாம்பினேச் சிவக்கொழுந்தி எடுத்துச் சென்ருள்.

இப்போது பண்டாரி இருளுக்குள் இருந்தான்.

சற்றுவேளேக்குள் சிவக்கொழுந்தி, சிறிய சிமிளி லாம்புடன் வெளியே வந்தாள். வந்தவள், ''பண்டாரி, உன்னே ஐயா இருக்கெட்டாம்; போகவேண்டாமாம்! போகிடாதை!'' என்று பண்டாரியிடம் கூறிவிட்டுச் சென்ருள்:

கடைசியாக அவள் 'போகிடாதை!'' என்று கூறிய அந்த வார்த்தை மறுபடியும் பண்டாரியின் நெஞ்சுக்குள் புயலேக் கிளப்பிவிட்டது.

(தொடரும்)

## பொறுமை இழந்து பாடிய கவிஞர்கள்

கடந்த 19 2 84 'ஈழநாடு' வாரமலரில் வாட்டும்வெயிலில் பாட்டுப்பிறந்தது என்னும் தலேப்பின் கீழ் மறைந்த கவிஞர் இ. நாகராஜன் உட்பட நான்குபிரபல கவிஞர்கள் 1970 ல் அனலேதீவு கவியரங்க நிகழ்ச்சிக்குச் சென்றபோது ஏற்பட்ட அனுபவத்தை நகைச்சுவையாகக் கிண்டல் செய்து பாடிய கவிதையைக் கண்ணுற்றேன். பொறுமை இழந்து வாட்டும் வெயிலில் பாட்டுப்பாடிய அந்தக் கவிஞர்களேப் போன்று மறைந்த கவிஞர் ''வன்னியூர்க்கவிராயர்'' அவர்களும் ஒருசமயம் பாடிய கவிதையை இங்கு குறிப்பிடுகின்றேன்.

1973ல் கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் கலாசாரப் பகுதியினரால் கலே விழா ஒன்று நாடாத்தப்பட்டது. குறித்த விழாவில் கவியரங்கமும் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்றிருந்தது. கவியரங்கில் கலந்துகொள்ள வருகைதந்த கவிஞர் 'இராஜபாரதி' கவிஞர்கள் வன்னியூர்க்கவிராயர், 'கலியுகன்' 'பங்கையமணுளன்' ஆகியோருடன் விழா அமைப்பாளர் கதையோடு கதையாக நிகழ்ச்சியில் பங்குபற்றும் கவிஞர்களுக்குப் பிராயாணச் செலவு ஏதும் வழங்கப்படமாட்டாது என்று கூறிவிட்டார். கவிஞர் 'இராஜபாரதி' தலேமையில் கவியரங்கு ஆரம்பமாகியது. கடைசியாகக் கவிமழை பொழிந்த 'வன்னியூர்க்கவிராயர்' அவர்கள் கீழ்க்கண்டவாறு தமதுகவிதையை முடித்தார். அவர்பாடிய கவிதை இதோ!

''கலே விழா நடாத்தி
மகிழ்வு காணும்
கிளிநொச்சிக் கலாசாரப்
பகுதியினர்
கலேஞர் கவிஞர்களின்
கையைக் கடிக்காமல்
கடுகளவேனும் கொடுத்துதவுதல் வேண்டும்...''

ஜெயந்திநகர்

க. இரத்தினசிங்கம்.

## இளைய நிலா பொழியுமா?

வானம் 'துமிககிறது' என்பதற்கும் வானம் 'பெய்கிறது' என்பவற்கும் வானம் 'பொழிகிறது' என்பதற்கும் வேறுபாடு உண்டு. இந்தமூன்று சொற்களேயும் நோக்கும் போது ,பொழிகிறது என்ற சொல்லின் தாககம் நன்கு புலப்படும்.

அண்மையில் வெளி வந்த ஒரு திரைப் பாடலின் ஆரம்பம் 'இளைய நிலா பொழிகிறதே.' பாடலின் ஆரம்பமே கருத்தற்றதாக மரபுக்கு மாறுபட்டதாக இருக்கிறது. இளம் பிறைச் சந்திரன் என்று கூறும் மரபு இறைவன் முடியில் இருக்கும் ஒரு கலேயடைய பிறையையே பெரும்பாலும் குறிக்கும். நாம் வேண்டுமானுல் இரண்டு மூன்று நான்கு ஐந்து கலேயுடைய சந்திரனேயும் இளைய நிலா என்று குறிப்பிடலாம். இத்தகைய கலே குறைந்த இளைய நிலா எப்படிப் பொழிய முடியும்.

கலே முழுவதும் நிரம்பப் பெறற பூரணச் சந்திரனுக்குத்தான் பொழிதல் என்ற சொல் பொருந்தும். அதனுல் இளைய நிலா பொழிவதில்லே.

--'சுந்தரா'

ரகு: சாப்பாட்டிற்குக் கஷ்டம் என்கிருய். கலியாண வீடுகளுக்குத் தவருமல்போய் பணம் கொடுக்கிருயே, எப்படி!

ராமு: பத்துரூபா கொடுத்துவிட்டு நன்ருகச் சாப்பிடுகிறேன். திரும்பும்போது காலில் நல்ல ஒரு சிலிப்பரையும் அல்லவா மாறிக் கொண்டு வருகிறேன்.

- ஜனனி

# தமிழ்மொழிப்பற்றும் திருமுறைப் பயிற்சியும் மிக்க பரஞ்சோதி முனிவர்

றைவனுடைய அறுபத்துநான்கு திருவிளையாடல்களும் நடைபெற்ற இடம் மதுரை. தென்பாண்டி நாட்டான் என்று இறைவன் போற்றப்படுவதற்கு மதுரையம் பதியே இடமாக அமைந்தது. திரிபுரம் எரித்தவிரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்தகுமரவேளும் புலவர்களாக இருந்து தமிழ் ஆய்வுக்கு வழிகாட்டிய இடம்மதுரை. ''கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்'' என்று பாடிய மாணிக்கவாசகர் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த சிறப்பை அழகாக விளக்குகிறார். முத்தமிழையும் வளர்த்த இடம் மதுரை. பாணபத்திரன் என்ற இசைவல்லான் பொருட்டு இறைவனே இசைப்போட்டி நடாத்திய இடம் மதுரை. வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகிய முனிவர்கள் தரிசிக்கும் பொருட்டு இறைவன் திருக்கூத்தாடிய இடம் மதுரை.

பூசை செய்க அப்பூசனை முடிவில்
மூலமந்திர நூற்றுஎட்டு நூற்றெட்டு முறையினல் ஆகுதி முடித்தல்.'' எனவிளக்குகிறார்.

இப்பதியில் வாழ்ந்த மக்களுக்கு அறச்சிந்தனை நிரம்ப உண்டு என்பதற்குரிய சான்றுகளாக திருநாட்டுச் சிறப்பிலே பின்வரும் பாடல்இடம் பெற்றுள்ளது.

''வெம்மையால் விளைவு அஃகினும் வேந்தர்கோல் கோடிச்
செம்மை மாறினும் வறுமை நோய் சிதைப்பினுஞ் சிவன் பாற்
பொய்ம்மை மாறிய பக்தியும் பொலிவுகுன் றுவாய்த்
தம்மை மாறியும் புரிவது தருமமந் நாடு.''

மதுரை மாநகர் அங்கையற்கன்னியையும் ஆலவாய் அப்பனையும் போற்றி வழிபட்ட பக்தர்களைத் தன்னகத்தே கொண்டதால் அதன் சிறப்பு மேலும் மேலும் உயர்ந்துள்

முழவும் கண்துயிலாதது மன்னவன் கோயில்.''

இசையின் எழுச்சியையும் சிறப்பச் சிறப்பையும் இன்றும் எமக்குக் காட்டிநிற்கும் திருநகரம் மதுரைஎன்றால் அதில் மிகையொன்றுமில்லை.

## பரஞ்சோதியாரின் தமிழ்ப்பற்று

பதினாறும் நூற்றாண்டிலே வாழ்ந்த பரஞ்சோதிமுனிவர் இருமொழிகளையும் ஐயந்திரிபறக் கற்றவர். சங்கஇலக்கியங்களிலும் திருமுறைகளிலும் நிறைந்தபயிற்சி மிக்கவர் எல்லாவற்றிலும் மேலாகச் செந்தமிழ்ப்பற்று மிகுதியும் வாய்க்கப்பெற்றவர். வடமொழியைப் போற்றாத புலவர்கள் வாழமுடியாத ஒரு நிலை அக்காலத்திலிருந்தது

ஆனால் வைராக்கிய சித்தத்தோடு தமிழைப்போற்ற வேண்டிய இடத்தில் போற்றிப் பாடிநூலை அரங்கேற்றிய சிறப்பு இவருக்கு உண்டு. இறைவனே தமிழ்ப்பிரியன் என்பதற்கு ஒரு பாடல்:-

கடுக்கவின் பெறு கண்டனும் தென்திசை நோக்கி
அடுக்க வந்து வந்து ஆடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென்கால் திருமுகத்திடை வீசி
மடுக்கவும் தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ''

சிவபெருமானே தெற்குத் திசையை நோக்கித் திருக்கூத்தாடுகிறானும். ஏனென்றால் இன்பத்தமிழை நுகர்ந்து திருச்செவியில் ஏற்றுவதற்காக அந்தஆட்டம் தெற்கே மதுரையம்பதியை நோக்கி நடைபெறுவதாகத் காட்டுகிறார். தமிழ்மொழி ஏனைய மொழிகளோடு சமமாக வைத்து எண்ணப்படுதற்கு உரித்தன்று எனவும் அது எல்லா மொழிகளிலும் மேம்பாடு உடையது எனவும் விலக்குவது பின்வரும் பாடல்:-

',கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந் தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழி போல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ.''

தமிழின் ஒப்பற்ற பெருமையை மிகத்துணிவோடு எடுத்துக்காட்டிய பரஞ்சோதியாரின் தமிழ்ப்பற்றுப் பெரிதும் போற்றுதற்குரியது. மூவர் தமிழையும் அவற்றின் அற்புதங்களையும் எடுத்துக்காட்டிய இடத்திலும் ஆசிரியரின் வீறு கொண்ட கருத்துத் தொனிக்கிறது கன்னித்தமிழே எம்பெருமானையும் உருகவைத்து அற்புதங்களை உலகத்துக்குக் காட்டியது என்றும் வேறு எந்தமொழிக்கும் இவ்வகை ஏற்றம் இருந்திருக்கவில்லையென்றும் பாடுகிறார்

இரவிலே பரவையாரிடம் இறைவனைத் தூதனுப்பியது தமிழ்; முதலையால் விழுங்கப் பெற்ற பாலனைத்திருப்பி அழைத்துத் தந்தது தமிழ்; எலும்பைப் பெண்வடிவாக்கியது தமிழ்; அடைக்கப்பட்ட கதவைத் திறக்கவைத்தது தமிழ் எப்படியெல்லாம் ஏற்றமுறு தமிழைப் போற்றிப் பாடுகிறார்.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்பு பெண் உருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

என்றபாட்டில் இன்பத் தமிழின் பெருமை எத்துணை அழகாகக் காட்டப்பட்டுள்ளது

## இறைவனின் எளிவந்த கருணை

பசு, பதியாகிய இறைவன் எல்லாஉயிர்களுக்கும் இரங்கி அருள்பாலிக்கிறான் என்பதைப்

(12ம் பக்கம் பார்க்க)

சைவபுராணங்கள் — 6

பண்டிதை **தங்கம்மா அப்பாக்குட்டி**

இதனாலேயே மதுரையை வெள்ளியம்பலம் என்று கூறுவர். மதுரையம்பதியில் வாழ்ந்த மக்கள் தத்தம் ஒழுக்க நெறியில் நின்று சைவசித்தாந்திகளாக ஒழுகுவது பற்றிப் பல பாடல்களில் விளக்கப்பெற்றுள்ளது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளில் நின்று மக்கள் உய்தியடைந்தனர் என்ற சிறப்பை இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலத்தில்.

''காலையில் ஆசான் சொல்வழி நித்தக் கடன் முடித்து
உச்சி தொட்டுஅந்தி
மாலையின் அளவும் புராண நூல் கேட்டுமாலை தொட்டி
யாம மோர் நான்கு
சேலன கண்ணுள் பங்கனைப்

ளது. இல்லங்களிலே பக்தி மிகுந்த பெண்கள் அம்மையையும் அப்பனையும் எந்நேரமும் நாமஞ் சொல்லிப் போற்றுவதைக் கேட்டகிளிகளும் நாகணவாய்ப் பட்சிகளும் அதனையே தாமும் சொல்லிப் பயிலுவதை அழகாகக் காட்டுகிறார் நூலாசிரியர்.

அதுவுமன்றி மதுரைக் கோவிலிலே கேட்கப்படும் இசைமுழக்கம் பற்றி ஒரு பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

''குழலும் தும்புரு நாரதர் பாடலும் குனித்துச்
சுழலும் கொம்பனார் ஆடலும் மூவர் வாய்த்துதியும்
விழவின் செல்வமும் சுருதியும் திசையெலாம் விளங்கும்


வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்
* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்,

8, மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154


தமிழ் தந்த தாதாக்கள்

# திருவாரூர் தேவாசிரிய மண்டபம்கண்ட ஈழத்துக் காவியம்

க. சி. குலரத்தினம்

யாழ்ப்பாணத்து நல்லூரை அழகுபடுத்தி இராசதானியாக்கி ஆண்ட பரராசசேகரனுடைய தம்பி செகராசசேகரனும் இவர்களின் மருமகன் அரசகேசரியும் முத்தமிழ்ப் புலவர்கள். மூவரும் தமிழை முறையாகக் கற்ற வித்தகர்கள். இவர்கள் முன்னரும் இவர்களுக்கு பெயர்கள் தாங்கியவர்கள் புலவர்களாய் வாழ்ந்தார்கள் என்ப. யாழ்ப்பாணத்து அரச குடும்பம் அறிவாளிகள் குடும்பம்.

செகராசசேகரன் என்னும் பெயர் பூண்ட ஒருவனே செகராசசேகரம், செகராசசேகரமாலை' தட்சணகைலாச புராணம், கண்ணகி வழக்குரை முதலிய நூல்களையெல்லாம் செய்த பெரும் புலவன் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். செகராசசேகரன் ''சேது காவலன் ,விஞ்சை விஞ்சு செகராசசேகரன்,, என்று விருதுப்பெயரும் பீடும் பெருமையும் பெற்றவன் என்பர்.

## சங்கம் கூடித் தமிழ் வளர்த்தனர்

இனி, நல்லூரைத் தலைநகராகக் கொண்டு 1478 முதல் 1519 வரையும் அரசு செய்த பரராசசேகரனும், தம்பி செகராசசேகரனும், மருகன் அரசகேசரியும் அரண்மனைக்கு அண்மையில் தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பித்து பெரிய நூலகத்தையும் புனரமைத்து மறுமலர்ச்சி உண்டாக்கிய காலத்தில், வடக்கேயிருந்து தமிழ்நாட்டுப் புலவர்கள் நூற்றுக்கணக்கில் நூல்களைச் செய்தும், பழைய நூல்களைப் படியெடுத்தும் வந்து சங்கம் கூடித்தமிழ் வளர்த்தனர்.

நல்லூரின் கிழக்கில்நாயன்மார்கட்டு என்னும் ஊரின் நடுவண் அமைந்த தாமரைக் குளத்தருகில் மாடி மாளிகையில் வாழ்ந்த அரசகேசரி, புலவர் சிகாமணியாயிருந்தார். வடமொழி தென்மொழிகளிற் பெரும் பாண்டித்தியம் பெற்ருந்த அவர் புலவர்மணி காளிதாசன் செய்த காவியங்களில் ஈடுபாடு கொண்டு, அவற்றில் ஒன்றான இரகுவம்மிசம் என்னும்இதிகாசகாவியத்தை இனியதமிழில் மொழி பெயர்த்து இயற்றினார். இராகுவம்மிசம் என்னும் பெயர் சூட்டி இவர் செய்த காவியம்' முதல் நூல் போல இறுக்கமானது, கடின நடையுடையது.

வடமொழிக் காவியத்தில் அமைந்த அழகும் சுவையும் குன்றமல் இவர் செய்த காவியத்தை நல்லூர்த் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றிய போது, வந்திருந்த புலவர்கள் இந் நூல் நைடதம் போல் புலவர்களுக் கெல்லாம் ஔடதம் எனப் புகழ்ந்தனர்.

## இரகுவம்மிச அரங்கேற்றம்

தமிழ் நாட்டில் சோழ மன்னர்களின் தலைநகரங்களில் ஒன்று திருவாரூர் தெய்வமணங்கமழும் திவ்வியம் பழுத்த செந்தமிழ் நகரத்தில் கூடிய புலவர்கள் மத்தியில் ஈழத்தில் எழுந்தஇரகுவம்மிசம் என்னும் காவியம் அரங்கேறிய வைபவம் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர்களுக் கெல்லாம் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது.

தன் மருகனாய புலவர் பெருமான் பெற்ற பெருமான் சிறப்பைக் கண்ணாற் கண்டும் காதாற் கேட்டும் மகிழ்ந்த பரராசசேகரமன்னன்' தானுங் கூடவிருந்து அரங்கேற்றத்தின் போதுஇரகுவம்மிசத்தின் இன்சுவை நுகர்ந்தான் என்று பாயிரச் செய்யுள் பாடுகிறது சடையப்ப வள்ளல் கம்பர் கவியில் புகழ் பெற்றாற் போல பரராசசேகரன் அரச கேசரியின் பாடல்களில் புகழ் பெற்றுள்ளான்.

இன்ன காதை யியன்ற விரும்பொருட்
டுன்னு செஞ்சொற் றுகடபு தூயநூல்
பன்னு செஞ்சொற் பரராச சேகர
மன்ன னின்ப மனங்கொள வாய்ந்ததே,,

பரராசசேகரன்உடனமர்ந்து கேட்கக் கிடைத்த அரசகேசரியின்இரகுவம்மிசக்கொடையை முன்னர் வான்மீகிராமாயணத்தைத் தமிழில் தந்த கம்பராமாயணக் கொடை போல மக்கள் மதித்து மகிழ்ந்தனர். கவிஸார்வ பௌமாரரான காளிதாசர் செய்தரகுவம்மிசம் மஹாகாவியம் எனவே புகழ் பெற்றது. அலங்கார சாஸ்திரத்திலே கூறப்பெற்ற அழகு

(12ம் பக்கம் பார்க்க)

# இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் தளர்வினால் தமிழ் வர்த்தகர் தலையெடுக்கலாயினர்

1977 பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கட்டுப்பாடுகள் நிறைந்த பொருளாதாரக் கொள்கைக்குப் பதிலாகத் திறந்த பொருளாதாரக்கொள்கையும், இறக்குமதிப் பதிலீட்டின் இடத்தில் ஏற்றுமதி மேம்பாட்டையும் வேண்டி நின்றது. ஆகவே புதிய சூழ்நிலையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் யாவும் தளர்த்தப்பட்டதும் இது வரை பாதுகாக்கப்பட்ட உள் நாட்டுச் சந்தையொன்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய பல நுகர் கைத்தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அரசாங்கம் சலுகைகள் வடிவில் ஆதரவு வழங்கிக்கொண்டிருந்த நிலை துண்டிக்கப்பட்டுத் திறந்த சந்தையில் திறமையுடைய எவரும் யாருடனும் போட்டியிடலாம் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது. எனவே தமிழ் மக்களுடன் ஒப்பிடும்போது சிங்கள மக்கள் சலுகை பெற்றிருந்த நிலையும் இப்போது பெருமளவு நீங்கிப் போயிற்று. அது மாத்திரமன்றி இறக்குமதியின் மீதான தடைகளும் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டிலிருந்து ஏராளமான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் வர்த்தக நடவடிக்கைகள் மிக வேகமாகவும் பெருமளவிலும் அதிகரித்திருந்தன.

## கட்டுப்பாடுகள் நீங்கின

வர்த்தகத்தின் மீதிருந்த பல வகையான அரசாங்கக் கட்டுப்பாடுகளும் ஏறக்குறைய முற்றாகவே நீங்கிப் போயின. ஆகவே தமிழ் வர்த்தகர் மீண்டும் தமது திறமையை வெளிக் காட்டுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. இந்த வாய்ப்பினை அவர்கள் தகுந்தபடி பயன்படுத்தவும் தவறவில்லை. பல சந்தாப்பங்களில் சிங்கள வர்த்தகரை விடத் தமிழ் வர்த்தகரும் முஸ்லிம் வர்த்தகருமே குறிப்பிட்ட சில பொருட்களிலான வர்த்தகத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர் எனலாம். இந்நிலையில் சிங்கள வர்த்தக நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றது என்ற குற்றச் சாட்டும் படிப்படியாக ஏற்படுவதைக் காணலாம்.

## தனியார்துறை

தொழில் வாய்ப்புக்களைப் பொறுத்த வரையிலும் சிங்கள மக்கள் இது வரை பெற்றிருந்த சாதக நிலை மாறுபட ஆரம்பித்தது. கூட்டுத்தாபனங்களை மையமாகக் கொண்ட விரிவாக்கம் முற்றாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பு தனியார் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. ஏற்றுமதி மேம்பாடு பொருளாதாரக் கொள்கையின் முக்கியசுலோகமாகஇருந்தவிடத்து சுதந்திர வர்த்தக வலயத்திலும் அதற்குப் புறம்பாகவும் ஆரம்பிக்கப்பட்ட பல நிறுவனங்களும் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டவைவாக இயங்க வேண்டியிருந்தன. இந் நிலையில் நிறுவனங்களின் அலுவல் மொழியாச் சிங்களத்தை வைத்திருப்பது நடைமுறையில் பயன் கொடுக்கவில்லை. ஆகவே ஆங்கிலம் முக்கியத்துவம் பெறலாயிற்று. விரைவான வளர்ச்சிக்குட்பட்டிருந்த சுற்றுலாத் துறையிலும் இதே நிலைதான் காணப்பட்டது. எனவே இதுவரை நிலவியது போல அரசியற் சலுகையின் அடிப்படையில் தொழில் வாய்ப்புப் பெறுவது முடியாத காரியமாயிற்று. இவ்வாறு அரசியற் சலுகைதனது முக்கியத்துவத்தை இழக்கக் கூடிய வகையில் அரசாங்கம் தனது மிகையான பெரும்பான்மையைப் பயன்படுத்தி அரசியற் திட்டத்திற் பல மாற்றங்களைச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது, இவற்றின் மூலம் சலுகை மறுக்கப்பட்டவர்கள் வாக்குப் பலம் கொண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்கக் கூடிய சந்தர்ப்பத்தையும் இழந்திருந்தனர். இவ்வாறான ஒரு நிலை தமிழ் மக்கள் தமது திறமையைப் பயன்படுத்தித் தொழில் வாய்ப்புப் பெறுவதை ஊக்குவித்திருந்தது.

## பொருளாதார வாய்ப்பு

இவ்வாறாகப் பல வகைகளிலும் 1977 முதல் மாறுபட்ட பொருளாதாரச் சூழல் தமிழ் மக்களைப் பொறுத்த வரை பல பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்தியது உண்மை. இந்த வாய்ப்புக்களால் நன்மை பெற்றோர் குறிப்பாகத் தமிழ் வர்த்தக சமூகத்தவர் தமிழ்த் தேசியவாத உணர்வையும் ஓரளவிற்குத் தணித்து அரசாங்கத்துடன் இணக்கம் காண்பதற்கான ஒரு சூழ்நிலை

**இறக்குமதிக் கட்டுப்பாடு இருந்தவேளை சிங்கள வர்த்தகர்கள் உயர்வு பெற்றனர் கட்டுப்பாடு தளர்த்தப்பதும் தமிழ் வர்த்தகர்கள் தலையெடுத்தனர்**

வையும் உருவாக்க முயன்றனர். அரசாங்கமும் அதற்கேற்பச் சில சலுகைகளைத் தமிழ் மக்களுக்கு வழங்க முன்வந்ததுடன் அவர்களில் ஒரு சிலரைத் தன்னுடன் சேர்த்துக் கொள்வதிலும் வெற்றி கண்டிருந்தது. எனினும் தமிழ் தேசியவாதம் பொறுத்து 1970 களின்ஆரம்பத்தில்நிலவிய நிலை 1977க்குப் பின்பும் கூடியளவு உண்மையுடையதாயிருந்தது. அதாவது பல வேறு சக்திகளின் செல்வாக்கினுட்பட்டு அது ஏற்கனவே பெற்றிருந்த நிரந்தரத் தன்மை காரணமாக அதனை எந்த வகையிலும் அளித்துவிட முடியவில்லை. தமிழ் மக்களிலேயே ஒரு சாரார் அதனை விட்டுக் கொடுக்க முன் வந்தவிடத்து கூட அவர்கள் அந்த முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை. இவ் வகையில் தமிழ்த் தேசியவாதம் மிதவாதத் தலைவர்களின் கைகளிலிருந்து விடுபட்டு ஒன்றுக்கு மேற்பட்ட தீவிரத்தன்மை கொண்ட இளைஞர் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் சென்றிருந்தமை முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய தொன்றாகும். அவை தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பலாத்காரத்தையும் தாராளமான முறையிற் கையாள முன் வந்தனர். தமிழ் மக்கள் பொதுவாக எதிர் நோக்கிய ஒழிப்பு நிலைக்குச் சிங்கள மக்கள் மத்தியிலிருந்த பலமான எதிர்த் தாக்குதல் இந்தப் போக்கிற்கு மேலும் தூபம் போடுவதாயிருந்தது.

## தமிழ் வர்த்தகர்கள்

தமிழ்ப் பிரதேசங்களிலான பயங்கரவாத நடவடிக்கைகளே 1977 முதல் அடிக்கடி இடம் பெற்ற இனக்கலவரங்களுக்குரிய காரணமெனப் பொதுவாக எடுத்துக் கூறப்பட்டாலும் திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதன் வழி தமிழ் மக்கள் குறிப்பாகத் தமிழ் வர்த்தகர் எதிர் நோக்கிய செழிப்பும் இவற்றின் பின்னணியில் இயங்கிபதை மறுக்க முடியாது. இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் காலத்தில் தம்மை நன்கு தாபித்துக் கொண்ட உயர் மட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனங்கள் (அவை சிங்கள மக்களுடையதாயுனும் சரி தமிழ் மக்களுடையதாயினும் சரி) அக் கட்டுப்பாடுகள் நீங்கிய காலத்திற் கூட எதுவித பாதிப்புமின்றி இயங்கக் கூடிய தரத்தை அடைந்திருந்தன. அவற்றிற் பல வெளிநாட்டு ஏற்றுமதியாளராயும் மாறியிருந்தன. ஆனால் நடுத்தர கீழ் நடுத்தர நிலைகளிலிருந்து அரசாங்கம் அளித்த பாதுகாப்பையும் ஆதரவையும் நம்பிப் பல வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருந்த சிங்கள மக்கள் அத்தகைய பாதுகாப்பும் ஆதரவும் நீங்கியதும் நட்டாற்றில் விடப்பட்டவர்கள் போலானார்கள். புதிதாக விரிவடைந்த வர்த்தக வாய்ப்புக்களை நீண்ட காலமாக அதிலேயே தங்கியிருந்த தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் பெருமளவிற் கைப்பற்றிக்கொண்டிருந்தனர். அவர்களுடன் போட்டியிடக்கூடிய வல்லமை தமக்கு இல்லையென்பதைச் சிங்கள முயற்சியாளர் உணர்ந்திருந்தனர். மேலும் நீண்ட காலமாக அரசாங்கப் பாதுகாப்பு அதன் சலுகைகள் ஆதரவு என்பவற்றிற் பழக்கப்பட்டிருந்த இவர்கள் அவற்றைப் புதிய அரசாங்கம் வாபஸ் வாங்கிக் கொண்டதும் செய்வதறியாது திகைத்தனர். அதே நேரத்தில் இன்னொரு சாரார் பதிய சூழலைப் பயன்படுத்தி வேகமாக முன்னேறுவதும் இவர்களுக்குத் தெரிந்தது. தமது எதிர்ப்பை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துவதற்கான சாதனங்களும் அருகிவிட்டநிலையில், அரசாங்கக் கொள்கையால் நன்மையடைந்தவர்களுக்கெதிராகவே தமது விரக்தியைக் கட்டவிழ்த்து விட்டனரெனலாம். அரசாங்கம் பின்பற்றிய கட்டற்ற கொள்கையின்கீழ் இதுவரை நாட்டு மக்களிடையிலான வருமானத்தைச் சமப்படுத்துவதிற்கு உதவியாயிருந்த நலன்புரி நடவடிக்கைகள் பலவும் ரத்துச்செய்யப்பட்டதால் சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்தோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர் இதன் விளைவாக, முக்கியமாக நகர்ப்புறங்களில் வறிய ஒரு கூட்டத்தினரும் வளர்ச்சியடைந்திருந்தனர் இவர்கள் வர்த்தகச் செழிப்பின் மத்தியில் அதன் பலாபலன்களை அது பலித்துக் கொண்டிருந்தோருக்கு அருகருகே வாழ்ந்த காரணத்தினால் அதன்மூலம் உருவாகிய செயல்விளக்கத் தாக்கத்தினாற் பெரும் விரக்தி நிலைக்கு உள்ளாகக் கூடியதாயிருந்தது செழிப்பு நிலையினால் நன்மை பெற்றோரிற் கணிசமான ஒரு தொகையினர் வேறொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தவிடத்துத் தமது வெறுப்பைச் சந்தர்ப்பம் ஏற்படும்போது அவர்கள்மீது நேராகவே காட்டுவதற்கு இவர்கள் தயங்கவில்லை.

## இனக்கலவரமும் தமிழ் வர்த்தகமும்

1977முதல்இனக்கலவரங்கள் அடிக்கடி ஏற்பட்டமைக்கும் இவற்றின்போது தமிழ் வர்த்தக நிறுவனங்களே முதல் இலக்காகவும், தமிழ்மக்களின் உடமைகள் இரண்டாவது இலக்காகவும் அமைந்தமைக்கும், அரசாங்கத்தின் மாறுபட்ட பொருளாதாரக் கொள்கை. மேற்கூறியவகையில், சிங்கள சமூகத்தின் சில மட்டங்களில் ஏற்படுத்திய பாதிப்பும் அதனால் உருவாகிய விரக்தியும் காரணமெனலாம் இத்தகைய போக்கின் உச்சக் கட்டமே 1983 ஜூலை கலவரங்கள் எனலாம் இதில் தமிழ் மக்கள் சில துறைகளில் அனுபவித்த வர்த்தக முதன்மை பலவந்தமான முறையில் முற்றாக முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது மறுபுறம் இவ் வளர்ச்சிகளுடன் பெருமளவு தொடர்பற்றவகையில தன்னிச்சையான முறையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த தமிழ்த் தேசியவாதத்தின் பலாத்கார வெளிப்பாடுகள் கலவரங்களுக்குச் சாக்காக அமைந்தன. ஆனால் இவ் வெளிப்பாடுகள் அரசாங்கப் படைகளுக்கு எதிராகவும், தமிழ்மக்கள் மத்தியிலே ஒரு சிலருக்கு எதிராகவும் ஏற்பட்டனவே தவிரச் சிங்கள மக்களுக்கு அல்லது தமிழ்ப்பகுதிகளிலிருந்த சிங்கள வர்த்தகருக்கெதிராக இடம்பெறவில்லையென்பது கவனிக்கத்தக்கது.

ஆகவே இங்கு அரசாங்கப் பொருளாதாரம் கொள்கையின் தாக்கம் ஓர் இரண்டாந்தர நிலையிற் சிங்கள மக்களுக்கூடாக அவர்களுடைய எதிர்ப்பாகத் தமிழ்மக்கள்மேல் பிரதிபலிப்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது இரண்டாந்தர நிலையில் ஏற்பட்டாலும் முந்திய கொள்கைகளைப் போல ஒரு காலம்தாழ்ந்த, மறைமுகமான பாதிப்பை ஏற்படுத்தாது திடீரெனப் பலாத்காரத்துடன் இணைந்து வெடிப்பது இதன் சிறப்பம்சமாகும். இத்தகைய சிங்கள எதிர்த்தாக்குதல்களின் விளைவு என்ன என்பதுபற்றி அதிகம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. முன்னர் நாம்குறித்த விளைவிலிருந்து வேறுபட்ட வகையிலும் அது அமையவில்லை. ஏற்கெனவே உச்சக் கட்டத்தை அமைந்திருந்த தமிழ்த் தேசியவாத நடவடிக்கைகள் ஓர் அபாயகரமான கட்டத்தையே எட்ட முற்பட்டன எனலாம். தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளருக்கெதிராகவும் கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டமை, தமிழ்மக்களின் தேசியப் பிரச்னைக்கு, நாளடைவில், ஒரு புதிய முக்கியத்துவத்தையும் தன்மையையும் கொடுப்பதற்கும் காலாயிற்று. அதேநேரத்தில், இத்தகைய கலவரங்களுக்கு இந்தியாவில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட, பிரதிபலிப்புகளும் தமிழ்த் தேசியவாதம் புதிய மெருகு பெறுவதற்கு உதவி செய்தன இவ்வாறான வளர்ச்சிகளின் பிரதான வெளிப்பாடே இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்னையிற் காட்ட முற்பட்டிருக்கும் நேரடி அக்கறை எனலாம். எல்லாப் பக்கங்களிலிருந்தும் இவ்வகையாக முடுக்கிவிடப்பட்ட ஒரு சூழ்நிலையில் அரசாங்கம், தென் பகுதி இனக்கலவரங்கள் வட பகுதியின் பயங்கரவாதிகளுக்கு ஒரு மேலதிக தூண்டுகோல் எனச் சிங்களமக்களை எச்சரிக்கை செய்வதுடன், தமிழ்த்தேசியவாதத்துக் கெதிராக இராணுவ அடக்குமுறையைக் கையாள்வதை விடுத்து, இப்பிரச்னையைத் தீவிரமாகக் கருத்திலெடுத்து அரசியல் ரீதியான ஒரு தீர்வைக் காணும் முயற்சியிலும் ஈடுபட முன்வந்திருக்கிறது. இம்முயற்சி எவ்வளவுதூரம் கைகூடுமென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும.

(முற்றும்)

**கலாநிதி வி. நித்தியானந்தன்**
(வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

## கால் வயிறு

நான் —

கூலிக்கு
உழைப்புவிற்கும்
ஒரு தொழிலாளி
என்னப்பன்
விற்றதையே
தொடர்ந்து விற்கிறேன்
கடனில்லாச் சோறு
கால்வயிறு
போதுமென்பார்

நான் —

கடன்பட்டும்
என் கால்வயிறு
நிரம்பவில்லை
காலையிலே
வேலைக்குப் போகவேணும்
கடனடைக்க
வேலைக்குப் போகையிலே
வெறும் வயிறு
புகையெடுக்கும்
வெறும் வயிறாய்
ஏன் வந்தாயென
உழைப்பு வாங்கிகள்
ஒருநாளும்
கேட்பதில்லை
கூலிதரும்
அவர்களுக்கு
என்வயிறு
வெறும்வயிறாய்
இருக்குமென
நன்கு
தெரியுந்தான்
என்றாலும்
அதல்ல உண்மை
கேட்டுவிட்டால் —

நான் சொல்வதற்கு
அவர்களால்
பதில்
கூறிடவே முடியாது

**யோ. பெனடிக்ற்பாலன்**

# இவ்வாரம் எப்படி?

**திருமலை வே. ரவீந்திரன்**

## மேஷம்

புத்திரர் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் பெரியோர் வாழ்த்தும் புண்ணிய விருப்பும் வாகன விருப்பும் வாழ்க்கையில் சிறு ஏமாற்றமும் வசதிகள் வழமைக்கு மாருகவும் இருக்கும். பொருமையின் நிழல் தொடரும். பெரும் புகழைப் பேச்சுவன்மையால் தேடிக் கொள்வீர். அதிர்ஷ்டங்களும் இடம்பெறலாம்.

## ரிஷபம்

மித்துருக்கள் சத்துருக்களாக மாற நேரிடும். எவ்விடயத்திலும் அதிக விழிப்புணர்ச்சியுடன் ஈடுபடுவது நன்று. மக்கள் புகழ்ச்சியும் அவ்வழிச் சிறப்பும் உண்டு. வாகனத்திலும் சிறுசிறு பிரச்னைகள் நிவர்த்தியாகும். தாய்வழி மகிழ்ச்சியுமுண்டு. எதிலும் ஆத்திரத்தைத் தவிர்க்கவும். அமைதியுடன் செயற்பட்டால் வெற்றியடைவீர்.

## மிதுனம்

கன்னியர் காதல்களை தாக்கும். சிலருக்குக் களஸ்திர சுகத்துச்கும் இடமுண்டு. பாதையில் பல தொல்லைகள் உருவாகும். பகைமூட்டம் திரைபோடும். பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். வழக்கு விவகாரங்களை விலக்கிக் கொள்ளவும் தாய்வழிச் சுகமும் பெரியோர் புகழும் புத்திரர் மகிழ்ச்சியும் உண்டு.

## கடகம்

தொட்டதற்கெல்லாம் திட்டுக் கேட்பீர்கள். திருடர் பயம் உண்டு. அவப்பெயரும் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் தலைதூக்கும். தொழில் விடயத்தில் உருவாகும் தொல்லைகள் அலைச்சலையும் அருவருப்பையும் உண்டுபண்ணும். மக்கள் மகிழ்ச்சி மனதில் நிலவும்.

## சிம்மம்

காதலர் எண்ணம் கைகூடும். பிதாவழித்தனமும் சேரும். பொறியியலாளர்கள் போற்றப்படுவர். நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக இருப்பர். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு. களஸ்திரப் பேச்சும் அவ்வழிச்சுகமும் வரவுமுண்டு. வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். எதிர்பாராத விபத்துக்களும் இடம்பெறலாம். எதிலும் நிதான புத்தியுடன் செயல்படவும்.

## கன்னி

பெரியோர் வாழ்த்துக்களும் பிரயாணங்களும் தொழில் வளர்ச்சியும் உண்டு. கன்னியர் சேர்க்கையும் காடையர் கலாட்டாக்களும் இடம்பெறலாம். விழிப்புடன் செயல்படவும். அடக்கம் விரும்பத்தக்கது. உறவினர் அளிக்கும் ஊக்கம் ஊதுபத்தி போலிருக்கும்.

## துலாம்

பிதாவழிப் பெருமையும் தொழில் உயர்வும் பிரயாணங்களும் உண்டு. புதுமனை நோக்கும் புண்ணிய விருப்பும் மேலோங்கும். பகைவர் பதுங்கியே பகடையாடுவர் பெண்வழியால் பேர் சிறக்கும். அன்னியவாசம் தவிர்ப்பின் நற்கருமங்களுக்கு இடமுண்டு

## விருச்சிகம்

ஆமைவேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும். வருமானத்தின் நிலை திருப்தி தரும். புத்திரர் மகிழ்ச்சியைத் தேடித்தருவர். தாய்வழித் தனமும் நல்ல பெயரும் கிடைக்கும். சகோதர வழியால் தேடிவரும் பழி. அரச பயத்திற்கும் சிறுரோகத்திற்கும் இடம் உருவாகும்.

## தனுசு

வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும். அவசரக்கோலம் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். வீணான சிந்தனைகளால் சோர்வு நிலை தென்படும். செய்தொழில் சிறப்புப் பெறும். சுற்ருடலில் நல்ல திருப்பம் ஏற்படும். நீண்ட பிரயாணம் குறித்துத் திட்டமிடப்படும். தனவரவிற்கும் இடமுண்டு. கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் உருவாகும்.

## மகரம்

தாமதகுணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடலாம். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி காணப்படும் வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று. நீண்டநாள் கொடுத்த கடன் மீண்டும் வந்துசேரும்.


## கும்பம்

காதலர் எண்ணம் கைகூடும். பிதாவழித் தனமும் சேரும். பொறியியலாளர்கள் போற்றப்படுவர். நண்பர்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பர். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு களஸ்திரப் பேச்சும் அவ்வழிச் சந்தோஷமும் வரவுமுண்டு. வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். எதிர்பாராத விபத்துக்களும் இடம்பெறும் எதிலும் நிதான புத்தியுடன் செயல்படவும்.

## மீனம்

பொதுப்பணியில் ஈடுபடுவீர்கள் சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரைகளும் மேற்கொள்ள இடமுண்டு. படித்தவர்களின் தொடர்பால் பயனடைவீர். கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். இல்லத்தில் உவகை காணப்படும். சிலருக்கு அமைதிக்குப் பங்கம் விளையும் சம்பவங்கள் ஏற்படும். சிந்தனையை ஒருவழிப் படுத்தி செயல்படவும்.


நவீன உல்லாசக் குடிசைகள்



எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் Buffet Lunch - ரூபா 35/- மட்டுமே
- பிரதி சனி தோறும் Bar-Be-Que-Dinner - ரூபா 60/-
- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை

(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-

குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-

பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


## ரஷ்யப் புரட்சியின் தாய்

ரஷ்யாவில் எங்கு திரும்பினுலும் லெனினுடைய சிலையைத்தான் காணமுடியும் அந்த அளவுக்கு அவரை நாடு போற்றுவதற்குக் காரணம்அவரதுதாய்தான். லெனினின் இளமைப் பருவத்தில் அவரது எதிரிலேயே அவருடைய தாய் ஜார் மன்னரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

''என் தாயைப் போன்று நாட்டிலுள்ள தாய்மார்கள் சுட்டுக் கொல்லப்படாமலிருக்க ஜாரின் கொடுங்கோலாட்சி ஒளிக்கப்பட வேண்டும் என்று சூளுரைத்தார் லெனின். அதன் விளைவுதான் ரஷ்யப் புரட்சி

## சிறந்தமொழி

ஆசாரிய விஞேபாவிடம் பத்திரிகை நிருபர்கள் பேட்டிக்காக வந்திருந்தனர். அவர்களிடம் விஞேபா கேட்டார்; 'எந்த மொழியில் நான் உங்களுடன் பேச வேண்டும்?''

''எந்த மொழி உங்களுக்குச் சிறந்ததாகப்படுகிறதோ அதிலேயே பேசுங்கள் என்றனர் நிருபர்கள்.சிறிது நேர மௌனத்திற்குப் பின் விஞேபாஜி பதிலளித்தார். 'மௌனம்தான் எனக்குச் சிறந்த மொழி''

நிருபர்கள் திகைத்தனர்.

## இங்கிலீஸ் தெரியாவிட்டால் என்ன?

எனக்கு இங்கிலீஷ் சரியாகப் பேசவராது. அதனுல் எப்போதும் எனக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்து கொண்டேயிருந்தது. ஒரு முறை நேருஜி சென்னைக்குப் போன போது நானும் அவர் கூடச் சென்றேன். அப்போது தமிழ் நாட்டில் காமராஜர் முதலமைச்சராக இருந்தார். ''தமிழகத்தில் மிகச் சிறந்த நிர்வாகம் நடக்கிறது என்று என்னிடம் சொன்னுர் நேருஜி. நான் உடனே காமராஜருக்கு இங்கிலீஷ் தெரியாதே!'' என்றேன். நேருஜி உடனே ''அதனுல் என்ன மக்களின் உணர்வுகளை இவர் நன்ருகப் புரிந்து வைத்திருக்கிருர்: நன்ருக நிர்வாகம் செய்கிருர் அதற்கும் இங்கிலீசுக்கும் ஒரு வித சம்பந்தமும் கிடையாது'' என்று பதிலளித்தார். அன்று முதல் இங்கிலீஸ் தெரியாதே என்ற தாழ்வு மனப்பான்மை என்னை விட்டு அகன்றது.

(ஒரு பேட்டியில் இந்திய ஜனதிபதி ஜைல்சிங் கூறியது)

—கணேஷ்

## எது கவிதை?

கவிதையென்ருல் அதில் ஒரு குறிகோள் இருக்க வேண்டும். அதனுள் 'அணி' அணி வகுக்க வேண்டும்' இசை இழையோட வேண்டும். வெளிப் பொருள் உட்பொருள் கொண்டிருத்தல் வேண்டிம். கற்பனை கலந்திருக்க வேண்டும் இவற்றிற்கு மேலாக கவிஞனின் உணர்வுகள் அங்கே பிரதிபலித்திருக்க வேண்டும்.இந்த வட்டங்களுக்குள் வருவதுதான் கவிதையாகும்.

— நாவலர்நெடுஞ்செழியன்

அனுப்பியவர்: துரைசிங்கம்



# கம்பன்கழகக் காவலர் வித்துவான் சி. ஆறுமுகம் நினைவு அஞ்சலி மலர்

## அருளின் மறுஉருவம் ஆறுமுகம்

''பண்புடையார் பட்டுண்டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

இது பொதுமறையின் முரசறைவு. நன்மையும் தீமையும் கலந்துபோன இவ் உலகத்திலே நல்லார் யார் தீயார் யார் அவர்களை இனங்காண்பது எப்படி? அவர்கள், வாழ்ந்து சென்றதடயங்கள் தான் அதற்கு உரைகல் தொட்டுச் சென்ற தெய்வப்பணிதான் அதற்குச்சான்று.

எளிய தோற்றம். இனிய உள்ளம். புன்னகை தவழும் முகம். இசைமணக்கும் எழிலுருவம். புன்மை கண்டு பொங்கும் நெஞ்சம். கருணைததும்பும் கண்கள். இவைகளின் ஒட்டு மொத்தமே வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள்.

விட்டிற்கு அவர் உழைத்தது குறைவு. நாட்டுக்கு உழைத்தது மிகுதி. அயராத அவர் உழைப்பிற்குச் சான்று நல்லை ஆதீனத்தில் அவர் தோற்றுவித்த பண்டிதர் வகுப்பு. இருக்கும் போது கல்யாணி; எழும்போது காம்போதி; நடக்கும் போது நாட்டை; நாவசைத்தால் நீலாம்பரி என இசை மயமாகவே வாழ்ந்த அவரது வாழ்க்கை இசைமயமாகவே முடிந்துவிட்டது போற்றுதற்குரியதாகும்.

வாழ்க அவர்நாமம்! வளர்க அவர் தொண்டு!!

**வித்துவான் திருமதி வஸந்தா வைத்தியநாதன்.**

## இலக்கிய உலகின் குறிஞ்சிமலர்

ஈழத்தில் செல்வர் மரபோ கற்றோர் மரபோ பதவித் தவிசாளர் மரபோ இடையறு தொழுகி வராவிடினும் ஈழத்துச் சித்தர் மரபு போலச் சான்றோர் மரபொன்றும் இடையீடின்றி இயங்கிவருதலை உற்றுணர்வார் அறிவர். அந்த வகையிலே இந்தச் சான்றோர் கொடிவழியிற் பூத்த குறிஞ்சி மலர். ஏறக்குறைய 65ஆண்டு காலம் தன் சான்றாண்மையைப் பரப்பிய இந் நறுமலர், கடந்த 4ம் திகதி அதிகாலை உதிரவில்லை; மீண்டும் முகிழ்த்தது அந்த முகிழ்ப்பை உணராத நாம் மரணம் என்னும் பெயரால் மயங்குகின்றோம்.

(1 ம் பக்கம் பார்க்க)

## கவியரங்க மன்னர்

இன்னிசைச் செய்யுள் இனிதாய்ப் பலவியற்றி
மன்னும் கவியரங்க மன்னனாய் - நின்றாய் நீ
விண்ணிசை விஞ்சையர் விள்ளுதமிழ்ப் பாவிலும்
விண்ணொலிக்கச் சென்றாய் விளம்பு

**- புலவர் நா. சிவபாதசுந்தரனார்**

## தாயென அணைத்தான்!

ஒய்விலா துழைத்த மேனி
உணர்வினால் நிறைந்த நெஞ்சம்
தாய்என அணைக்கும் கைகள்
தமிழினால் இனிக்குக செவ்வாய்
காய்தலும் உவத்தல் இன்றிக்
கருத்தினை வழங்கும் சிந்தை
ஆயின் அறுமு கத்தான்
அவனொடும் போய வின்றே

**- வித்துவான் க. சொக்கலிங்கம்**

## பொன்னாகத் திகழ்ந்தான்!

அன்பாலும் அறிவாலும் ஆற்றலாலும்
அமைதிகுடி கொண்ட பெருங் குணத்தினாலும்
சொன்மாரி பொழிகின்ற சுவையி னாலும்
துவளாத நெஞ்சாலும் துணிவி னாலும்
பன்னூறு பாடல்செயும் திறமை யாலும்
பழகவினிதான பக்திப் பண்பாட் டாலும்
பொன்னாகத் திகழ்ந்தவனே வித்(து)வான் ஐயா
போய்விட்டாய் எம்துயரம் புகலப் போமோ

**- காரை. செ சுந்தரம்பிள்ளை**

## ஓங்காரத்துள்ளே ஒடுங்கினன்

உள்ளமுங் கவியேயாகி உணர்ச்சியின் உருவமாகி
உலகெலாம் உனதேயாக்கி உலவினாயுன் மனத்துள்
கள்ளமுங் கண்டு சீறி காவியங் கண்டு ஆறி
கந்தனை நாளும் நீயே கரும்பெனக் கானம் பாடி
வெள்ளமாய்க் கவிபடிப்பாய் வெள்ளையேயுந்தனுள்ளம்
வேதமாய் நின்றவனே வேறுயாரெமையணைப்பார்
உள்ளமும் உருகுதையா உத்தமனேயெமைப் பிரிந்து
ஓங்காரத்துள்ளே நீ ஒன்றாய் ஒடுங்கினையோ.

**- கவிஞர். ச. சிவகுமாரன்-**

## பறந்து விட்டார்!

புதுமைக்கும் பழமைக்கும் பொருந்திப் போகும்
பொருளார்ந்த கவிதைகளைப் புனைந்தே நல்ல
இதம்மிக்க இசையோடு எழுச்சி யேற்றி
இரசனைதனை ஈட்டுகின்ற இனிமைப் பாங்கும்
நிதம்பற்றி கொள்ளுமுயர் நெறிகள் தம்மை
நிதானமுடன் ஊட்டுகின்ற நேசப் பாங்கு
பதம்பெற்ற வித்துவான் சி ஆறு முகம்
பரன்பொற்றாள் சதமென்றே பறந்து விட்டார்.

**- கவிஞர். வே. ஐயாத்துரை**

## தமிழ் ஏந்தல்!

ஒப்பனைக ளேது மின்றி
ஓர் போதுங் கர்வமின்றி
அப்பனைப் போல் ஆறுமுகம்
அவதரித்த பேறு நிதம்
செப்பனைவர் செவியிலுமே
சேரா தினி யென்று
தப்பனைத்தும் பொறுத்த புகழ்த்
தமிழேந்தல் திறம் வாழ்க

**- வட்டூர். ஜெ. கி. ஜெயசிலன்**

## கழகத்தின் காவலர்!

தேவனெமைப் பிரிய தேம்பியழுதோ மன்று
தேற்றிவிட நீரிருந்தீர் தேனொக்கும் குரல் கொண்டு
நாவன்மை யதனாலே நானிலத்திலே யுயர்ந்த
நல்லவராம் நம்பிராதாக் கிருஷ்ணருக்கு மவ்வாறே!
பாவலரே! நம்கம்பன் கழகமதன் காவலரே!
பண்பாரும் வித்துவான் ஆறுமுகப் பெருமானே!
சாவன்று இதுவுமக்குச் சாற்றுகிறோம் துயரெமக்கு!
சால்புடையீர்! இத்துயருந் தீர்த்துவிடா தெங்குற்றீர்!

**- கவிஞர். சி. சற்குருநாதன்**

# கம்பன்கழக இரசிகமணி

இளைஞர்களால் தொடக்கப்பட்ட அகில இலங்கைக் கம்பன் கழகம் விரிவுற்று திருகோணமலை, பருத்தித்துறை, இணுவில், தீவகம் ஆகிய இடங்களில் பரவக் காரணமாயிருந்தவர்களுள் வித்துவான் சி.ஆறுமுகம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். எம் கழகத்துக்கு அவராற்றிய பணிகள் சொல்லிலடங்கா. தன் இறுதிக் காலத்தைக் கழகத்திற்காகவேகழித்தவர்

அவர் அறிவுத் திறமையும் கல்வியாற்றலும், பேச்சாற்றலும், பக்தியும், அன்பும்' பணியும் அனைவரும் அறிந்ததே. இவையனைத்திலும் விஞ்சி அவருள் காணப்படும் ரசிகத் தன்மை அப்பப்பா... எல்லையற்றது. கழகத்தின் ' இரசிகமணி' யென்றே இவரைக் கூறலாம் ஏன்? ஈழத்தின் இரசிகமணியென்றாலும் அது மிகையாகாது.

அன்னாரின் இறுதி விருப்பமாகிய காவிய வகுப்பை எமது கழகத்தினரும் திருநெறிய தமிழ் மன்றத்தினரும் இணைந்து நடாத்தவுள்ளோம். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் வித்துவான் க.ந.வேலன், பண்டிதர் மு கந்தையா, வித்துவான் க.சொக்கலிங்கம், வித்துவான் திருமதி வஸந்தா வைத்தியநாதன் ,வித்துவான் சி.குமாரசுவாமி' மாதகல் வ.கந்தசாமி க, உமாமகேஸ்வரன் ஆகியோர் இவ்வகுப்பை முன்னின்று நடாத்துகின்றனர். இவ் வகுப்பில் பலர் பயன் பெறுவதே மறைந்த வித்துவான் ஆறுமுகம் ஐயா அவர்கட்கு தமிழர் செய்யும் கைமாறாகும். அனைவரும் கலந்து பயன் பெற வேண்டுமென எம் கழக சார்பில் வேண்டுகிறோம்.

திருமலை, பருத்தித்துறை' இணுவில், தீவகக் கம்பன் கழகங்களின் சார்பில் அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கழகக் குடும்பத் தலைவரின் மறைவுக்கு இம் மலரை வெளியிட உதவி செய்த அனைவர்க்கும் எமது நன்றி உரித்தாகுக.

க சிவராமலிங்கம்
(போஷகர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)
தி திருநந்தகுமார்
(தலைவர்)
க.குமாரதாசன்
(செயலாளர்)

## ஆதீன சபையில் தூணாய் நின்றவர்

வித்துவான். சி.ஆறுமுகம் அவர்கள் ஆதீன நிர்வாக சபையில் ஓர் அங்கத்தவராகத் திகழ்ந்து தொண்டுகளாற்றியவர். அவர் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதானால் ஆதீனத்திற்கு அவர் ஒரு தூண்.

வித்துவான் அவர்கள்பெரும் குணசீலர். பக்திமான். அவர் செய்த பணிக்கு யாரும் கைமாறு செய்தல் இயலாது. எனினும் அவர்களது ஜீவாத்மா மகிழ்வுற அவர்கள் தொடங்கிய நற்பணிகளைக் குன்றவிடாது' அவர்தம் மாணவர்களும், நண்பர்களும்' அன்பர்களும், தொடர்ந்து ஆற்றவேண்டுமென்பது எமது கோரிக்கை.

அவர்களது ஜீவாத்மா பெம்மான் பொற்பாதங்களை எய்த வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## கழகத்தின இசைத்தூண்

கம்பன் கழகத் தூண்களுள் ஒன்று சாய்ந்துவிட்டது. சுசீந்திரக்கோயிலிலுள்ள தூண் போல்இதுவும்ஓர்இசைத்தூண் கம்பன் கழகக் கூட்டமொவ்வொன்றும் வித்துவான் சி ஆறுமுகத்தின் இன்னிசை நிறைந்த காப்புப் பாடலுடனேயே தொடங்கும் தன்னுள்ளே உருகிப் பாடுவார். கேட்போர் மெய்மறந்து விடுவர். இன்னொருதடவை அப்பாடலை இவசக்கமாட்டாரா என்று உள்ளம் கேட்கும் அடுத்த தடவை கேட்கலாம் என்று எண்ணிவந்தோம். அந்த இனிய குரல் ஓய்ந்துவிட்டது. அந்த இனிய மூச்சு அடங்கிவிட்டது.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்
தம் கொழுந்தே

இச்சுவைதவிர யான்போய்
இந்திரலோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்
டேன் அரங்கமாநகருளானே.

என்னும் பெரியாழ்வார் பாடலை நெக்குருகப் பாடுவார். பக்திரசம் அவர் பாடப் புலப்படும். அவ்வாறு பாடிப்பாடி அந்த அரங்கனிடமே சென்றுவிட்டார். நாங்களோ வித்துவானை இழந்துநிற்கிறோம்'

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

இலக்கிய உர்ணவும் பக்திப் பெருக்கும்இசை நாட்டமுமுள்ள அந்தஇனிய ஆத்மாவுக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலி அவர் செய்த சேவைகளை' தொண்டுகளைதொடர்து நாம் செய்வதாகும். அன்னா

(12ம் பக்கம் பார்க்க)

## நன்றி

இம் மலர் வெளிவர உதவிய
- ★ எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் நிறுவனம்.
- ★ மில்க்வைற் தொழிலகம்,
- ★ ஸ்ரீ தாமோதர விலாஸ், கே. கே. எஸ். வீதியாழ்ப்பாணம்
- ★ ஏ. கே. எஸ். நகைமாளிகை, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.
- ★ அம்பிகா கூல்பார், 391, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- ★ யூனிவேர்சல் கல்வி நிறுவனம், கந்தர்மடம்
- ★ செட்டியார் அச்சகம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
- ★ திருமதி. மயில்வாகனம், கந்தர்மடம்

இவர்கள் அனைவர்க்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

**கம்பன் கழகம்**

# தமிழ்மொழி

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தபடலத்தில் தெளிவு படுத்துகிறார் நம்பினோரைக் கைவிடா எங்கள் பெருமான் என்பதைக் தருமிக்குப் பொற் கிழி அளித்த படலம், மண் சுமந்த படலம், இசைவாது வென்ற படலம், விறகுவிற்ற படலம், மாணிக்கம் விற்ற படலம் ஆகியவற்றில் மிக அழகாகக் காட்டியுள்ளார்.

''அன்புறு பக்தி வித்தி ஆர்வநீர் பாய்ச்சும் தொண்டர்க்கு இன்புருவான ஈசன் இன்னருள் விளையுமா போல்''

என்பதிலிருந்து அன்பும் பக்தியும் ஆர்வமும் கொண்ட அடியவர்க்கு இன்பத் திருவினனுகிய ஈசன்தனது இன்னருளை விளைவித்து நிற்றல் தெளிவாகிறது ''என்சோதனைத்தோ நின்னியல்'' என்று பாண்டியன் இரங்கி ஏத்துமிடம் கல் நெஞ்சையும் கரையவைக்கும். உருகி நிற்கும் அடியவரை இறைவன் எவ்வாறு தாங்குகிருன் என்பதைப் பல இடங்களில் திருவிளையாடற் புராணம் காட்டுகிறது.

''குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும் தருவாய்மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையும் தருவாய் கையில் படுதலை கொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய் என்று ஏசுவார்க்கென் பேசுவனே'' என்பது இசைவாது வென்ற படலத்தில் அமைந்த பாடலாகும்.

பரஞ்சோதியாரின் இறை பக்தி, தமிழ்ப்பற்று ஆகியவற்றை அறிந்ததுடன் இறைவனின் எளிவந்ததருளையையும் திருவிளையாடற் புராணம் காட்டும் திறன், அறிந்து போற்றிமகிழுதற்குரியது.

எனவே சிவபுராணங்களைப் போற்றி வளர்ப்பதும் மகாநாடுகள் கூட்டி அவற்றை ஆய்வு செய்து புரியவைப்பதும், மறுபதிப்புச் செய்து பரப்புவதும், புராணபடனம் ஆற்றிப்பொருள் விளங்க வைப்பதும் சைவமக்களின் இன்றியமையாத கடமையென்பதை உணர்ந்து ஆவன புரிய முன்வருவோமாக.

(முற்றும்)

# திருவாரூர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் யாவும் கொண்ட தாய் சிருங்காரம், வீரம், சாந்தம் உள்ளதாய் வர்ணனைகள் நிரம்பியதாய், நாட்டின் நாகரிக நிலையை நன்கு கூறுவதாய் அமைந்தது.

இத்தகைய புகழ் பூத்த பெருங்காவியத்தை எவ்வித குறையுமின்றித் தமிழிற் தந்த புலவர் அரசகேசரி கவிதா தர்மம் அறிந்தவர். காவிய இலட்சணமுணர்ந்தவர். இவரின் கவித்துவப் புகழை ஆறுமுக நாவலர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் வித்துவான் கணேசையர் வித்தகம் கந்தையாபிள்ளை முதலான பெரியவர்கள் பலவிதமாகப் பாராட்டியுள்ளார்கள்.

இரகுவம்மிசம் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு செய்யுள்களை கொண்டது, அவற்றில் இன்று 2444 செய்யுள்கள் வரைகிடைத்துள்ளன. இவை பொதுக் காண்டம், சிறப்புக் காண்டம், என மூன்று காண்டங்களில் அமைந்துள்ளன.

இக் காண்டங்கள் தோறும் எல்லாமாகப் 1ʊ படலங்கள் அமைந்துள்ளன. பழைய சூரிய குலத்துத் திலீபன், இரகு அயன், தசரதன், இராமன், குகன் என்பவர்களின் வரலாறு இதிகாசம்போல இக்காவியத்தில்வந்துள்ளதுஇதற்குக்கணேசையர் அருமையான உரை எழுதியுள்ளார்.

# கேட்டீங்களா?

''அந்தத் தாத்தாவுக்கு வயது 80 — 11 பிள்ளைகள் — 54 பேரப்பிள்ளைகள்.

பழுத்த பழம் - என்ருலும் திடகாத்திரமான உடம்பு - மனைவியை இழந்து தனியாகவே வாழ்ந்துவந்த அவருக்கு தள்ளாத வயதிலும் தகாத ஆசை.

40 வயதுப் பெண்ணைக்கைப் பிடித்தவர் - ஆடம்பரக் கல்யாணம் திருமண ஊர்வலமும் ஜாம் ஜாம் என்று நடந்தது.

'ப்பூ ..' இதில் என்ன புதுமை என வாசகர்கள் முணுமுணுப்பதை உணருகிறேன்.

மேற்கு நாடுகளில் என்ருல் இது ஒன்றும் புதுமையில்லைத் தான். எமது நாட்டிலே நடந்தால்...?

கொஸ்கம — கட்டுக்கொடவில் வாழும் பமையா என்ற தாத்தாவே அண்மையில் திருமணம் முடித்த அந்தப் புது மாப்பிள்ளை.

ஃ ஃ ஃ

1981ல் எரியூட்டப்பட்ட யாழ். பொது நூலகத்திற்கு பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்க முன்வந்த தமிழக அரசு அதில் ஒரு பகுதி புத்தகங்களையும் இங்கு அனுப்பி வைத்துள்ளது.

இன்று நேற்று அப்புத்தகங்கள் இங்கு அனுப்பப்படவில்லை.

கடந்த ஆண்டு ஜூலை இனக் கலவரங்களுக்கு முன்னரே இங்கு வந்துசேர்ந்துவிட்டன.

ஜூலை கலவரம், நெருக்கடி மிகுந்த யாழ். பாதுகாப்பு நிலைமை ஆகியவற்றின் காரணமாக அப்புத்தகப் பொதிகள் கொழும்பிலுள்ள இந்திய தூதரக அலுவலகத்திலும் சில அதிகாரிகளின் இல்லங்களிலும் எவருக்குமே பயனற்றுத் தூங்கிக்கொண்டிருக்கின்றனவாம்.

யாழ். பல்கலைக்கழக நூலகத்திற்கென தமிழக அரசு அன்பளிப்பாக வழங்கிய நூல்களுக்கும் இதேகதிதான்.

எம்மவரின் அறிவுப் பசியைத் தீர்க்க வந்த இப்புத்தகப் பொதிகளுக்குள் விநாயகரின்வாகனங்கள்தான் புகுந்து விளையாடுகின்றனவோ யாரறிவார்.

ஃ ஃ ஃ

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் 'பாஸ்போட்' வழங்கும் பகுதியிலிருக்கும் உயர் அதிகாரி ஒருவர் அவசரமாக பாஸ்போட் தேவையானவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அதற்கேற்றவாறு பாஸ்போர்டுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிருர்.

அமைச்சர்கள், உதவி அமைச்சர்கள், எம் பிக்களிடமிருந்து கொண்டுவரும் சிபார்சுக் கடிதங்கள்கூட நியாயமான காரணங்களுடன் இருந்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்கிருர்.

அண்மையில் ஒருநாள் உதவி அமைச்சரின் சிபார்சுக் கடிதத்துடன் உடனடியாக 'பாஸ்போர்ட்' எடுக்க வந்த ஒருவர் இந்த அதிகாரியிடம் சிபார்சுக் கடிதத்தை நீட்டினுர்-

கடிதத்தை வாங்காமலே அக்கடிதம் கொடுத்த பிரதி அமைச்சரின் முகவரியைப் படித்தவாறே ''எப்போது விண்ணப்பித்தீர்கள்?'' ''என்ன அவசரம்'' என்று வினவிய அந்த அதிகாரி. 'விண்ணப்பித்து ஒரு வாரம்; அடுத்த வாரம் வெளிநாட்டில் வேலைக்கு நிற்க வேண்டும்'' என்ற பதிலைக் கேட்டதுதான் தாமதம். பிரதி அமைச்சரின் சிபார்சுக் கடிதம்பற்றிக்கூடச் சிந்திக்காமல் ''ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் மாதக் கணக்கில் காத்திருக்க உமக்கு இப்போது தர முடியாது; வேலை பெறப் போவதானுல் முன்னரேயே விண்ணப்பித்திருக்க வேண்டும்'' என்று கூறினுர்.

அந்நபரின் முன்னிலையிலேயே பின்வருமாறு என்னிடம் கூறுகிருர் அந்த அதிகாரி:

''சில அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம். பி.க்கள் தமது தொகுதி வாக்காளர்களின் கோரிக்கையைத் தட்ட முடியாமல் சிபார்சுக் கடிதங்களைக் கொடுத்துவிடுகிருர்கள். இவர்களும் நம்பிக்கை கொண்டு வருகிருர்கள். வாக்காளர்களின் கோரிக்கைகளை மீறினல் அடுத்த தேர்தலில் அவர்களுக்கு வாக்குகள் கிட்டாமல் போய்விடுமே.''

அவரது கூற்றிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

- லீலன்

# யாழ். மாவட்ட திரிசாரணர் விசேஷ மலர்

திரிசாரணகுழு' என்ருல் என்ன?

ஒரு புனித கட்டுக்கோப்பான பண்புகள் நிறைந்த அமைப்பு.

இக்குழுவை எப்படிப்பட்டவர்கள் வளர்த்தார்கள்?

'கடமை- கண்ணியம்- கட்டுப்பாடு' உடைய ஒருசிலர் தான் இக்குழுவை வளர்த்தார்கள்.

திரிசாரண இயக்கத்தினுல், வீட்டுக்கு, நாட்டுக்கு, உலகத்துக்கு என்ன பயன்? இவற்றை நாம் அறிய வேண்டுமானுல், அண்மையில் யாழ் மாவட்ட திரிசாரணர் யாழ்ப்பாணக்குழுவின் வருடாந்த விழாவில் வெளியான விசேட சிறப்புமலரைப் பார்த்தால் தெரியும். இதனை இம்மலர் எமக்கு மிக எளிதில், விளங்க வைத்திருக்கிறது.

திரிசாரணர் இயக்கம், உலகில் எப்போது ஆரம்பமானது; யாரால் தாபிக்கப்பட்டது; இதன்வளர்ச்சி என்ன; இந்தஇயக்கம் சமூகத்துக்கு என்னசேவை யாற்றுகிறது. என்பவற்றை எல்லாம் மிக மிகத் தெளிவாக, இந்தமலர் எமக்கு அறியத்தருகின்றது.

இச்சாரணர் குழுவில் அங்கம்வகிக்கும், எமது யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் அடைந்துள்ள வளர்ச்சி, அகில இலங்கைரீதியில் எமதுமாணவர்கள் ஏற்படுத்திய சாதனைகள் அனைத்தையும் பற்றி, இந்தவிசேட சிறப்புமலரில் சிறப்பாக வெளியிட்டுள்ளார்கள்.

சாரணர் இயக்கத்தினரைப் பற்றி, குறிப்பாக எமது வளர்ந்துவரும் இளம் சந்ததியினர் மிக இலகுவாக அறிந்து கொள்ளக் கூடியவிதத்தில், பல பெரியார்களின் கட்டுரைகள் வாயிலாக, இந்தசிறப்பு மலரை வெளியிட்ட மலர்க் குழுவினரான திருவாளர்கள் என். நல்லையா, பி. சிறிஸ்கந்தராஜா, ஜி. எஸ். அருமைதாஸ், எஸ். சற்குணேஸ்வரன், கே. ஆர். சிறிதரன், பி. இந்திரசிறி ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

## புதிய புத்தகம்

''1918 ம் ஆண்டு—

— உலக சாரணிய சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு.

ஏன்?—

18 வயது முதிர்ந்த இளைஞர்கள் தனிமனிதர்களாக மாறவேண்டியதும், ஒரு மனிதனின் வாழ்விலே மிகவும் முக்கியமானதும், வாழ்க்கையின் பாதையிலே ஓர் பிரதான திருப்பத்தை ஏற்படுத்துகின்ற வயதினருக்காக கில்வெல்படன் பவெல் பிரபுவினுல் ஆரம்பிக்கப்பட்ட சாரணியத்தின் இறுதிப்பிரிவு தான்!

1927—

— யாழ்மாவட்ட திரிசாரணர்கள் என்றும் மறக்கமுடியாத ஆண்டு. அன்றுதான் யாழ்நகரில் திரிசாரணியம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

இன்னும் ஓர் ஆண்டு எம்மால் மறக்கமுடியாதது அது தான்-.1957.

ஆம், இவ்வாண்டுதான் எம் இயக்கத்தின் ஸ்தாபகர் கில்வெல்பேடன்பவல் பிரபு அவர்களின் மனைவியார் எமது மாவட்டத்திற்கு வருகை தந்து, எம்சாரணர்களை எல்லாம் சந்தித்த ஆண்டு.

அதே ஆண்டில் யாழ் மாவட்ட இரண்டு திரிசாரணர்கள் அகில உலக திரிசாரணர் சம்மேளனத் (இங்கிலாந்து) தில் பங்கு கொண்டனர்.''

'மலரைமுகரமுன்..' என்று சுவைத்துத்தருகிருர் மலர் ஆசிரியர்.

'தேவா'

# மறைந்தும் மறையாத கலைஞர்கள்



## கலைஞர் துரையப்பா

[கலைஞர்கள் உலகில் நிலையானவர்கள். அவர்களின் பூதவுடல்கள் மட்டுமேஅழிந்து விடுகின்றன. ஆனுல் தமது படைப்புகள் பண்புகள் சேவைகளால் அவர்கள் என்றும் அழியாச்சிற்பங்களாகவே பிரகாசித்து நிற்பர். அவ்வாறுன ஒரு கலைஞரே சலமோன் பிரான்ஸிஸ் துரையப்பா.

இவ்வாறு நம்மத்தியில் வாழ்ந்து மறைந்தாலும் நினைவில் நிற்கும் நல்லகலைஞர் களைப்பற்றிய தரமான எழுத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. ஆ—ர்]

அழியாத சித்திரங்களும், அழகு வர்ணச் சிலைகளும், கலைஞன் சலமோன் பிரான்சிஸ் துரையப்பாவின் நீங்காத நினைவை உலகிற்குப் பறைசாற்றும் கலைப்படைப்புக்கள். அவர் ஒருஈழத்தின் பிரசித்தி பெற்ற சிற்பி அரை நூற்றுண்டுக் காலம் அவரது கலைச் சேவையை ஈழத்தின் சகல பகுதிகளும் அபரிமிதமாக அனுபவித்தன,

ஆங்காங்கு ஆலயங்களிற் காணப்படும் சிற்பங்களும் சித்திரங்களும், சிருங்கார வேலைகளும், அச்சுக்கூட 'புளக்' வேலைகளும் அவரின் கைநுட்பத்திறனுக்கு சான்று பகருகின்றன. 'புளொக்மேக்கராக' அமரர் பணிபுரிந்து ஆற்றிய சேவையின் சிறப்புக்கள் எப்போதும் நிலைத்திருக்கும்.

கலைஞர் ச. பி. துரையப்பா அவர்கள் கலைக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் பல்வேறு வகைளிகல் பணியாற்றிய பண்பாளன், ஏழைகளின் தோழர், கலைச் சிற்பி, இலைமறை காய் போல வாழ்ந்தவர். பலரது இழப்பு அவர்களது குடும்பம் என்ற சிறிய வட்டத்தை மட்டுமே பாதிக்கும் சிலரது இழப்போ குடும்பம் என்ற எல்லையைக் கடந்து நிற்கும்.

விரல்விட்டு எண்ணக்கூடிய கலைஞர்களில் சிலரில் ஒருவரே அமரர் துரையப்பா. பிறந்தார், இருந்தார், இறந்தார் என்றிராது தம்மோடு பழகியவரையும் தன்னை அறிந்தவரையும் ஒவ்வொரு செயலிலும் சிந்தையிலும் தன்னை நினைக்கும் படியாகமறைந்தும் மறையாத கலைஞர்.

'கலைப்பிரியன்'

# கமலஹாசன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

றது. வழுக்கை அதிகம் என்ருல், ஒவ்வொரு மேலதிக 2¼''X1'' பரப்பில் உரோம மாற்றீடு செய்ய மேலும் 10,000 ரூபா ஆகிறது.

தலை விறைக்க ஊசி போட்டுவிட்டு இந்த உரோம மாற்றீடு நடைபெறுகிறது. ஆஸ்பத்திரியில் மாற்றீடு செய்தவர் தங்க வேண்டியதில்லை. 'உரோம விதைப்பு' முடிந்ததும் வீடு போய் விடலாம். மாற்றீடு செய்த பகுதியில் புது உரோமம் சுமார் 4 மாதங்களில் வளரத் தொடங்கி சுமார் 9 மாதங்களில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டு விடுகிறது.

உரோம மாற்றீடு செய்வதற்கு பணம் கடன் கொடுப்பதற்கு சில வங்கிகளும்' பினன்ஸ், கம்பனிகளும் இங்கே உள்ளன.

# இலக்கிய உலகின்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கப்பிறந்த அவர் படிக்கவில்லை. பலரைப் படிக்க வைத்தார். கற்பனவும் இனி அமையும் என அமைந்தார். பிறந்து மொழிபயின்றபோதே இறையடிக்குக் காதல் சிறந்த சிந்தையர் அவர். கற்ருரின் மனம் போலக் கசிந்து கசிந்து உருகும். அவர்க்கு கல்வியின் பயனை ஆக்கையின் பயனை ஒவ்வோர் உறுப்பின் பயனை வாழ்வின் சிறு காலையிலேயே பெறும் பேறு பெற்றவர் அவர்.

அவர்—
தொழிலைத் தொண்டாக வேசெய்தவர்
தொண்டைத் தொழிலாக்கத் தெரியாதவர்
கூடுமன்பில் கும்பிடத் தெரிந்தவர்
கூழைக்கும் பிடுபோடத் தெரியாதவர்

எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க! என்பது மேடைப் பேச்சல்ல; அது அவரின் இதய தாகம் அவர் எண்ணங்கள் நிலைக்க கம்பன் கழகம் பாடுபடட்டும்.

வித்துவான் கு. ந. வேலன்

# கழகத்தில்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ருடன் யான் பழகிய காலம் சொற்பகாலமே. ஆனுல் பல காலம் பழகிய ஒருவரை இழந்தது போல மனம் அங்கலாய்க்கிறது அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு என் சார்பிலும் என்னுடைய மனைவி மனோன்மணி சார்பிலும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

# வெள்ளையர் இத்தீவில் காலூன்றியது எப்படி?

15ம் நூற்றாண்டில் ஐரோப்பியருள் போர்த்துக்கீசரே கடலோடுவதில் பிரசித்தி பெற்றுவிளங்கினர். போர்த்துக்கீச மன்னன் ஜானின் ஆணைப்படி கி. பி. 1487ல் கிழக்குத்தேச வர்த்தகத்துக்கான கடல் மார்க்கத்தைக் கண்டறியப் புறப்பட்ட போர்த்துக்கீசரின் முயற்சியின் பயனாக கி. பி. 1497ல் வாஸ்கொடகாமா என்பவன் சில கப்பலோடு போர்த்துக்கலின் இராஜதானியாகிய லிஸ்பனிலிருந்து புறப்பட்டான். அவன் நன்னம்பிக்கை முனைவழியாகவந்து மலையாளக் கரையிலுள்ள கள்ளிக் கோட்டையை வந்தடைந்த போது அந்நாட்டரசன் அவனை நன்குபசரித்தான். அங்கு ஏற்கனவே பண்டமாற்று வாணிபம் செய்துவந்த அருக்கியர்

## பண்டமாற்று வாணிபப்

## போர்வையில் போர்ச்சுக்கீசர்

## நடத்திய நாடுபிடிக்கும் நாடகம்

இவன் வரவுகண்டு மனஸ்தாபம் கொண்டனர். ஆனாலும் அதைச்சட்டைசெய்யாத வாஸ்கொடகாமா அரசனைச் சந்தித்து அவன் கொடுத்த வெகுமதிப் பொருட்களுடன் தன்நாடு போய்ச் சேர்ந்தான். அதன்பின் அடிக்கடி போர்த்துக்கீச கப்பல்கள் இந்தியாவை தரிசித்து மீளலாயின.

அப்பால் கி. பி. 1504ல் போர்த்துக்கீசர் இந்தியாவில் மெல்ல மெல்ல இடங்கோலத் தொடங்கி, சில இடங்களைக் கைப்பற்றினர். இதனால் அங்கு அருக்கியரின் வாணிபம் கெடத் தொடங்கியது. போர்த்துக்கீசரே இந்து சமுத்திர வர்த்தக ஆட்சி பெற்றோங்கித் தம் கண்ணுக்குத்தெரியும் துலுக்க வர்த்தகக் கப்பல்கள் யாவற்றையும் துரத்திப்பிடித்துக் கொள்ளையடித்தனர்.

## லோறன்சோவின்

## எதிர்பாராத

## அதிர்ஷ்டம்

ஒருநாள் இந்தியாவிலிருந்த போர்த்துக்கீச அதிகாரியான பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா இந்து சமுத்திரத்தில் நடமாடும் துலுக்க மரக்கலங்களைக் கொள்ளையடித்து வரும்படி தன் மகன் லோறன்சோவையும் சிலரையும் அனுப்பிவைத்தான். லோறன்சோ துரத்திச் சென்ற துலுக்கக் கப்பல்கள் மாலைதீவுப் பக்கமாகச்சென்று மறைந்துவிடவே சென்ற திசை தெரியாது மயங்கி நின்ற லோறன்சோவின் கப்பலை நீரோட்டம் இலங்கைத்தீவின் தென்கரையில் ஒதுக்கியது. தன் கப்பல் ஒதுங்கியதீவுதான் கறுவா, ஏலம், முத்து, இரத்தினம் யாவும் தாராளமாகக் கிடைக்கப் பெறும் தீவென்பதையறிந்து லோறன்சோ உவகைகொண்டான். இது நிகழ்ந்தது தர்ம பராக்கிரமபாகு முடிசூடிக் கொண்ட கி. பி. 1505ல் ஆகும்.

அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தைச் சங்கிலியனின் தந்தையான பரராஜ சேகரன் ஆண்டுவந்தான். போர்த்துக்கீசர் இலங்கைத்தீவின் தென்கரையில் காலடிவைத்த நிகழ்ச்சி முழுத்தீவின் சரித்திரத்தையுமே மாற்றியமைக்கப் போகிறதென யார்தான் நினைத்தார்கள்.

## துறைக்காவலரின்

## ஆச்சரியம்

தீவின் தென்கரையில் ஒதுங்கிய லோறன்சோவையும் அவனது குழுவினரையும் கண்ட துறைக்காவலர் அந்தவெள்ளை நிறத்தினராய் இருப்பது கண்டு பிரமித்துப்போயினர். அதுவரை வெள்ளை நிற மனிதரைக் கண்டிராத துறைமுகக் காவலர், அவர்களை வேடிக்கை பார்க்கவும் செய்தனர். அந்த வெள்ளையர் அருந்திய ரொட்டியை (பாண்) வெண்ணிறக் கற்களென்றும், அவர்கள் பருகிய திராட்சை ரசத்தை உதிரபானமென்றும் கற்பனைபண்ணிய துறைக்காவலர் பெரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். அந்த அந்நியரின் நடையுடை பாவனைகள் யாவும் துறைக்காவலருக்குப் புதிராகவிருந்தன. அவர்களின் துப்பாக்கி ஆயுதமும் துறைக்காவலருக்குக் கிலியை உண்டுபண்ணியதால் தாம் என்ன செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

## இலங்கைத்தீவில் கேட்ட முதல்வெடி

தாம் கரையொதுங்கியதும் கரையிலுள்ளவர்கள் தமக்கெதிராகக் கிளம்பக்கூடாதவாறு பயம்கொள்ளச் செய்யவேண்டுமென்ற மனப்பான்மையுடன் லோறன்சோவும் குழுவினரும் துப்பாக்கிவெடிகளைத் தீர்த்து பீதியுண்டுபண்ணினதால் மன்னனுக்குத் திருமுகமனுப்பிய துறைக்காவலர் அந்நியரின் துப்பாக்கி ஆயுதம்பற்றியும் விசேடமாகக் குறிப்பிட்டனர்.

கோட்டை இராச்சியமன்னன் தர்மபராக்கிரமபாகுவிற்குத் துறைக்காவலர் அனுப்பிய திருமுகமாவது:

''சுத்த வெண்மையும் மிக்க அழகும்கொண்ட நவீன சாதியார் இன்று நம் துறையில் கால்வைத்தனர். இரும்பாலான தொப்பியும் பாதரட்சைகளும் உடையவர்களாக ஓயாது ஓடியுலாவித் திரிகிறார்கள். இவர்கள் உண்பது வெண்ணிறக்கற்கள், குடிப்பது இரத்தபானம். ஒரு மீனுக்கு இரண்டு அல்லது மூன்று 'பொடி' பெருமான பொன், வெள்ளி நாணயங்களைக் கொடுத்து வாங்குவார்கள். இவர்களின் துப்பாக்கிகள் வெடிபோலும் முழங்கிப் பொழியும் குண்டுகளோ காதவழி தூரம் சென்று கல்மதிலையும் உடைத்து இரும்பரணையும் தகர்த்தெறியத் தக்கவை". என்பதாகும்.

## மன்னனின்

## மந்திராலோசனை

துறைக்காவலரின் திருமுகம் கண்டு அச்சமும் ஆச்சரியமும் அடைந்த மன்னன் தர்ம பராக்கிரமபாகு உடனடியாகத் தன் மந்திராலோசனைச் சபையைக் கூட்டி இந்த அந்நியரோடு சமர் புரிவதா சமாதானப்படுத்தலா புத்தியென ஆலோசனை நடத்தினான். அவ்வமயம் சக்கரன் என்ற இரா

(16-ம் பக்கம் பார்க்க)

★ ம. க. அ. அந்தனிசில்

## தமிழரசாருக்கு கொழும்பு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக்கட்சிக்கோ அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

## தமிழரசுக்கு

## ஏற்பட்ட மவுசு

இந்நிலையில் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உறவை ஐக்கியதேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் நாடின. உறவுக்குப் பேரம்பேசப்பட்டது.

இரண்டு பெரிய கட்சிகளின் தலைவர்களும் அவசர அவசரமாகத் தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தினர். காலதாமதத்துக்கு இடமில்லை.

இந்நிலையில் ஐக்கிய, சிறீக் கட்சிக்கு ஆதரவு கொடுக்கத் தமிழரசுக்கட்சியின் தலைமைப் பீடம் தீர்மானித்தது. எழுத்து மூலம் இந்த ஆதரவுக்கு உறுதிசெய்து தம்மிடம் கையளிக்கவேண்டுமென்று கவர்னர் ஜெனரல் கூறிவிட்டார். அவசர அவசரமாகக் கடிதம் எழுதி உறுதிசெய்து தமிழரசுக்கட்சித் தலைவர்கள் கையொப்பமிட்டுக் கொடுக்க அது கவர்னர் ஜெனரலிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

இதன்பின் ஆட்சி அமைக்கும்படி ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயகாவை கவர்னர் ஜெனரல் கேட்டார். புதிய அமைச்சரவையை திரு டட்லி அமைத்தார்.

## மூன்று மாத

## ஆட்சி

1960ம் ஆண்டு மார்ச்மாதம் திரு டட்லிசேனநாயகாவை பிரதமராகக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவியேற்றது. மூன்று மாதங்கள் அது ஆட்சிபீடத்திலிருந்தது. ஆட்சி அமைப்பதற்குக் கைகொடுத்த தமிழரசுக்கட்சியினர் தங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி அரசை வற்புறுத்தி வந்தனர். தங்கள் கோரிக்கையில் ஓர் அம்சம்கூட மூன்று மாத காலத்திலும் நிறைவேற்றப்படாததைக்கண்ட தமிழரசுக்கட்சியினர் ஐக்கியதேசிய அரசுக்குக் கொடுத்த ஆதரவை விலக்கிக்கொள்வதெனத் தீர்மானித்தனர். உறவு முறிந்தது!

அரசாங்கம் கவிழ்ந்தது!

ஐக்கியதேசியக்கட்சி அரசு கவிழ்ந்ததும் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அரசமைக்கும்படி கவர்னர் ஜெனரல் கேட்கக்கூடுமென்றும் அப்படிக் கேட்கும்பட்சத்தில் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சிக்கு ஆதரவுகொடுக்கலாமென்று தமிழ்அரசுக்கட்சியினர் நினைத்திருக்கக்கூடும்.

ஆனால் அரசு கவிழ்ந்ததும் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத்தேர்தலை நடத்த வேண்டுமென்று பிரதமர் டட்லி கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறினார்.

## மீண்டும்

## பொதுத்தேர்தல்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1960ம் ஆண்டு ஜூலை மாதம் மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெற்றது. (தொடரும்)


CHARTERED LICENTIATE COURSE

ஆகஸ்ட் 1984 பரீட்சை

ஆரம்பம்:- 21-03-1984

கட்டணம்: ரூபா 850/-

கன்ரேபியா கல்வி நிறுவனம்

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24201



SHABRA

UNICO FINANCE LTD.

(இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

நம்பிக்கை நாணயம் பாதுகாப்பு

உங்கள் முதலீட்டிற்கு இவை உத்தரவாதம். நாம். நகரில் அதிகூடிய வட்டிவழங்கும் ஒரே நிறுவனம்

'SHABRA'

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல: 23076

61, நியூ புள்ளர் வீதி,
கொழும்பு—4.
தொ. பே. இல: 589310

உழைக்கும்போதே சேமிக்கும்திட்டம்


மாதாந்தம் 36 மாத காலமுடிவில் (தொடர் வட்டியுடன்)

| | |
|---|---|
| 100/- | 4,727/60 |
| 200/- | 9,455/19 |
| 300/- | 14,182/79 |
| 400/- | 18,910/38 |
| 500/- | 23,637/93 |

மாதாந்தம் 500/க்கு மேற்பட்ட சேமிப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கட்கு "ஷப்ரா"

இலகுவான தவணைமுறையில்



துவிச்சக்கரவண்டி, மோட்டார்வண்டி பெற்றோல், டீசல் வாகனங்கள், மின்சார சமையல் உபகரணங்கள் வீட்டுத்தளபாடங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

றேடியன் பிறடக்ஸ் பிரைவேட் லிமிட்டெட். றேடியன் பிறடக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்.

# றேடியன்

## பிறடக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.

## RADIAN PRODUCTS (PRIVATE) LIMITED

RP

### ஆரம்பம்: சித்திரை 1984

R P

றேடியனின் தீர்மானங்கள் தீர்க்கமான சாத்திய அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டவை. இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளமுன் றேடியன், சந்தை வளங்கள் ஏற்றுமதி, இறக்குமதி மூலமான உண்மை வருமானமீறுக அனைத்தையும் அடக்கிய சாத்திய ஆய்வொன்றை நடத்தினர். இவை அனைத்தையும் ஆய்ந்தறிந்த பின்னரே இத்திட்டம் ஏற்கப்பட்டது. இத்திட்டத்தை முன் வைத்தே கைத்தொழில் விஞ்ஞான அமைச்சிடமிருந்து றேடியன் உற்பத்திக்கு 1981-ம் ஆண்டு அனுமதி பெற்றது.

வட இலங்கையில் முதன் முதலாக ஏற்றுமதித் தரத்திற்கு, ஏற்றுமதிக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள றேடியன் ரப்பர் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலையினரால் விற்கப்படவிருக்கும் பங்கு விபரங்களும், தொழில் விபரங்களும் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம்: | அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ரூபா | 3,00,00,000.00 |
| | சாதாரண 10 ரூபா பங்குகள் | ரூபா | 77,00,000.00 |
| | வழங்கப்பட்டுள்ள பங்கு மூலதனம் | ரூபா | 67,00,000.00 |
| | வழங்கப்படவுள்ள 10 ரூபா பங்குகள் | ரூபா | 10,00,000.00 |

பணிப்பாளர் சபை

P. நவரத்தினராஜா Q. C. —தலைவர்
அலெக்ஸாண்டர் றோட்,
கொழும்பு.

S. சோமசுந்தரம் —பிரதம பணிப்பாளர்
44, சோமசுந்தரம் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

S. செகராஜசிங்கம் —பணிப்பாளர்
No. 1 கொத்தலாவல ரெறேஸ்,
கொழும்பு-4.

C. கந்தப்பா —பணிப்பாளர்
தேயிலை ஆராய்ச்சி நிலையம்,
கண்டி.

E. M. D. மேதர் —பணிப்பாளர் (தொழில் நுட்ப ஆலோசகர்)
லோற்றன் றோட்,
மானிப்பாய்.

N. சிறீஸ்கந்தராஜா —பணிப்பாளர்
"கலையகம்",
சரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

**No. 1. Kotalawela Terrace, Colombo-4.**
TELEPHONE: 588550.

நிறுவனத்தின் வங்கி
இலங்கை வங்கி, I. O. B. (INDIA)

ஊக்குவிப்பாளர்கள், ஒத்துழைப்பாளர்கள்:
அம்பாடி லிமிட்டெட் கொம்பனி
இராஜாஜி றோட், சென்னை, இந்தியா.

ஆலோசகர்கள்:
C. F. D. LIMITED, New Market Building, Jaffna.
COLOMBO 52/1, Rajasingha Road, Colombo-6.

தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கும் இடம்: கைதடி, நுணாவில், சாவகச்சேரி.

உற்பத்தி விபரங்கள்:

டயர், பொருத்தில்லாத (Seamless) ரியூப்புகள், டயர் புனரமைத்தல், மோட்டார் வாகனங்களுக்குரிய சகலவிதமான ரப்பர் உதிரிப்பாகங்கள், வீட்டுப்பாவனைக்குரிய சகலவிதமான ரப்பராலான பொருட்கள், அரிசி ஆலை ரப்பர், உருளைகள், சாதாரண வர்த்தக ரப்பர் பொருட்கள், ரப்பர் பாதணிகள், கால் தடைப்பிகள், ரப்பர் பாய்கள், ரப்பர் குழாய்கள், ரப்பர் இழுவைகள், மின்சார பாவனைக்குரிய ரப்பர் உதிரிப்பாகங்கள் இவைவிட ரப்பர் சார்ந்த பிளாஸ்ரிக் பொருட்களும் உற்பத்திசெய்யப்படும்.

வரி அனுகூலங்கள்: ஏற்றுமதி வரிச்சலுகை (மொத்த உற்பத்தியின் 50% முன்னேற்பாட்டின்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது)

★ முதல் வருடத்தில் ஏற்றுமதிசெய்யப்படவிருக்கும் ரியூப்புகள் 3 லட்சம். ரயர்கள் 3 லட்சம்.

★ இரண்டாம் வருட இலக்கு ரியூப்புகள் 4 லட்சம். ரயர்கள் 4 லட்சம்.

★ மூன்றாம் வருட இலக்கு ரியூப்புகள் 6 லட்சம். ரயர்கள் 6 லட்சம்.

மேலதிகமாக பங்குகள் வாங்குபவர் இயக்குநர் சபையில் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். றேடியன் தொழிற்சாலைக்கு நவீன யந்திரங்கள் வரவழைக்கப்பட்டு, பொருத்தும் வேலைகள் யாவும் திறமைவாய்ந்த வெளிநாட்டு தொழில் நுட்ப வல்லுனர்களின் உதவியுடன் பூர்த்திசெய்யப்படும் நிலையில் இருக்கிறது.

எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்புத் தினத்தன்று பாவனையாளர்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு றேடியன் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

முழுப்பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொலைபேசி இலக்கம்: ....................
வாங்க இருக்கும் பங்கின் தொகை: ............

## றேடியன் ஓர் நிலையான சிறந்த முதலீடு

றேடியன் பங்கு விற்பனை மிகக்குறுகிய காலத்தில் நிறுத்தப்படும். சொற்ப பங்குகளே விற்பனைக்குண்டு.

உங்கள் பங்களிப்புக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

பங்கு வாங்குவதற்கு விரும்புவோர் இம் மாதம் 28-ந் திகதிக்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
S. சோமசுந்தரம்
44, சோமசுந்தரம் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

# டிங்கிரி

மறக்கமுடியாத கலைஞர்



நமது கலைஞர் என்று தலை நிமிர்த்திச் சொல்லக்கூடியவராக இருந்தவர் டிங்கிரி!

சனகரத்தினம் அவர் இயற் பெயர்; டிங்கிரி என்றுதான் அவரை எல்லாருக்கும் தெரியும்.

மூன்றாண்டுகளாகிவிட்டன. ரசிகர்கள் உள்ளங்கள் இன்னும் அவரை மறக்கவில்லை.

மூவாயிரத்து ஐந்நூறு மேடைகளில் டிங்கிரி நடித்திருக்கிறார்; பெரும்பான்மையானவை அவரது நடிப்பிலும், சிந்திக்கவைத்த கருத்துக்களாலும் மக்களை சிரிக்கவைத்திருக்கின்றன.

வானொலியிலும் அவர் சிரிப்பு வெடிகளைக் கேட்டு நம்மை மறந்திருக்கிறோம்!

ஜெய்சங்கர், நாகேஷ் போன்ற தென்னிந்திய நட்சத்திரங்கள் நடித்த, 'பிரைட்டன்' அரியரத்தினத்தால் இலங்கையில் எடுக்கப்பட்ட 'ரத்தத்தின் ரத்தமே!' படத்தில் 'டிங்கிரி'யின் நகைச்சுவை நடிப்பு நாகேஷுக்கு ஈடு கொடுத்தது! 'வாடைக்காற்று, தெய்வம் தந்த வீடு' ஆகிய இலங்கைப்படங்களிலும் இவர் நடித்தார்!

நம்நாட்டுக்குப் புகழ்சேர்த்துத் தரும் சில தமிழ்க் கலைஞர்களோடு இவரும் இன்று நிலைத்திருப்பார். ஆனால் நாற்பத்தைந்துவயதிலேயே நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் டிங்கிரி!

-ஈ. கே. ஆர்.

## தோட்டக்காணி நாட்டுக்கணிகலம்

வீட்டுக்கு அணிகலம் பசு; நாட்டுக்கு அணி தோட்டம் என்று நாம்புனைந்துசொன்னால் பலரும் இதை ஏற்றுக்கொள்வார்கள். பலருக்கு வீட்டோடு தோட்டக்காணி அமைந்துள்ளது. இது பெரிய வாய்ப்பும் வரப்பிரசாதமுமாகும். விஞ்ஞான அபிவிருத்தியோடு விவசாய அபிவிருத்தியும் மகோன்னத அணிநடை நடக்கும் வேளையில், எங்கள் வறண்ட நிலமெங்கும் முன்னரிலும் பார்க்க பேரதிக விளைவுண்டாவதோடு புதிய பயிர்கள் பல, நாம் வியப்படையும் வகையில் உண்டாகிப் பயன்தருகின்றன.

இன்னும், பருவகாலந்தோறும் விலைப் பயிர் என்பன விதம்விதமாகச் சுற்றுவட்டமாக உண்டாகி நிலத்துக்கு மேலும் வளந்தருவதோடு எமக்கு வருவாயும் தருகின்றன. வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு கத்தரி, வெண்டி, தக்காளி என்பனவோடு பப்பாசி, கோவா, பீட் முதலியனவும் பயன்தருகின்றன. தோட்ட நிலம், பொன் கொழிக்கும் சொர்ணபூமி. வேலி வரம்புகளிலும் விதம் விதமான பயிர்கள் தரும் நிலத்தில் விசாலமான வீடுகள் அமைத்தல் புத்திசாலித்தனமாகாது. ஒடுங்கிய அமைப்பில் உயர்ந்த மாடிவீடமைத்து நிலப்பரப்பை மிச்சம் பிடித்தல் விவேகமாகும். நாட்டுப்புறமெங்கும் தோட்டங்களும் குளங்களும் நிறைந்துவருதல் நன்றன்று.

மில்க்வைற்

# உலகின் முதல் நவீனம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்க்கு அறிவிப்பர். மூன்று அல்லது நான்கு நாட்கள் பூப்படைந்த பெண்வீட்டுக் கருமங்களிலே பங்குகொள்ளாது ஒதுங்கியிருப்பாள். ஐந்தாம் நாள் நீராடிப்புத்தாடை புனைவாள் அன்று குடும்பநிலையில் இனிய பொங்கலுடன் விசேட விருந்து நடைபெறும். தமிழரிடையேயும் இவ்வழக்கம் நடைமுறையில் உண்டு. பழந் தமிழர் வாழ்வியலில் பெண் பூப்படைதல் மங்கள நிகழ்ச்சியாகக் கருதப்பட்டுள்ளது.

பெண் தாயாகிய போது அவளையும் குழந்தையையும் தனியாகவைத்துப் பராமரிக்கும் வழக்கம் யப்பானியரிடையேயுண்டு. அவ்வாறு தாயும் சேயும் இருக்கும் தனியிடத்தை ''உபுயா'' என அழைத்தனர். 31 நாட்கள் தாயும் சேயும் அங்கே வைத்துப் பராமரிக்கப்படுவர். 31ம் நாள் இருவரையும் புனிதப்படுத்தி (சில சடங்குகள்) வீட்டிற் சேர்ப்பர். 33 நாட்களின் பின்னர் குழந்தையை வழிபாட்டிடத்திற்கு எடுத்துச் செல்வர் இதனை .மியாம இறி, [கோவிலுக்குப் போதல்] என அழைப்பர். இந் நிகழ்ச்சி மூலம் சமூக நிலையில் தாய்மை உணர்த்தப்பட்டது. பெண்ணின் இவ்விருவளர்ச்சிநிலையிலும்செய்யப்படும் நடைமுறைகள் உலகப் பொதுவானவையாக இருப்பினும் இவ்விருவளர்ச்சிநிலைகளின் போதும் பெண் ஒதுங்கியிருக்க வேண்டியவள் என்பதைத் தமிழரும் யப்பானியரும் தீவிரமாக நடைமுறைப்படுத்தியுள்ளனர். இவ்வாறு பெண்களைச் சொந்த வீட்டிலே ஒதுக்கிவைப்பது அடிமைத்தனமெனப் பலர் வாதிடுகின்றனர். அவர்கள் இந்நடைமுறையின் அடிப்படையிலுள்ள சமூக நிலைப்பாட்டை உணராதவர்களாவர் பூப்புநிலையும் தாய்மை நிலையும் பெண்மையின் இறைமையான ஆற்றலை மற்றோர்க்கு உணர்த்தும் நிகழ்ச்சிகளாகும், மனித விருத்தியில் வளர்ச்சிப்பெண்மை பெரும் உதவி செய்கிறது. பூப்படைந்த பெண்ணே தாய்மையடையத் தகுதியானவள். எனவே இவ்விரு நிலைகளிலும் அவளை நன்கு பாதுகாக்கவேண்டியது வீட்டிலுள்ள ஏனையவர்களது முக்கியகடமையாகும். அக்கடமை வெறும் குடும்ப உறவுக்கான கடமையாக மட்டுமன்றி சமூக உறவுக்கான கடமையும் ஆகும். ஆண் பெண் மண உறவினால் ஏற்படும் குடும்ப உறவுகளை மேலும் வளர்க்கப் பெண்மையின் இவ்விரு வளர்ச்சி நிலைகளும் முக்கியமானவை. எனவே அவற்றைத் தமிழரும் யப்பானியரும் முக்கிய நிகழ்ச்சிகளாகத் தமது வாழ்வியலிலே கொண்டு பல நடைமுறைகளையும் வகுத்துள்ளனர்.

## முரசாக்கியும்

## புனிதவதியும்

சமூக நிலையிலே பெண்கள் ஆற்றும் பணியால் பிறநாட்டவர் பெருமைகள் பெறுவர் என்பதைப் பலபெண்கள் முற்காலங்களிலே உணர்த்தியுள்ளனர். யப்பானில் வாழ்ந்த முரசாக்கியின் பணியும் தமிழ் நாட்டிலே வாழ்ந்த புனிதவதியின் பணியும் இத்தவகையிலே சிறந்து நிற்கின்றன. யப்பானிய பழைய இலக்கியங்களில் 11ம் நூற்றாண்டில் 'முரசாகிநொசிகிபு' வால் எழுதப்பட்ட 'கெஞ்சிமொனகதாரி' யும் ஒன்றாகும். கியோதோ அரண்மனையில் வாழ்ந்த முரசாகி தான் வாழ்ந்த சமூகச் சூழலை எழுத்திலே பொறித்து வைத்துள்ளார். அதுவே யப்பானிய முதல் நவீனமாக மட்டுமன்றி உலகிலேயே தோன்றிய முதல் நவீனமாகும். தான் வாழ்ந்த சூழலையும் மக்கள் வாழ்வினையும் எழுத்து முரசாகி எண்ணக்கொண்டமையால் அக்கால சமூக நிலையையும் நடைமுறைகளையும் வெகு அழகாக வடித்துக் காணித்துள்ளாரென்பதை இன்று அந்நூலைப் படிக்கும்போது உணர முடிகின்றது. பழைய நடைமுறைகளையும் புதிதாக வந்துசேர்ந்த நடைமுறைகளையும் சமூக நிலையிலே தெளிவாகக் காணமுடிகின்றது. வழிபாட்டு நிலையிலே பழைய சிந்தோ வழிபாட்டுடன் புதிதாக வந்துசேர்ந்த புத்தசமய நடைமுறைகளையும் இனங்காண முடிகின்றது. முரசாக்கியின் எழுத்தின் வலிமையையும் ஆழ்ந்த சமூக நோக்கையும் உணராதவர் இவர் அந்நவீனத்தின் சில அத்தியாயங்கள் வேறு எழுத்தாளரால் எழுதப்பட்டிருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர், ஆனால் மொழிநடை, பண்பாட்டு நடைமுறை, சமூகநிலை என்பவற்றின் தன்மைகள் அந்நூலிலே குறிப்பிடப்பட்டிருக்கும் அமைப்பை ஆராய்ந்த மொழி இலக்கிய வல்லுநர்கள் நூல்முழுவதையும் முரசாக்கியே எழுதியுள்ளார் எனக் கூறுகின்றனர், பேராசிரியர் ககமுஒனோ தன் ஆய்வுத்தரவுகள் மூலம் இக்கருத்தை நிறுவி நூலொன்றை எழுதியுள்ளார்.

வாசகர்கள் மனத்தைக் கவரவேண்டும் என்ற நோக்கின் முன்வையாமல் சமூகத்திலே மனித வாழ்வின் இருந்ததைவற்றை வெளிப்படுத்துவதையே முரசாக்கி தன் எழுத்தின் நோக்கமாக்கியுள்ளார். சிறப்பாகச் சமூகவாழ்வில் பெண்களின் நாளாந்த வாழ்வின் நடைமுறைகளையும், சூழலையும், உணர்வுகளையும் குற்றங்களையும், மனப்பலவீனங்களையும் விரிவாக எழுதியுள்ளார். 'கியோதோ' நகர வாழ்க்கையை நன்கு விளக்கியுள்ளார் இதனால் முரசாக்கியின் பணி நாட்டுக்கான இலக்கியப்பணியாக உயர்ந்த நிலை பெற்றுள்ளது. தனது எழுத்துப்பணியைக் கவிதை வடிவிலே மட்டும் அமைக்காமல் புதிய வடிவிலே அமைத்து எழுத்துப்பணி புரிகின்ற அனைவர்க்குமே புதிய வழியைக் காட்டிய பெண்ணாகச் சிறப்புப் பெற்றுள்ளார். கவிதைமரபு வழியிலே சென்ற இலக்கியத்தின் வசனத்துடனும் இணைத்துவிட்டார். யப்பானியப் பெண்களில் மட்டுமின்றி உலகத்துப் பெண்களிலேயே இதனால் முரசாகி உயர்ந்துநிற்கிறார். முரசாக்கியின் எழுத்துப் பணியினால் யப்பானியர் பெருமைபெற்றுள்ளனர்.

'கெஞ்சிமொனகதாரி'யோடு

(16-ம் பக்கம் பார்க்க)

# இலக்கிய உலகு...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுதும் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உண்மைத் தொடர்கதை தமிழ் நாட்டில் ஏராளமான வாசகர்களால் விரும்பிப் படிக்கப்படுகிறது. அவர் எழுத ஆரம்பித்தபின்னர், 'அதன் விற்பனையும் பல மடங்கு இருக்கும் அளவுக்கு அதிகரித்துள்ளது.

## வித்தகராக வாழ்ந்த வித்துவான்!

தமிழுக்கு வித்தகராக இருந்த வித்துவானை இழந்துவிட்டோம்! தமிழை உயிராக நேசித்தவர்; அதுவே தனது மூச்சாகவும் வாழ்ந்தவர்! அந்த மூச்சுஇன்று நின்றுவிட்டாலும் இளைய தலைமுறையின் உணர்வுகளை மதித்த தமிழறிஞர் சி. ஆறுமுகத்தின் எழுத்துக்களை எல்லாம் நூலாக்கமுடியாவிட்டாலும், பொறுக்கியெடுத்த சில முத்துக்களையாவது புத்தகங்களையாவது வெளியிடத் தமிழின்மீது பற்றுள்ளவர்கள் முன்வரவேண்டும்! இதுவே இந்தப்பூமியில் வித்துவான் நீடுழி வாழ நாம் செய்யும் மகத்தான பணி!

## மாற்று

கிளைகளெல்லாம் விலை போகும் விளம்பரமாய் ஆனால் மலைபோலவுள்ள மக்களிடர் நீக்க உதவவேண்டும்'' என்ற குறிப்போடு வெளிந்திருக்கும் மாற்று காலாண்டிதழ் கஷ்டங்களோடு வெளிவந்துள்ளபோதிலும், காத்திரமான கருத்துக்களைத் தாங்கி வந்துள்ளது.

''மாற்று! மாற்று!

இது எங்கள் கட்டளையல்ல. கட்டளைகள் இடுவதற்கு நாங்கள் எசமானர்களும் அல்ல...

மாற்றப்பட வேண்டியவைகள்.

இந்த மாநிலத்தில் ஏராளம்! ஏராளம்!

-'மாற்று' வெளிவரும் நோக்கத்தைப் புதுக்கவிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

## ''ரூபவாஹினியில் தமிழ் டைட்டில்கள்''

ரூபவாஹினியில் தமிழ் டைட்டில்கள் மிக அழகாக இப்போது வந்துகொண்டிருக்கின்றன. இவற்றை எழுதுபவர் 'கலைக்கமல்' என்ற ஜனாப் இர்ஷாத் கமால்தீன், 'மழையில்லா மேகத்தை' எழுதிய கவிஞர்தான் இந்த டைட்டில்களை எழுதுபவர்!


இதுவே கடைசி வாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 9-00
கமல் — ஸ்ரீதேவி — நிலா
மீண்டும்கோகிலா
(சினிமா கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
தாயைக் காத்த தனயன்

ராணி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-மாதவி
டிக் டிக் டிக்
(சினிமாகலர்)

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30.
20th Century fox presents
Fredric Forrest in
THE ROSE
[Adults olny]

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
17—19 மட்டும்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
வந்தாளே மகராசி
(புதிய பிரதி)

கடைசி சிலதினங்கள்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
பயணங்கள் முடிவதில்லை
- வண்ணம் -
Next:
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar Jaikishan

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-00, 4-30, 7-00, 9-30 p. m.
Jennifer O Neil in
SCANNERS
Their thoughts can kill
Strictly For Adults
(சில காட்சிகள் அதிர்ச்சியும் மனித இரத்தமும் சம்பந்தப்பட்டவையால் முன்கூட்டியே எச்சரிக்கிறோம்)
From 21-3-84
Charlton Heston in
MOUNTAIN MEN
(Adults Only)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் - ரூபா
ஒரு தலைராகம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-15, 4-30, 7-00, 9-15
Harrison Ford
Laren Allen in
RAIDERS OF THE LOST ARK
(more suitable for adults)
(Color)
1981-ம் ஆண்டு சிறந்த திரைப்பட விழாவில் முதல் திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டது. See it before it's too late

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-00
ஜெமினி - சரோஜாதேவி
கல்யாண பரிசு

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Michael york- David Niven
A MAN CALLED INTREPID


## ஓராண்டு நிறை நினைவு

ஏ. எம் அந்தோனிப்பிள்ளை



ஆண்டொன்று சென்றாலும் அநுதினமும் உம் நினைவே உம் அறிவுரையே நீங்காது எம் நெஞ்சை விட்டு "அகலக் கால் வையாதீர். தொட்டதெல்லாம் துலக்கம் விட்டதெல்லாம் சுகம்" 'அப்பனே சற்குருவே, இதுவே தாரக மந்திரமென இடைவிடாது சொல்லி உம் மனைவி மக்களையும் குரு பக்தி கொள்ளச் செய்து இறைவனடி சேர்ந்தீரே!

உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''அடைக்கலம்'',
சரம்பெலன், வர்த்தகத்துறை. 1435


சீமெந்து விநியோகம்
இலங்கை சீமெந்து லிமிட்டெட்
(Lanka Cement Ltd)
விநியோகஸ்தர்களாக
சாவகச்சேரி தொகுதிக்கு
நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
பாவனையாளர்கள் எம்மிடம் உங்களுக்குத் தேவையான சீமெந்தை கட்டுப்பாட்டு விலைக்கு
ரூபா 110/- (50 கிலோ பக்கட்)
வீதம் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோக வசதிகளும் செய்துதரப்படும்.
சாவகச்சேரி வட்டார சில்லறை வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு.
M. M. சுல்தான் அப்துல் காதர் அன் பிரதர்
வியாபாரிகளும், விநியோகஸ்தர்களும் கட்டிடப்பொருள் விநியோகஸ்தர்களும் போக்குவரத்து சேவையாளரும்
கண்டி வீதி - சாவகச்சேரி
தொலைபேசி இல. 298
கிளை:
31, பழைய சோனக தெரு,
கொழும்பு-12
தொலைபேசி இல: 549963
[1436]

# "இடமாற்றப் பட்டியல் மீண்டும் ஆராயப்படும்"

## ஆசிரியர் காங்கிரஸ் சிவஞானம் கூறுகிறார்

யாழ்ப்பாணம்

ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியலில் நுவரெலியாவில் இருந்து மாத்திரம் 87 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர். ஆனால் உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களில் பெண்கள் பலர் விண்ணப்பித்திருந்தும் அவர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை" என்று இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. எம்.எஸ். செல்லச்சாமி கல்வி அமைச்சரைச் சந்தித்து. இப்படியான இடமாற்றத்திலும் மலைநாட்டுப் பாடசாலைகள் மூடவேண்டியேற்படும் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து இடமாற்றப் பட்டியல் மீண்டும் ஆராயப்படவுள்ளது என்றார்.

"பட்டியலில் இடைநிறுத்தம் செய்யப்பட்டோரும், பாதிக்கப்பட்டும் பட்டியலில் இடம் பெறுவோரும் மேன்முறைப் பாட்டை ஆங்கிலத்தில் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்துவிட்டு பிரதியை இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் உறுதிப்படுத்தும் இணைப்புப் பிரதிகளுடன் புகைப்படப் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மா)

# "பழைய இடங்களுக்கு திரும்ப வேண்டாம்!"

## மகாசிவம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

"கல்வியமைச்சரும், செயலாளரும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதில் சாதகமாக இருந்தபோதிலும் சில வெளிமாவட்டங்களிலுள்ள சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. திரும்பவும் இடமாற்றம் சம்பந்தமாக சங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்" என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த.மகாசிவம் உறுதியளித்துள்ளார்.

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற, பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் மத்தியில் பேசுகையில் திரு. மகாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க இணைச்செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.


# மரண அறிவித்தல்

## பொன்னையா பத்தர் கந்தையா பத்தர்

(வாய்க்கால் கந்தையா பத்தர்)

16-03-84 அன்று இறைவனடி சேர்ந்த பொன்னையா பத்தர் கந்தையா பத்தரின் ஈமைக்கிரியைகள் 18-03-84 ஞாயிறு காலை (இன்று) 10 மணியளவில் 671/1, கே. கே. எஸ். வீதி (பூநாறிமரத்தடி) யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

நா. கிருஷ்ணசாமி பத்தர்
க. செல்வரத்தின பத்தர்

1448



# மரண அறிவித்தல்

## திருமதி. க. முத்துவேலு

திருமதி. க முத்துவேலு வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற திரு சி. முத்துவேலுவின் மனைவியும், காலஞ்சென்ற திரு. லோகேஸ்வரன், திருமதி. தங்கமணி விஜயரத்தினம், காலஞ்சென்ற திரு விஜயரத்தினம், திருமதி. கிருபமணி ஐயாத்துரை, திரு. செல்வரட்ணம், திரு. நகுலேஸ்வரன், திருமதி தரைசிங்கம், திரு. மகாதேவா, திரு. ஞானசேகரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர். அன்னாரது மரணச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"ரம்பயா இல்லம்" கண்டி வீதி—வவுனியா.

தகவல்: திருமதி. விஜயரத்தினம் 1451



# மரண அறிவித்தல்

## திருமதி நாகபூஷணிதேவி மாணிக்கராஜா

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியைச் சேர்ந்த மாணிக்கராஜா (மின்சார பொறியியலாளர், சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும், தம்பிப்பிள்ளை, தங்கச்சியம்மா ஆகியோரின் அன்பு மகளும் நாகராஜா (சவூதி அரேபியா) அவர்களின் அருமைச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கோக்குவில் மயானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (18-3-84) மாலை 3 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா. மாணிக்கராஜா.

40, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (1460)


கிரிக்கெட் டெஸ்ட்

# இலங்கை 174 நியூ. 5-164

(கொழும்பு)

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே கொழும்பு எஸ். எஸ். ஸி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் 2-ம் நாள் ஆட்ட இறுதியில் நியூஸிலாந்து 5 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது. விஜேதுங்க ஜோன் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இலங்கை முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. (சூ)

# லயன்ஸ் ஆளுநர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் கலாநிதி பாமி இஸ்மாயில் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் லயன்ஸ கழகத்தின் ஆதரவில் நடைபெறும் 'செஷயர்' இல்லத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் ஆளுநர் யாழ். பொது நூலகத்தில் லயன்ஸ் கழகத்தின் பொறுப்பில் நடைபெற்றுவரும் குழந்தைகள் பிரிவின் கட்டுமான வேலைகளையும் பார்வையிடுவார். இன்று பிற்பகல் கோப்பாயில் இடம்பெறும் லயன்ஸ் கழகத் திறப்புவிழாவிலும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.

## உலகின்....

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

'மகுருசோஜி' என்னும் முராசாகியால் எழுதப்பட்ட நாட்குறிப்புத் தொகுப்பும் அக்கால யப்பானியரது சமூகநிலைபற்றி விளக்கிக் கூறுகின்றது 'கெஞ்சி மொனகதாரி' ஆங்கிலத்தில் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையால் இன்று அதனை யாவரும் படிக்க வாய்ப்பேற்பட்டுள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்பை ஆதாரமாகக்கொண்டு தமிழிலும் அந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(வளரும்)

## குடும்பப் பெண்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உடை, மருத்துவம் போன்ற பொதுச்செலவுகளுக்கு ஒதுக்கப்படும். இதன்படி குறித்த குடும்பத்திற்கு மாதாந்த சராசரிச்செலவு 2 000 ரூபா. இத்தக்கணிப்புகள் குடும்பத்திற்குக் குடும்பம், அங்கத்தவர் எண்ணிக்கை, வாழ்க்கைமுறை என்பவற்றிற்கேற்ப மாறுபடலாம். உண்மையில் உண்மையில் எத்தனை நடுத்தரக் குடும்பங்களுக்கு இச்செலவிற்கேற்ப வருமானம் கிடைக்கிறது? இந்த வருமானம்கூட அத்தியாவசியமான செலவுகளுக்கே போதுமானதாக இருக்கிறது. எனவே அநேகமான குடும்பங்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது தெளிவு. காலம் தப்பிப்பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக உண்டான நஷ்டமொருபுறம் இருக்க இனி ஏற்படும் விலைவாசி ஏற்றம் ஒவ்வொரு குடும்பத்தையும் எந்த நிலைக்குக்கொண்டு போய் விடுமோ தெரியவில்லை, அன்றாட வாழ்க்கைச்செலவையே சமாளிப்பதில் திண்டாட்டமாகஇருக்கும் பொழுது பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் படிப்பையோ, பெண்களின் கல்யாணத்தையோ முடித்து வைப்பதென்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

— அம்பிகா

# இன்று அரங்கேற்றம்



செல்வி வாசுகி இராஜேந்திரம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. வைத்திய நிபுணர் ஜே. ரி. சேவியர் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். செல்வி வாசுகி திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவியாவார்.

# பிரான்ஸில் தமிழ் இளைஞர்க்கு இரு வாரச் சிறை!

(கொழும்பு)

பிரான்ஸ் பிரதேசத்துக்குள் விசா இன்றி பிரவேசித்த ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு பிரான்ஸ் இரண்டு வார சிறைத்தண்டனை விதித்துள்ளதாக அரசாங்க வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இலங்கையிலிருந்து விமானம் ஒன்றின் மூலமாக இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து மேற்கு ஜெர்மனியிலிருந்து பிரான்ஸில் புகுந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியின் பிராங்பேட் நகரிலிருந்து பிரான்ஸின் கிழக்குப் பகுதிக்குள் இவர்கள் சென்றதாகவும் அங்குவைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 15 வருட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்த ஆயுள்வேத மாணவர்களும் கலந்துகொண்டனர்.

ஆரம்பவிழாவினைத் தொடர்ந்து பிரதம நூலகர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சித்த ஆயுள்வேத சம்மேளனத்தின் உறுப்பினர் திரு. இ. பி. இராசையா தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று ஆரம்பிக்கப்பட்ட சித்த ஆயுள்வேத மருத்துவபீடம், யாழ்ப்பாணத்தில் நன்கு செழித்தோங்கச் செய்ய கலவிதமான ஆதரவையும், தமிழ்மக்கள் வழங்க முன்வரல் வேண்டும்" என்றார்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவுக்கும், பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன், பதிவாளர் திரு. வே. ந. சிவராசா ஆகியோரின் சேவைகளுக்காக நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

மற்றும் இக்கூட்டத்தில் ராஜகிரியா சித்த ஆயுள்வேத பீடத்தின் விரிவுரையாளர் டாக்டர் ஸ்ரீகாந்தா அருணாசலம் உட்பட பலர் உரையாற்றினர்.

கைதடி சித்த ஆயுள்வேத பீடத்தின் பொறுப்பாளராகப் பதவியேற்றுள்ள டாக்டர் பவானியும் உரைநிகழ்த்தினார்.

## 50 பேர் மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிற்றூழியர்கள் போன்றோர் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர் இவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லீம்கள்.

முன்னர் வவுனியாவில் கடமையாற்றிவரும் தற்போது இரத்தினபுரியில் சார்ஜன்டாக பணிபுரிபவருமான திரு ரணவீர ஏக்கநாயக்க என்பவரே கடந்த புதன்கிழமை வவுனியா நகரில் வைத்துச் சுடப்பட்டவர். ஒரு வழக்கு விடயமாக அவர் வவுனியாவுக்கு வந்திருந்தார். பலத்த காயங்களுக்குள்ளான அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## வெள்ளையர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பிரதானி எழுந்து "மன்னா, நாம் அவர் திறமையறியாது இவ்விஷயத்தைத் தீர்மானிக்க இயலாதாகையால் நான் அவரவனிடம் நேரில் சென்று காரியத்தை ஊகித்தறிந்து தெரிவிக்குமளவும் பதறுதிருப்பதே புத்திசாதுரியமானது" எனச் சொல்லவே, மன்னனும் வேறு வழியின்றி அதை ஏற்றுக்கொண்டான்.

[அடுத்தவாரம் முடியும்]

## தபக்கால

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக எவ்வளவோ கஷ்டப்படுகின்றான். ஆடம்பர வாழ்வில் தன்னை மறந்து வாழ்கின்றான், செல்வத்தின் அதிபதியாக இருக்கின்றான். தன் கட்டழகு மனைவியுடனும் பிள்ளைகளுடனும், பெற்றோருடனும் நண்பர்களுடனும் உறவாடி மகிழ்ந்து வாழ்கின்றான். இவையனைத்தும் இவ்வுடலுடன் மறைந்து விடுகின்றன.

— செல்வி ஸாமா

## ஜூலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் சில பகுதிகளில் நடக்கும் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து மற்றப் பகுதி மக்கள் ஆத்திரம் கொள்வது இயற்கையே. ஆயினும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நாட்டின் நலனுக்கு நல்லது. பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.."

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu. Telephone: 22389—24126